# பொதுத்தமிழ் - அலகு - V - வாசித்தல் - புரிந்து கொள்ளும் திறன்

## கொடுக்கப்பட்ட பத்தியிலிருந்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல்

**அறிமுகம்:**

- உரைப்பத்தியைப் படித்துப் புரிந்துகொள்ளுதல்,
- அதன் மையக்கருத்தை அறிதல்,
- அதிலுள்ள புதிய சொற்களின் பொருளைக் கண்டறிதல்,
- பத்தியின் தொடர் அமைப்பைத் தெரிந்து கொள்ளுதல்.

**எடுத்துக்காட்டு:**

உடலில் உறுதி கொண்டவரே, உலகில் மகிழ்ச்சி உடையவராவார். உடல் உறுதியற்ற நோயாளருக்கு வாழும் இடமும் செல்வமும் இனிய வாழ்வினைத் தருவதில்லை. சுத்தம் நிறைந்துள்ள எல்லா இடங்களிலும் சுகம் உண்டு. நாள்தோறும் நீங்கள் தூய்மையைப் போற்றிப் பாதுகாத்தால் நீடித்த வாழ்நாளைப் பெறலாம். காலையிலும் மாலையிலும் நடைப்பயிற்சி மேற்கொண்டு நல்ல காற்றைச் சுவாசித்து வருவோரை நோய் அணுகாது அவர் உயிரைக் கவர எமனும் அணுக மாட்டான்.

- கொடுக்கப்பட்டுள்ள பத்தியை முதலில் நன்கு பிழையின்றிப் படித்துப் பார்க்க வேண்டும்.
- அடுத்து எப்படிப்பட்ட வினாக்கள் வினவப்பட்டுள்ளன என்று சிந்தித்து வினாக்களுக்கு விடை எழுதவேண்டும்.

**விளக்கம்:**

**வினா 1: உலகில் மகிழ்ச்சி உடையவர் யார்?**

மேற்கண்ட வினாவிற்குப் பத்தியிலுள்ள **'உலகில் மகிழ்ச்சி உடையவர்'** என்ற தொடர் இடம்பெற்றுள்ள சொற்றொடரைப் படித்துப் பார்க்கவும். அதற்கான விடை அமைந்துள்ள தொடரான, **'உடலின் உறுதி கொண்டவரே உலகில் மகிழ்ச்சி உடையவர்.** 'என்னும் தொடரை விடையாக எழுதவும்.

**வினா 2: சுத்தம் நிறைந்துள்ள எல்லா இடங்களிலும் ------ உண்டு.**

இவ்வினாவிற்கு விடையாகப் பத்தியில் **'சுகம்'** என்ற சொல் இடம்பெற்றுள்ளது.

**வினா 3: இப்பத்தியின் மையக்கருத்தை எழுதுக என்ற வினா கேட்டால், அதற்கு உடலினை உறுதி செய்து, நோயற்ற வாழ்வு வாழ, சுத்தமாக இருக்க வேண்டும் என்று விடை எழுதவேண்டும். மையக்கருத்து என்பது பத்தியில் உள்ள முக்கிய கருத்தை எழுதுவது தான்.**

**வினா 4: தொடர் அமைத்து எழுதுக, என்று வினா கேட்கும்பொழுது, நீண்ட சொற்றொடராக எழுதக் கூடாது. சிறுசிறு தொடர்களாக எழுத வேண்டும். அப்போதுதான், பொருள் புரிந்துபடிக்க முடியும். அதனைப்போன்று சொற்களையும் சிறுசிறு சொற்களாகத்தான் எழுத வேண்டும்.**

**இவ்வாறாக ஒவ்வொரு வினாவையும் நன்கு படித்துப் புரிந்து கொண்டு விடையளிக்க வேண்டும்.**

**செயல்பாடு: 1**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

**"ஏறுதழுவுதல் என்பது தமிழகத்தின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றது. அது மாடு பிடித்தல், மாடு அணைதல், மாடு விடுதல், மஞ்சுவிரட்டு, வேலி மஞ்சுவிரட்டு, எருதுகட்டி, காளைவிரட்டு, ஏறுவிடுதல், சல்லிக்கட்டு எனப்பல பெயர்களில் அழைக்கப்படுகின்றது. சல்லிக்கட்டு பேச்சுவழக்கில் திரிபுற்று, ஜல்லிக்கட்டு என்றாகியது. சல்லி என்பது மாட்டின்கழுத்தில் கட்டப்படுகிறவளையத்தைக் குறிக்கும். புளியங் கொம்பினால் வளையம் செய்து காளையின் கழுத்தில் அணிவிக்கும் வழக்கம் தற்போதும் உள்ளது. அக்காலத்தில் புழங்கிக்கொண்டிருந்த சல்லி நாணயங்களைத் துணியில் முடிந்து மாட்டின் கொம்புகளில் கட்டும் பழக்கமும் இருந்தது. மாட்டைத் தழுவும் வீரருக்கு அந்தப் பணமுடிப்புச் சொந்தமாகும்."**

**வினாக்கள்:**

1. கொடுக்கப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு தொடர் அமைத்து எழுதுக.

- வளையம்
- சல்லி நாணயம்
- மஞ்சுவிரட்டு
- பணமுடிப்பு
- புழங்கிக்கொண்டிருந்த

**விடை:**

**ஏறுதழுவுதல் மஞ்சுவிரட்டு, சல்லிக்கட்டு முதலிய பெயர்களில் அழைக்கப் படுகிறது. சல்லிக்கட்டில் சல்லி என்பது மாட்டின் கழுத்தில் கட்டப்படுகிற வளையத்தைக் குறிக்கிறது. அக்காலத்தில் புழங்கிக் கொண்டிருந்த சல்லி நாணயங்களே மாடு பிடிக்கும் வீரருக்கான பணப்பரிசாகும்.**

**2. சரியா? தவறா? என எழுதுக.**

A. புளியங்கொம்பினால் வளையம் செய்து காளையின் கழுத்தில் அணிவிக்கும் பழக்கம் தற்போதும் உள்ளது.

**விடை**: சரி

B. மாட்டைத் தழுவும் வீரருக்கு அந்தப் பணமுடிப்பு சொந்தமில்லை.

**விடை**: தவறு

**3. ஏறுதழுவுதல் குறித்து உங்களுக்குத் தெரிந்த செய்திகளை ஐந்து வரிகள் எழுதுக.**

- ஏறுதழுவுதல் தமிழர்களின் பண்பாட்டோடு தொடர்புடைய நிகழ்வாகும்.
- ஏறுதழுவுதல் மாட்டுக்கும், மனிதருக்கும் இடையேயான ஓர் உணர்வு பூர்வமான தொடர் நிகழ்வாகும்.
- ஏறுதழுவுதலில் அவிழ்த்து விடப்பட்ட காளைகள் நிலம் அதிர ஓடுவதால் பூமித்தாய் மகிழ்வதாக மக்கள் நம்புகின்றனர்.

**4. கொடுக்கப்பட்டுள்ள பத்திக்கு ஏற்ற தலைப்பு.**

விடை: ஏறுதழுவுதல்

**5. ஏறுதழுவுதலுக்கு வழங்கும் வெவ்வேறு பெயர்களை எழுதுக.**

- மாடுபிடித்தல்
- மாடு அணைதல்
- மாடு விடுதல்
- மஞ்சு விரட்டு
- வேலி மஞ்சுவிரட்டு
- எருதுகட்டி
- காளைவிரட்டு
- ஏறுவிடுதல்
- சல்லிக்கட்டு

**செயல்பாடு: 2**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

பெரியாரின் சிந்தனைகள் தொலைநோக்கு உடையவை; அறிவியல் அடிப்படையில் அமைந்தவை; மனித நேயம் வளர்க்கப் பிறந்தவை. நடைமுறைக்கு ஒவ்வாத கருத்துகளை அவர் எப்பொழுதும் கூறியதில்லை. மேலும், தமது சீர்திருத்தக் கருத்துகளுக்கேற்ப வாழ்ந்து காட்டினார்; தம் வாழ்நாள் முழுவதும் பகுத்தறிவுக் கருத்துக்களைப் பரப்புரை செய்தார்; சமுதாயத்தை மூடப்பழக்கங்களிருந்து மீண்டெழ அரும்பாடுபட்டார். அதற்காகப் பலமுறை சிறை சென்றார். பலரின் கடும் எதிர்ப்புகளைச் சந்தித்தார். இறுதி மூச்சுவரை சமூகச் சீர்திருத்தப் போராளியாகவே வாழ்ந்து மறைந்தார்.

**வினாக்கள்:**

1. **பெரியாரின் சிந்தனைகள் எப்படிப்பட்டவை?**

   விடை: பெரியாரின் சிந்தனைகள் தொலைநோக்கு உடையவை.

2. **தமது சீர்திருத்தக் கருத்துகளுக்கேற்ப வாழ்ந்து காட்டியவர் யார்?**

   விடை: தமது சீர்திருத்தக் கருத்துகளுக்கேற்ப வாழ்ந்து காட்டியவர் பெரியார்.

3. **பெரியார் தம் வாழ்நாள் முழுவதும் பரப்புரை செய்த கருத்துகள் எவை?**

   விடை: பெரியார் தம் வாழ்நாள் முழுவதும் பரப்புரை செய்தது பகுத்தறிவுக் கருத்துக்களைத் தான்.

4. **சமுதாயத்தை மூடப்பழக்கங்களில் இருந்து மீட்க அரும்பாடுபட்டாரா?**

   விடை: ஆம், பெரியார் சமுதாயத்தை மூடப்பழக்கங்களில் இருந்து மீட்க அரும்பாடுபட்டார்

5. **இப்பத்தியில் இருந்து நீ அறிவது என்ன என்பதை கூறு.**

   விடை: பெரியார் ஒரு சமூகச் சீர்திருத்தப் போராளி

**செயல்பாடு: 3**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

குடும்பம் எனும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் எனும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது. குடும்பம் தொடங்கிக் குலம், கூட்டம், பெருங்குழு, சமூகம் என்ற அமைப்புவரை விரிவு பெறுகிறது. ஆதலின், குடும்பமே மனித சமூகத்தின் அடிப்படை அலகாக உள்ளது. வாழுங்காலம் முழுவதும் தொடர்ந்து வேறு எந்த நிறுவனமும் இந்த அளவுக்கு மனிதனைச் சமூகவயப்படுத்தும் பணியைச் செய்ததில்லை.

குடும்ப அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படை, திருமணமே. குடும்பம், திருமணம் இரண்டும் ஒன்றையொன்று சார்ந்தே செயல்படுகின்றன. நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போல. இன்று நாம் வழங்கும் 'திருமணம்', 'குடும்பம்' ஆகிய இரண்டு சொற்களுமே தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களிலும் இடம்பெறவில்லை. குடும்பம் எனும் சொல் முதன் முதலில் திருக்குறளில் தான் (1029) பயின்று வருகிறது.

சங்க இலக்கியத்தில் 'குடம்பை', 'குடும்பு', 'கடும்பு' ஆகிய சொற்கள் குடும்ப அமைப்போடு தொடர்புடையவை. 'குடும்பை' என்ற சொல், இருபது இடங்களில் பயின்று வருகிறது. 'குடும்பு' எனும் சொல் கூடி வாழுதல் என்று பொருள்படுகின்றது.

குடும்பு எனும் சொல்லுடன் 'அம்' விகுதி சேர்த்துப் பொருண்மை விரிவாக்கமாக (Semantic extension) 'குடும்பம்' எனும் சொல் அமைந்தது. பண்டைத் தமிழர்கள் குடும்பம் எனும் அமைப்புடன் வாழ்ந்த இடங்கள் பற்றிப் பல குறிப்புகள் நமக்குக் கிடைக்கின்றன.

**"இரவுக் குறியே இல்லகத் துள்ளும்**
**மனையோர் கிளவி கேட்கும் வழியதுவே**
**மனையகம் புகாஅக் காலை யான" (பொருளியல்-129)**

எனும் தொல்காப்பிய நூற்பா, 'இல்', 'மனை' ஆகிய இரண்டு வாழிடங்களைக் குறிப்பிடுகின்றது.

சங்க இலக்கியத்தில் மேலும் பல சொற்கள் உள்ளன. இல், மனை, குரம்பை, புலம்பில், முன்றில், குழல், கூரை, வரைப்பு, முற்றம், நகர், மாடம் முதலிய சொற்கள் குடும்பங்களின் வாழ்விடங்களில் உள்ள வேறுபாடுகளைச் சுட்டுகின்றன. மருதத்திணைப் பாடல் ஒன்றில் மகளிர் 'தம்மனை', 'நும்மனை' (அகம். 346: 16-17) என மனைவியின் இல்லத்தையும், கணவனின் இல்லத்தையும் பிரித்துப் பேசும் போக்கினைக் காண முடிகிறது. இன்னும் சில இடங்களில் தற்காலிகத் தங்குமிடம் 'புக்கில்' (புறம் 221-6) எனவும், திருமணத்திற்குப் பின் கணவனும் மனைவியும் பெற்றோரிடமிருந்து பிரிந்து, தனியாக வாழுமிடம் 'தன் மனை' (neolocal) எனவும் வழங்கப் பெற்றுள்ளன.

உயிரிகளைப் போன்றே குடும்பமும் தோன்றுகிறது; வளர்கிறது; பல கட்டங்களைக் கடக்கிறது. அதன் வாழ்க்கைச் சுழற்சியில் பல வடிவங்களில் நிலைமாற்றம் பெறுகிறது. இத்தகைய நீண்ட பாதையில் குடும்பத்தின் தொடக்கம் திருமணமே. மணம் புரிந்த கணவனும், மனைவியும் சேர்ந்து இல்லற வாழ்வில் ஈடுபடக்கூடிய தொடக்கக் கட்டமே 'மணந்தகம்' (Family of procreation) எனப்படுகிறது. முதல் குழந்தை பிறக்கும் வரை காலகட்டத்தை இந்நிலை குறிக்கிறது. தனிக் குடும்ப உருவாக்கத்தின் தொடக்க நிலையாக இது அமைகிறது.

இளந்தம்பதியினருக்கு ஏற்ற அறிவுரை கூறி நெறிப்படுத்தும் பணி செவிலிக்குரியது என்று கூறும் தொல்காப்பிய அடிகள் மூலம் (தொல், பொருள். 151) மணந்தகம் எனும் குடும்ப அமைப்பு முதன்மை பெற்றிருந்ததை அறிய முடிகிறது.

**வினாக்கள்:**

1. **மனித சமூகம் எதன் மூலம் கட்டமைக்கப்படுகிறது?**
2. **குடும்ப அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படை எது?**
3. **குடும்பம் எனும் சொல் அமைந்த விதம் யாது?**
4. **குடும்பங்களின் வாழ்விடங்களில் உள்ள வேறுபாடுகளைச் சுட்டும் சங்க இலக்கியச் சொற்கள் யாவை?**
5. **இப்பத்திக்கு ஏற்ற தலைப்பு ஒன்று தருக.**

**விடைகள்:**

6. குடும்பம் எனும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் எனும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது.
7. குடும்ப அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படை, திருமணமே.
8. ‘குடும்பு’ எனும் சொல்லுடன் ‘அம்’ விகுதி சேர்த்துப் பொருண்மை விரிவாக்கமாக (Semantic extension) ‘குடும்பம்’ எனும் சொல் அமைந்தது.
9. இல், மனை, குரம்பை, புலப்பில், முன்றில், குடில், கூரை, வரைப்பு, முற்றம், நகர், மாடம் முதலிய சொற்கள் குடும்பங்களின் வாழ்விடங்களில் உள்ள வேறுபாடுகளைச் சுட்டும் சங்க இலக்கியச் சொற்கள் ஆகும்.
10. தமிழர் குடும்ப முறை

**செயல்பாடு: 4**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

இலக்கியத்தின் ‘பயன்’ பற்றித் தமிழ் இலக்கிய மரபில் அழுத்தமான கருத்து உண்டு. அறம், பொருள், இன்பமாகவோ அல்லது வேறு ஏதோ ஓர் உயர்ந்த குறிக்கோளாகவோ, இந்தப் பயன் இலக்கிய உருவாக்கத்தில் இடம்பெற வேண்டும். பின்னால் வந்தவர்கள் இதனை இயந்திரப் போக்காகத் தனியாக - ஒட்டாமல் கூறியுள்ளனர். ஆனால் தொல்காப்பியம் மிகவும் தெளிவாக, இலக்கியத்தின் நோக்கம் அல்லது அறவியல் சார்ந்த கருத்து நிலைகள், கலை உருவாக்கத்தின் போதே சரிவர இணைந்திருக்க வேண்டும் என்பதனைச் சுட்டிக்காட்டியுள்ளது. இத்தகையதொரு முழுமைதான், கலை முழுமை (artistic whole) எனப்படுகிறது.

சங்க இலக்கியம் அகத்திணை சார்ந்த செய்திகளையும், புறத்திணை சார்ந்த செய்திகளையும் பாடற் பொருள்களாக வடிவமைத்துள்ளது. அகன் ஐந்திணைகளைப் பேசுகிற தொல்காப்பியம் புணர்தல், பிரிதல் முதலான அகன் ஐந்திணைகளை இன்பம், பொருள், அறம் ஆகிய அறவியல் 'லட்சியப்' பொருள்களோடு இரண்டற இணைத்து விடுகின்றது. அதுபோல், இன்னோரிடத்தில், பா வகைகள் ஆசிரியம் முதற்கொண்டு நான்கு எனச் சொல்லிவிட்டுத் தொடர்ந்து,

**"அந்நில மருங்கின் அறமுதலாகிய**
**மும்முதற் பொருட்கும் உரிய என்ப" (தொல். செய். 105)**

என்று பாவகைகளோடு அறவியல் கருத்துக்களை இணைத்துச் சொல்லிவிடுகிறது.

செவ்வியல் இலக்கியம் கட்டமைக்க விரும்பிய அறம் இது. சமூக பண்பாட்டு மரபிற்கேற்பவே, கலைப்படைப்பை - அழகியல் நெறியை பண்பாட்டின் இலச்சினையாகச் (Symbol of Culture) சித்தரிப்பதற்குத் தமிழ்மரபு முன்வந்திருக்கிறது; முன்மொழிந்திருக்றிது. தமிழ் அழகியலின் நெடும்பரப்பு, இது.

பாட்டு அல்லது கவிதையின் நடையியல் கூறுகளில், ஒலிக்கோலங்களும், சொற்களின் புலமும், தொடரியல் போக்குகளும் மிக முக்கியமானவை.

மொழியின் தனிச்சிறப்பான கூறுகளும், அவற்றைக் கையாளுகின்ற வகைமைகளும் கவிதையின் உந்துசக்தியாக அமைகின்றன. மொழிக்குள் இருக்கும் ஒரு வலிமை மிக்க ஆற்றல் கவிதைக்காக, இலக்கியத்துக்காகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. கவிதையின் இயங்காற்றல்தான் நடை. தொல்காப்பியமும், பிற இலக்கணங்களும் அவ்வாறே கருதுகின்றன.

**வினாக்கள்:**

1. **கலை முழுமை என்பது யாது?**
2. **சங்க இலக்கியம் எவற்றைப் பாடற்பொருள்களாக வடிவமைத்துள்ளது?**
3. **பாவகைகளோடு அறவியல் கருத்துக்களை இணைத்துச் சொல்லும் தொல்காப்பிய பாடலை எழுதுக.**
4. **பாட்டு அல்லது கவிதையின் நடையியல் கூறுகளில் மிக முக்கியமானவை எவை?**
5. **கவிதையின் உந்து சக்தியாக அமைவன யாவை?**

**விடைகள்:**

1. தொல்காப்பியம் மிகவும் தெளிவாக, இலக்கியத்தின் நோக்கம் அல்லது அறவியல் சார்ந்த கருத்து நிலைகள், கலை உருவாக்கத்தின் போதே சரிவர இணைந்திருக்க வேண்டும் என்பதனைச் சுட்டிக் காட்டியுள்ளது. இத்தகையதொரு முழுமைதான், கலை முழுமை (artistic Whole) எனப்படுகிறது.

2. சங்க இலக்கியம் அகத்திணை சார்ந்த செய்திகளையும், புறத்திணை சார்ந்த செய்திகளையும் பாடற்பொருள்களாக வடிவமைந்துள்ளது.
3. “அந்நில மருங்கின் அறமுதலாகிய மும்முதற் பொருட்கும் உரிய என்ப” (தொல். செய். 105)
4. பாட்டு அல்லது கவிதையின் நடையியல் கூறுகளில் ஒலிக் கோலங்களும், சொற்களின் புலமும், தொடரியல் போக்குகளும் மிக முக்கியமானவை.
5. மொழியின் தனிச் சிறப்பான கூறுகளும், அவற்றைக் கையாளுகின்ற வகைமைகளும் கவிதையின் உந்து சக்தியாக அமைகின்றன.

**செயல்பாடு: 5**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:**

கலையியல் சார்ந்து தமிழில் வெளியான பல நூல்களுக்கும் வேங்கட சாமியே வழிகாட்டியாக விளங்கினார். இக்கலை ஆராய்ச்சிக்கு அவருடைய பல்துறை அறிவும், தம் இளமைப் பருவத்தில் அவர் ஓவியக் கல்லூரியில் பயின்றதும் இதற்கு உதவியாக அமைந்தது. கட்டடம், சிற்பம், ஓவியம் தொடர்பான இவரது ஆய்வுகள் தமிழ்ச் சமூக வரலாற்றுக்குப் புதிய வரவாக அமைந்தன. தமிழரது கலைத்திறனை எடுத்தோதும் ‘தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்’ என்னும் நூல், கவின் கலைகள் குறித்துத் தமிழில் வெளிவந்த முழுமையான முதல்நூல் ஆகும்.

“தற்காலத்துத் தமிழ்ச் சமூகம் தனது பழைய அழகுக் கலைச் செல்வங்களை மறந்து, தன் பெருமை தான் அறியாச் சமூகமாக இருந்து வருகிறது; ‘கலை கலை’ என்று இப்போது கூறப்படுகிறதெல்லாம் சினிமாக்கலை, இசைக்கலைகள் பற்றியே; இலக்கியக்கலை கூட அதிகமாகப் பேசப்படுவதில்லை; ஏனைய அழகுக் கலைகளைப் பற்றி அறவே மறந்து விட்டனர்; எனவே இந்நூல் எழுதப்பட்டது” என்று இந்நூலின் முன்னுரையில் மயிலை சீனி. வேங்கடசாமி குறிப்பிடுகின்றார். இந்நூல் தமிழக அரசின் முதற்பரிசைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. “இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம், நுண்கலைகள், இசைவாணர் கதைகள்” ஆகியவை கலை பற்றிய இவருடைய பிற நூல்கள் ஆகும். தமது நூல்களின் படங்களைத் தானே வரைந்து வெளியிட்டது. இவரது கலைத்திறனுக்குச் சான்றாகும்.

1962-ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் அறக்கட்டளைச் சொற்பொழிவு ஒன்றினை வேங்கடசாமி நிகழ்த்தினார். இச்சொற்பொழிவுகள் மூலம் அவரது ஆய்வுப் பயணம் தொல்காப்பியம், சங்க இலக்கியம், கல்வெட்டுகள் ஆகியவற்றை நோக்கி நகர்ந்தது. அதன் விளைவாக, சங்காலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள், பழங்காலத் தமிழர் வணிகம், களப்பிரர் ஆட்சியில் தமிழகம், கொங்கு நாட்டு வரவாறு, தமிழ்நாட்டு வரலாறு சங்ககாலம் (அரசியல்) ஆகிய நூல்களையும் எழுதினார்.

ஆய்வுலகில் மயிலை சீனி வேங்கடசாமியின் குறிப்பிடத்தக்க பங்களிப்பைக் கூற வேண்டுமானால் தமிழக வரலாற்றினைப் பல கோணங்களில் மீட்டுருவாக்கம்

செய்ததைக் குறிப்பிடலாம். 'தமிழ்நாட்டு வரலாறு' என்னும் நூல் இவருடைய மீட்டுருவாக்க முயற்சிக்குச் சரியான சான்றாகும். சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம் முதலிய இலக்கியத் தரவுகளைக் கொண்டு இந்த நூலை எழுதியுள்ளார். அத்துடன் துளுமொழியையும், தமிழ்மொழியையும் ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார். குறைந்த ஆதாரங்களைக் கொண்டு ஒரு பெரிய வரலாற்றையே உருவாக்கிய இவரது நுண்ணிய அறிவிற்குச் சான்றாக இந்நூல் விளங்குகிறது.

**வினாக்கள்:**

1. கலையியல் சார்ந்து தமிழில் வெளியான பல நூல்களுக்கும் வழி காட்டியாக விளங்கியவர் யார்?
2. கவின் கலைகள் குறித்துத் தமிழில் வெளிவந்த முழுமையான முதல் நூல் எது?
3. மயிலை சீனி, வேங்கடசாமி எழுதிய கலை பற்றிய நூல்கள் எவை?
4. மயிலை சீனி, வேங்கடசாமி இயற்றிய நூல்கள் எவை?
5. இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பை எழுதுக.

**விடைகள்:**

1. கலையியல் சார்ந்து தமிழில் வெளியான பலநூல்களுக்கும் வழிகாட்டியாக விளங்கியவர் வேங்கடசாமியே ஆவார்.
2. 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' என்னும் நூல், கவின்கலைகள் குறித்துத் தமிழில் வெளிவந்த முழுமையான முதல் நூல் ஆகும்.
3. இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவம், நுண்கலைகள், இசைவாணர் கதைகள் ஆகியவை கலைபற்றிய மயிலை, சீனி வேங்கடசாமி இயற்றிய நூல்கள் ஆகும்.
4. சங்ககாலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள், பழங்காலத் தமிழர் வணிகம், களப்பிரர் ஆட்சியில் தமிழகம், கொங்கு நாட்டு வரலாறு, தமிழ்நாட்டு வரலாறு - சங்க காலம் (அரசியல்) ஆகியவை மயிலை சீனி வேங்கடசாமி இயற்றிய நூல்கள் ஆகும்.
5. கலை, இலக்கிய ஆய்வாளர் மயிலை சீனி வேங்கடசாமி.

**செயல்பாடு: 6**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:**

உலக மொழிகள் அனைத்திலும் பழமொழிகள் உள்ளன. தொன்மைக்காலம் முதல் வழங்கி வரும் இப்பழமொழிகள், மக்களின் பண்பாட்டு உயர்வைக் கணக்கிட்டுக் காட்டும். அளவு கோலாக விளங்குகின்றன. மக்களைக் கட்டுக்கோப்பாக வைப்பதற்கு இக்காலத்தில் அறநூல்களும், சட்ட திட்டங்களும் உள்ளன. ஆனால்,

இவை எதுவுமே இல்லாத தொன்மைக் காலத்தில், கட்டுக்கோப்பான நன்னெறியில் மக்களை வாழவைப்பதற்குப் பழமொழிகளே அடிப்படையாக அமைந்தன.

சமூகப் பண்புகளுள் தலை சிறந்தது ஒழுக்கமாகும். சமுதாயத்தில் மக்கள் நல்லொழுக்கத்துடன் வாழவேண்டும் என்பதை, 'ஒழுக்கம் உயர்வு தரும்', 'ஒழுக்கம் உயர்குலத்தினும் உயர்வு' போன்ற பழமொழிகள் உணர்த்துகின்றன. பிறருக்குக் கொடுத்து உதவ வேண்டும் என்ற நற்பண்பினைப் 'பழுத்தமரமும் செழித்த செல்வமும் பசியாற்றவே' என்னும் பழமொழி உணர்த்துகிறது. விருந்தோம்பலின் பண்பை, 'அன்போடு அளிக்கும் கஞ்சி, அறுசுவை உணவை மிஞ்சும்' என்ற பழமொழி விளக்குகிறது. 'கெடுவான் கேடு நினைப்பான்', 'தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான்', 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' போன்ற பழமொழிகள் நல்லெண்ணம் கொண்டு, அறநெறியில் வாழ வேண்டியதன் தேவையை எடுத்துரைக்கின்றன.

பழமொழிகள் மக்களின் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்துள்ளன. உண்பதற்கு முன் இலையில் உப்பு இடுவதும், உண்ட வீட்டுக்கு இரண்டகம் (தீங்கு) செய்யக்கூடாது என்பதை உணர்த்துவதற்கு 'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்னும் பழமொழி தோன்றியது. மேலும், 'சோற்றுக்குமுன் உப்பு, பேச்சுக்குமுன் பழமொழி' என்பது பழங்கால வழக்கில் இருந்தது. அக்காலத்தில் பஞ்சாயத்துகளில் ஊர்த்தலைவர் பழமொழியைச் சொல்லிவிட்டுத்தான் வழக்கு பற்றி ஆராயத் தொடங்குவார்.

அண்ணன் தம்பிக்குள் ஏதேனும் சிக்கல் என ஒரு வழக்கை ஆராயத் தொடங்குமுன், 'கரும்பு கட்டோடு இருந்தால், எறும்பால் ஒன்றும் செய்யாது' என்று சொல்லிவிட்டுத்தான் பேசத் தொடங்குவாராம். இதனால், தங்களுக்குள் சண்டையிட்டுக் தொள்ளும் அண்ணன், தம்பிகள் மனந்திருந்தி, ஒற்றுமையுடன் வாழ்வதற்குப் பழமொழியே துணை செய்வதாய் அமைந்திருந்தது.

**வினாக்கள்:**

1. உலகமொழிகள் அனைத்திலும் உள்ளவை எவை?
2. சமுகப் பண்புகளுள் தலை சிறந்தது எது?
3. மக்கள் நல்லொழுக்கத்துடன் வாழ வேண்டும் என்று கூறும் பழமொழிகள் எவை?
4. நல்லெண்ணம் கொண்டு, அறநெறியில் வாழ வேண்டியதன் தேவையை எடுத்துரைக்கும் பழமொழிகள் எவை?
5. இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

**விடைகள்:**

1. உலக மொழிகள் அனைத்திலும் பழமொழிகள் உள்ளன.
2. சமுகப் பண்புகளுள் தலை சிறந்தது ஒழுக்கமாகும்.
3. ஒழுக்கம் உயர்வு தரும்.

ஒழுக்கம் உயர்குலத்தினும் உயர்வு.

4. கெடுவான் கேடு நினைப்பான், தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினைஅறுப்பான், முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
5. பழமொழிகள்

**செயல்பாடு: 7**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:**

எழுத்து மொழியைக் காட்டிலும் பேச்சுமொழி உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கிறது. எனவேதான் இலக்கிய வழக்கைக் கைவிட்டுப் பேச்சுமொழிக்குத் திரும்பியவுடனே கவிஞனுடைய கவிதையின் மொழி, அதிக வெளிப்பாட்டுச் சக்தி கொண்டதாக மாறிவிடுகிறது.

எழுத்துமொழி அப்படியன்று. எழுதுவதை மட்டும்தான் மனிதனின் கை செய்கிறது. முகத்திலிருக்கும் வாய், உடம்பிலிருக்கும் கையைக் காட்டிலும் உணர்ச்சி வெளிபாட்டைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது. அதனால்தான், பேச்சுமொழி எழுத்துமொழியைக் காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கதாக உள்ளது.

எழுத்துமொழியில் பேச்சைக் கேட்க எதிராளி என்கிற ஒருவன் கிடையாது. எழுத்து என்பது ஒரு வகையில் பார்த்தால் தனக்குத்தானே பேசிக் கொள்கிற பேச்சு. ஆனால் பேச்சு என்பது அப்படிப்பட்டதன்று. பேச்சு என்பது தன்னைத் திறந்து கொள்கிற ஒரு செயல்பாடு. உண்மையில் சொல்லப்போனால் பேச்சு என்பது மொழியில் நீந்துவது. பேச்சுமொழியின் போது நமது உடம்பின் வெளிப்பாடுகள் நம்மை மொழியென்னும் நீரில் முன்னோக்கி நகரச் செய்கின்றன. இதைஉணர்ந்த கவிஞர்கள் சிலர் தங்களுடைய கவிதைகளை எதிரிலிருக்கும் ‘வாசகனுடன் பேசுவது போல அமைக்கின்றனர். இதையே அவர்கள் நேரடி மொழி எனக் கருதின்றனர்.

நேரடி மொழி எனப்படும் பேச்சுமொழிக்கு ஒருபோதும் பழமை தட்டுவதில்லை. அது வேற்றுமொழி ஆவதில்லை அது எப்போதும் உயிர்ப்புடனும், மாறிக்கொண்டும் இருக்கிறது. இம்மொழிதான் ஒரு கவிஞரை நிகழ்காலத்தவரா அல்லது இறந்த காலத்தவரா என்பதை நிர்ணயிக்கிறது என்கிறார் மலையாளக் கவி ஆற்றூர் ரவிவர்மா.

பேச்சுமொழியில் ஒரு கவிதை செய்யப்படுகிறபோது அஃது உடம்பின் மேல்தோல் போல் இயங்குகிறது. ஆனால் எழுத்துமொழியில் அதே சொற்கள் கவிதையின் உணர்வை, உணர்ச்சியற்ற ஆடை போல் போர்த்து மூடிவிடுகின்றன. எனவே, கவிதை மரபான தனது செய்யுள் சந்தத்திலிருந்து விடுதலை அடைந்து விட்டது. அடுத்ததாக, அது கவிதைக்கென இருக்கிற தனித்துவமான மொழி நடையிலிருந்தும் விடுதலை அடைய வேண்டும்.

**வினாக்கள்:**

1. உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கும் மொழி எது?
2. பேச்சுமொழி எழுத்துமொழியைக் காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்த மிக்கதாக உள்ளது ஏன்?
3. கவிஞர்கள் நேரடி மொழி என எதனைக் கருதுகின்றனர்? ஏன்?
4. நேரடி மொழி குறித்து மலையாளக் கவி ஆற்றூர் ரவி வர்மாவின் கருத்து யாது?
5. இப்பத்திக்கு ஏற்ற தலைப்பு ஒன்று தருக.

**விடைகள்:**

6. உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கும் மொழி பேச்சுமொழி ஆகும்.
7. முகத்திலிருக்கும் வாய், உடம்பிலிருக்கும் கையைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது. அதனால்தான், பேச்சுமொழி எழுத்து மொழியைக் காட்டிலும் அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கதாக உள்ளது.
8. பேச்சுமொழியைத்தான் கவிஞர்கள் நேரடிமொழி எனக் கருதகின்றனர். ஏனெனில், பேச்சு என்பது மொழியில் நீந்துவது. பேச்சுமொழியின் போது நமது உடம்பின் வெளிப்பாடுகள் நம்மை மொழியென்னும் நீரில் முன்னோக்கி நகரச் செய்கின்றன. இதை உணர்ந்த கவிஞர்கள் சிலர் தங்களுடைய கவிதைகளை எதிரிலிருக்கும் வாசகனுடன் பேசுவதுபோல அமைக்கின்றனர்.
9. நேரடிமொழி எனப்படும் பேச்சுமொழிக்கு ஒருபோதும் பழமை தட்டுவதில்லை. அது வேற்றுமொழி அவதில்லை. அது எப்போதும் உயிர்ப்புடனுடம், மாறிக் கொண்டும் இருக்கிறது. இம்மொழி தான் ஒரு கவிஞரை நிகழ் காலத்தவரா அல்லது இறந்த கலத்தவரா என்பதை நித்ணயிக்கிறது- என்கிறார் மணையாளக்கவி ஆற்றூர் ரவிவர்மா.
10. எழுத்து மொழியும் பேச்சு மொழியும்.

**செயல்பாடு: 8**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:**

பண்டைத் தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம், கல்வி கற்பதற்காகப் பிரிந்து செல்வதை 'ஓதற்பிரிவு' (தொல், அகத். 25) எனக் குறிப்பதோடு எண்வகை மெய்ப்பாடு பற்றிக் கூறும்போது கல்வியின் பொருட்டு ஒருவருக்கு, 'பெருமிதம்' தோன்றும் (தொல், மெய். 9) என்றும் கூறுகிறது. தொல்காப்பியமும், நன்னூலும் ஆசிரியர்கள், மாணவர்களுக்கான இலக்கணங்களை வகுத்துள்ளன. அதன் வழி வந்த சங்க இலக்கயங்களும் கல்வியின் சிறப்பைப் பெரிதும் போற்றுகின்றன.

**"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**

**பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே!" (புறம் 183, ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்)**

என்ற புறநானூற்று அடிகள் பொருள் கொடுத்தும், தொண்டு செய்தும் ஆசிரியர்களிடம் மாணவர்கள் கல்வி தேவை என்பதனை உணர்ந்து கற்றனர். "சங்ககாலத் தமிழகத்தில் தமிழ் ஆட்சிமொழியாக, பயிற்றுமொழியாக, இலக்கிய மொழியாக விளங்கியுள்ளது. தமிழகம் அப்போது பெற்றிருந்த அரசியல் சுதந்திரத்தினால், தமிழ் நாடெங்கும் தமிழே ஆட்சிமொழியாகவும், கல்வி மொழியாகவும் மற்றும் சமயம், வாணிகம் போன்ற எல்லாத் துறைகளிலும் பொதுமொழியாகவும் விளங்கி வந்தது" என்னும் மா. இராசமாணிக்கனாரின் கருத்து, தமிழகத்தில் அன்று நிலவிய கல்விமுறையின் சிறப்பினை எடுத்துக் கூறுகிறது. சங்கம் என்ற அமைப்பு, பலர் கூடி விவாதிக்கும் பாங்குடையது. இது தவிர மன்றம், சான்றோர் அவை, அறங்கூர் அவையம், சமணப்பள்ளி, பௌத்தப் பள்ளி போன்ற அமைப்புகள் சங்க காலத்திலும், சங்கம் மருவிய காலத்திலும் கற்பித்தல் பணியைத் தமிழகத்தில் செய்து வந்துள்ளன. மன்னராட்சிக் காலத்தில் போர்ப்பயிற்சிகளைத் தருவதும் முக்கியமான கல்வியாகக் கருதப்பட்டது.

இதுபோலவே கற்பிக்கும் ஆசிரியர்களும் மூவகைப் பிரிவினராக இருந்தனர். இவர்களிடம் கற்ற மாணவர்களை முறையே சிறுவன், மாணவன், கேட்போன் என்று வகைப்படுத்தனர்.

**வினாக்கள்:**

1. தொல்காப்பியம், கல்வி கற்பதற்காகப் பிரிந்து செல்வதை எச்சொல்லால் குறிப்பிடுகிறது?
2. ஆசிரியர்கள், மாணவர்களுக்கான இலக்கணங்களை வகுத்துள்ள நூல்கள் எவை?
3. பொருள் கொடுத்தும், தொண்டு செய்தும் ஆசிரியரிடம் மாணவர்கள் கல்வி கற்றதைச் சிறப்புடன் குறிக்கும் புறநனூற்று அடிகள் யாவை?
4. சங்க காலத்திலும், சங்கம் மருவீய காலத்திலும் கற்பித்தல் பணியைத் தமிழகத்தில் செய்துவந்துள்ள அமைப்புகள் எவை?
5. இப்பத்திக்கு ஏற்ற தலைப்பு ஒன்றைத் தருக.

**விடைகள்:**

1. தொல்காப்பியம், கல்வி கற்பதற்காகப் பிரிந்து செல்வதை 'ஓதற்பிரிவு' என்னும் சொல்லால் குறிப்பிடுகிறது.
2. தொல்காப்பியமும், நன்னூலும் ஆசிரியர்கள், மாணவர்களுக்கான இலக்கணங்களை வகுத்துள்ளன.
3. "உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்

பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே” (புறம். 183 ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன்)

4. அறங்கூர் அவையம், சமணப்பள்ளி, பௌத்தப்பள்ளி போன்ற அமைப்புகள் சங்காலத்திலும், சங்கம் மருவிய காலத்திலும் கற்பித்தல் பணியைத் தமிழகத்தில் செய்து வந்துள்ளன.
5. “தமிழ் இலக்கியங்களில் கல்வி”

**செயல்பாடு: 9**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:**

நீதிக்கட்சி ஒரு அரசியல் அமைப்பாக துவக்கப்பட்டது. அதன் நோக்கம் பிராமணரல்லாதாரிடையே விழிப்புணர்வை உருவாக்கி, தேர்தலில் போட்டியிட்டு, ஆட்சியைக் கைப்பற்றி, சமூகநீதியை நிலைநாட்டுவதாகும். நீதிக்கட்சியின் நிர்வாகிகள் 1917 அக்டோபர் மாதம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நீதிக்கட்சி வெளியிட்ட கொள்கை அறிக்கையே அக்கட்சியின் அரசியல் சட்ட வரைவாகக் கருதப்பட்டது. 1925 டிசம்பர் 19ஆம் தேதி நீதிக்கட்சியின் அமைப்புச்சட்டம் party Constitution) அங்கீகரிக்கப்பட்டது. அதன் அலுவலகம் மௌண்ட்ரோடில் இருந்தது. கட்சிக்கிளைகள் முதலில் சென்னையில் துவக்கப்பட்டு பின்னர் மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டன. கட்சித்தலைவர்கள் அவ்வப்போது மாவட்டக் கிளைகளுக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டனர்.

நீதிக்கட்சிக்கு ஒரு தலைவரும், நான்கு துணைத்தலைவர்களும், ஒரு பொதுச் செயலரும், ஒரு பொருளாளரும் இருந்தனர். 25 உறுப்பினர்களைக் கொண்ட செயற்குழு (Executive Committee) கட்சியின் கொள்கை முடிவுகளைச் செயல்படுத்தியது. 1920 தேர்தலுக்குப்பிறகு நீதிக்கட்சி ஐரோப்பிய அரசியல் கட்சி போன்று சீரமைக்கப்பட்டது. கட்சிக் கொரடா (party whip) என்ற புதிய கட்சிப் பதவி உருவாக்கப்பட்டது. செயற்குழு உறுப்பினர்களைக் கொண்ட குழுக்கள் (Committees) அமைக்கப்பட்டன. நீதிக்கட்சித் தலைவர் கட்சியாக இணைக்கப்பட்ட அனைத்து பிராமணரல்லாதார் சங்கங்களுக்கும் பொதுவான தலைவர் என்பது உறுதி செய்யப்பட்டது. அவரே சட்டமன்ற உறுப்பினர்களின் தலைவராகவவும் செயல்பட்டார்.

செயற்குழு, அதன் உறுப்பினர்களது நிலை வரையறுக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டு நீதிக்கட்சி மாநாடு கூட்டப்படுதல் வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. நீதிக்கட்சியின் முதல் தலைவராக சர். தியாகராயர் பொறுப்பேற்றார். ஒரு மாநில அரசியல் கட்சி எவ்வாறு அமைக்கப்படுதல் வேண்டும் என்பதற்கு நீதிக்கட்சி சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்ந்தது. நீதிக்கட்சி 1920ஆம் அண்டு நடைபெற்ற சென்னை சட்டமன்றத் தேர்தலில் முதல் முறையாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றது.

**வினாக்கள்:**

1. நீதிக்கட்சியின் நோக்கம் யாது?
2. நீதிக்கட்சியின் நிர்வாகிகள் எந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டனர்?
3. நீதிக்கட்சியின் முதல் தலைவர் யார்?
4. நீதிக்கட்சியின் முதல் பொதுச்செயலாளராகப் பொறுப்பேற்றவர் யார்?
5. இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

**விடைகள்:**

1. பிராமணரல்லாதாரிடையே விழிப்புணர்வை உருவாக்கி, தேர்தலில் போட்டியிட்டு, ஆட்சியைக் கைப்பற்றி, சமூகநீதியை நிலைநாட்டுவதே நீதிக்கட்சியின் நோக்கமாகும்.
2. நீதிக்கட்சியின் நிர்வாகிகள் 1917 அக்டோபர் மாதம் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
3. நீதிக்கட்சியின் முதல் தலைவர் சர். தியாகராய செட்டி ஆவார்.
4. நீதிக் கட்சியின் முதல் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றவர் ஆற்க்காடு ராமசாமி ஆவார்.
5. நீதிக்கட்சியின் அமைப்பு

**செயல்பாடு: 10**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:**

சென்னை ராஜதானியில் இரட்டை ஆட்சி (Dyarchy)யின் கீழ் நீதிக்கட்சி (Justice Party) ஆட்சி செய்து கொண்டிருந்தபோது பெரியார் ஈ, வெ. ராமசாமி காங்கிரசை விட்டு வெளியேறி(1925) சுயமரியாதை இயக்கத்தைத் துவக்கினார். ஈரோடு வெங்கடப்ப ராமசாமி (ஈ.வெ.ரா) நாயக்கர் தனது 28வது வயதிலிருந்து (1907) காங்கிரஸ் இயக்கத்தில் ஆர்வம் கொண்டார், காங்கிரஸ் மாநாடுகளுக்குச சென்று வரத் தொடங்கினார்; 1919ஆம் ஆண்டு ஈரோடு நகர்மன்றத் தலைவர் பதவியை விட்டு வெளியேறி காங்கிரஸ் உறுப்பினரானார்.

காந்தியின் தலைமையின் கீழ் நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கத்தில் முழு மனதுடன் ஈடுபட்டார். ஈரோட்டில் கள்ளுக்கடை மறியலை முன்னின்று நடத்தினார். காந்தியின் நிர்மானத் திட்டத்தை மேற்கொண்டு தாதம் பட்டியில் அவருக்குச் சொந்தமான 500 தென்னை மரங்களை வெட்டிச் சாய்த்தார். தீவிர கதர்ப் பிரச்சாரத்தை மேற்கொண்டார் (1921). கள்ளுக்கடை மறியல் செய்ததற்காக கோவைச் சிறையில் அடைக்கப்பட்டார் (1922). தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகப் பணயாற்றயி போது (1924) கேரளத்தில் வைக்கம் தீண்டாமை ஒழிப்புச்

சத்தியாகிரகத்தில் பங்கேற்றார்; சேரன்மாதேவி குருகுலத்தில் பிராமணரல்லாதாருக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டித்தார். இவற்றுக்கிடையே ஈ. வெ. ரா தொடர்ந்து காங்கிரஸ் ஆண்டுக் கூட்டங்களில் வகுப்புரிமை பற்றிப் பேசி அதற்காக தீர்மானங்கைளக் கொண்டு வந்தார். அந்தத் தீர்மானங்கள் அனைத்தும் நிராகரிக்கப்பட்ட போது அவர் காங்கிரசை விட்டு வெளியேறினார் (1925). அப்போது அவர் தமிழ்நாடு காங்கிரஸ் செயலராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சுருங்கக் கூறின், ஈ. வெ. ராசாமியின் வகுப்புரிமை கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படாமையால் காங்கிரசை விட்டு வெளியேறி சுயமரியாதை இயக்கத்தைத் துவங்கினார். காங்கிரசை விட்டு வெளியேறியத்ற்கு காரணம் “அது ஒரு வகுப்புவாத ஸ்தாபனம்; ஆரியப் பார்ப்பனரின் நலனுக்காகவே பாடுபட்டு வந்த ஒரு ஸ்தாபனம்; வருணாசிரம பாதுகாப்பின் ஸ்தாபனம் என்பதைத் தெளிவாக உணர்ந்தது தான்” (விடுதலை 1948, பிப்ரவரி 29)

**வினாக்கள்:**

1. பெரியார் ஈ. வெ. ராமசாமி எப்பொழுது சுயமரியாதை இயக்கத்தைத் துவக்கினார்?
2. பெரியார் எந்த வயதில் காங்கிரஸ் இயக்கத்தில் ஆரவம் கொண்டார்?
3. காந்தியின் ஈர்ப்பால் பெரியார் ஆற்றிய செயல்கள் யாவை?
4. தந்தை பெரியாரின் சமூகச் சீர்திருத்தப் பணிகளை எழுதுக.
5. இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்றைத் தருக.

**விடைகள்:**

1. சென்னை ராஜதானியில் இரட்டை ஆட்சியின் கீழ் நீதிக் கட்சி ஆட்சி செய்து கொண்டடிரந்தபோது பெரியார் ஈ. வெ. ராமசாமி காங்கிரசை விட்டு வெளியேறி 1925 ஆம் ஆண்டு சுயமரியாதை இயக்கத்தைத் துவக்கினார்.

2. பெரியார் தனது 28 ஆவது வயதிலிருந்து காங்கிரஸ் இயக்கத்தில் ஆர்வம் கொண்டார்.

3. காந்தியின் தலைமையின் கீழ் நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கத்தில் முழு மனதுடன் ஈடுபட்டார். ஈரோட்டில் கள்ளுக் கடை மறியலை முன்னின்று நடத்தினர். காந்தியின் நிர்மானத் திட்டத்தை சிரமேற்கொண்டு தாதம்பட்டியில் அவருக்குச் சொந்தமான 500 தென்னை மரங்களை வெட்டிச் சாய்த்தார். தீவிர கதர் பிரச்சாரத்தை மேற்கொண்டார்.

4. தந்தை பெரியார் கேரளத்தில் வைக்கம் தீண்டாமை ஒழிப்பு சத்தியாகிரகத்தில் பங்கேற்றார்; சேரன்மாதவி குருகுலத்தில் பிராமணரல்லாதாருக்கு இழைக்கப்பட்ட அநிதியைக் கண்டித்தார்.
5. சுயமரியாதை இயக்கம்

**செயல்பாடு: 11**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:**

தமிழ்நாடு ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் வந்தது. இந்தியாவை ஆங்கிலேய ஆதிக்கத்திலிருந்து விடுவிப்பதற்கான போராட்டம் காட்டுத்தீ போல் பரவிற்று. போராட்டத் தலைவர்கள் தீண்டாமை ஒழிப்பின் மூலம் சாதி முறையை ஒழித்து விடலாம் என்று நம்பினர். அவர்களது கவனம் சாதி ஒழிப்பிலிருந்து தீண்டாமை ஒழிப்பின் மீது நிலை கொண்டது. அவர்கள் நோயை ஒழிப்பதற்குப் பதில் நோயின் அறிகுறிகளைப் பற்றிக் கவலைப்பட்டனர். நோயைப் புனுகுப்பூசி குணப்படுத்திவிடலாம் என்ற மாயையில் தங்களை இழந்தனர். தமிழ்நாட்டில் தேச விடுதலைக்காகப் போராடிய தலைவர்களும் தீண்டாமை ஒழிப்புப் பாதையில் செல்வது சுலபமாக இருந்தது.

தேசத்தலைவர்களும், தமிழகத் தலைவர்களும் தீண்டாமை ஒழிப்பு என்ற குறுக்கு வழியில் சென்று சாதி முறையை ஒழித்து சமத்துவ சமுதாயத்தைக் காண முற்பட்டபோது சுப்பிரமணிய பாரதியார், சாதி ஒழிப்புக் கொடியை உயர்த்திப் பிடித்தார். ‘சாதிகள் இல்லையடி’ என்று குழந்தைகளுக்கு அறிவுறுத்தினார். தடம் மாறிச் சென்ற பெரியவர்களுக்கு எதிராக, “வண்ணங்கள் வேற்றுமைப்பட்டால்- அதில் மானுடர் வேற்றுமை இல்லை; எண்ணங்கள் செய்கைகள் எல்லாம் இங்கு யாவர்க்கும் ஒன்றெனக் காணீர்” என்று முரசு கொட்டினார்.

“சாதிப்பிரிவுகள் சொல்லி இதில் தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்; நீதிப் பிரிவுகள் செய்வார் அங்கு நித்தமும் சண்டைகள் செய்வார் சாதிக் கொடுமைகள் வேண்டாம்” என்று எச்சரித்தார். “சூத்திரனுக்கொரு நீதி தண்டச் சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி” என்பது சாத்திரமல்ல சதி என்று முழுங்கினார். சாதி ஒழிப்பால் மட்டுமே தீண்டாமையை அகற்ற முடியும் என்ற உண்மையைப் பாடிப் புரிய வைத்தார் பாரதி. பாரதி வழிச் சென்ற பாரதிதாசனும் “இருட்டறையில் உள்ளதடா உலகம்; சாதி இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே” என்று மனம் குமுறிச் சாடினார்.

**வினாக்கள்:**

1. போராட்டத் தலைவர்கள் எதன் மூலம் சாதி முறையை ஒழித்துவிடலாம் என்று நம்பினர்?
2. சாதி ஒழிப்புக் கொடியை உயர்த்திப் பிடித்தவர் யார்?

3. சாதியொழிப்பை நீக்க பாரதியார் கொட்டிய முரசு யாது?
4. சாதியை ஒழிக்க பாரதிதாசன் பாடிய வரிகள் யாவை?
5. இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்றை தருக.

**விடைகள்:**

1. போராட்டத் தலைவர்கள் தீண்டாமை ஒழிப்பின் மூலம் சாதி முறையை ஒழித்து விடலாம் என்று நம்பினர்.
2. சுப்பிரமணிய பாரதியார், சாதி ஒழிப்புக் கொடியை உயர்த்திப் பிடித்தார்.
3. “வண்ணங்கள் வேற்றுமைப்பட்டால்- அதில் மானுடர் வேற்றுமை இல்லை; எண்ணங்கள் செய்கைகள் எல்லாம் இங்கு யாவர்க்கும் ஒன்றெனக் காணீர்” என்ற பாடல் வரிகள் மூலம் முரசு கொட்டினார்.
4. “இருட்டறையில் உள்ளதடா உலகம்; சாதி இருக்கின்றதென்பானும் இருக்கின்றானே”
5. தீண்டாமை ஒழிப்பு.

**செயல்பாடு: 12**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:**

ஆண் ஆதிக்கச் சமுதாயத்தில் பெண்கள் இலக்கியத்தில் போற்றப்பட்டு நடைமுறை வாழ்க்கையில் பல்வேறு கொடுமைகளுக்கும், அநீதிக்கும் ஆளாக்கப்படுகின்றனர். பெண்கள் பொருளாதாரத்துக்கும், பாதுகாப்புக்கும் ஆண்களைச் சார்ந்திருப்பது; பரம்பரைச் சொத்தில் பங்கின்மை; விதவை மறுமண மறுப்பு; வரதட்சணைக் கொடுமை; கல்வி மற்றும் உரிமைகள் மறுக்கப்படல்; வீடுகளிலும் வேலை செய்யும் இடங்களிலும் துன்புறுத்தப்படல்; விவாகரத்து மறுக்கப்படல் போன்ற பல்வேறு பிரச்சனைகளுக்குப் பலியாகின்றனர்.

தமிழ்நாட்டு வரலாற்றில் அவ்வப்போது பெண்கள் பாதுகாப்புக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதைக் காணலாம். கணவனை இழந்த பெண் எரிக்கப்பட்ட பழக்கம் ஒழிக்கப்பட்டது (1829). விதவைகள் மறுமணச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது (1856). சாரதா சட்டம் குழந்தைத் திருமணத்தைத் தடை செய்தது (1929). பெண்களுக்கு மூதாதையர் சொத்தில் சம பங்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது (1956). வரதட்சணைத் தடுப்புத் தடுப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது (1961). தொட்டில் குழந்தைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது (1992). பெண்களுக்கென பல சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

இவையன்றி தமிழக அரசு பின்பற்றும் முக்கிய நலத்திட்டங்களாவன; ஈ. வெ. ரா. மணியம்மையார் நினைவு விதவைப் பெண்களின் மகளுக்குத் திருமண உதவித்

தொகை; டாக்டர் தர்மாம்பாள் நினைவு விதவைப் பெண் மறுமண உதவித்தொகை; கலப்புத் திருமண உதவித் திட்டம்; மகபேறு உதவித் திட்டம்; மகளிர் ஆணையம் மூலம் பெண்கள் உரிமைகள் பாதகாப்பு; ஏழை விதவைகள், ஆதரவற்ற பெண்கள் பாதுகாப்புக்கான வேசை இல்லங்கள்.

**வினாக்கள்:**

1. ஆண் ஆதிக்கச் சமுதாயத்தில் பெண்கள் படும் பிரச்சனைகள் இரண்டனை எழுதுக.
2. கணவனை இழந்த பெண் எரிக்கப்பட்ட பழக்கம் ஒழிக்கப்பட்ட ஆண்டு எது?
3. தொட்டில் குழந்தைத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்ட ஆண்டு எது?
4. தமிழக அரசு பின்பற்றும் முக்கிய நலத்திட்டங்களுள் எவையேனும் நான்கை எழுதுக.
5. இப்பத்திக்கு ஏற்ற தலைப்பு ஒன்று தருக.

**விடைகள்:**

11.(i) பரம்பரைச் சொத்தில் பங்கின்மை

(ii) விதவை மறுமண மறுப்பு

12.1829

13.1992

14.(i) ஈ. வெ. ரா மணியம்மையார் நினைவு விதவைப் பெண்களின் மகளுக்கு திருமண உதவித் தொகை

(ii) டாக்டர் தர்மாம்பாள் நினைவு விதவைப் பெண் மறுமண உதவித் தொகை

(iii) கலப்புத் திருமண உதவித் திட்டம்

(iv) மகப்பேறு உதவித் திட்டம்

15.பெண்கள் நலத் திட்டங்கள்

**செயல்பாடு: 13**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:**

தமிழ் என்னும் சொல்லுக்கு இனிமை என்பது பொருள். நம் தாய்மொழியாம் தமிழ் காலத்தால் முந்தையது மட்டுமன்று; உலகின் முதன்மொழியும் ஆகும். வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்த பெருமை நம் தமிழ்மொழிக்கே உண்டு. தமிழிலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்துபிரிவுகளைத் தன்னகத்தே கொண்டு திகழ்கிறது. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற உயரிய

தத்துவத்தை உலகுக்கு உணர்த்தியது, நம் தமிழ்ப்பண்பாடு. உலகமே வியந்து பார்க்கும் வளமான சொற்கள் உடையது நம் அன்னைத் தமிழ்மொழி.

1. தமிழ் என்னும் சொல்லின் பொருள் யாது?

   தமிழ் என்னும் சொல்லுக்கு இனிமை என்பது பொருள்

2. உறவினர் என்னும் பொருள் தரும் சொல்லை பத்தியிலிருந்து எடுத்தெழுதுக.

   கேளிர்

3. தமிழ்மொழியில் என்னென்ன இலக்கணப் பிரிவுகள் உள்ளன?

   தமிழிலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்துபிரிவுகளைத் தன்னகத்தே கொண்டு திகழ்கிறது

4. தமிழ்ப் பண்பாடு உலகுக்கு உணர்த்திய உயரிய தத்துவம் யாது?

   யாதும் ஊரே யாவரும் கேளிர்

5. பிரித்து எழுதுக.

   தமிழிலக்கணம் - தமிழ் + இலக்கணம்

**செயல்பாடு: 14**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:**

ஒரு மொழி பொதுமக்களாலும் அதன் இலக்கியம், புல மக்களாலும் அமையப்பெறும். தமிழ்ப் பொதுமக்கள் உயர்ந்த பகுத்தறிவுடையர். எத்துணையோ ஆராய்ச்சி நடந்துவரும் இக்காலத்திலும் எத்துணையோ மொழிகளினின்று கடன் கொண்ட ஆங்கில மொழியிலும் நூலிலும் இலையைக் குறிக்க Leaf (லீஃப்) என ஒரே சொல் உள்ளது.

ஆங்கில நூல்களிலும் வேறு பல வகைகளில் இலைகளைப் பாகுபாடு செய்தனரேயன்றி, தமிழ்ப்பொதுமக்களைப் போல வன்மை மென்மை பற்றித் தாள், இலை, தோகை, ஓலை எனப் பாகுபாடு செய்தாரில்லை. இத்தகைய பாகுபாடு ஏனைய உறுப்புகளுக்குள்ளும் செய்யப்பட்டது முன்னர்க் காட்டப்பெற்றது.

(அ) தமிழ்ப் பொதுமக்கள் எத்தகைய தன்மையுடையவர்?
விடை: தமிழ்ப் பொதுமக்கள் உயர்ந்த பகுத்தறிவுடையவர்.

(ஆ) ஆங்கில மொழியிலும், நூலிலும் இலையைக் குறிக்கப் பயன்படும் ஒரே சொல் என்ன?
விடை: Leaf (லீஃப்)

(இ) இலையைக் குறிக்கும் மற்ற சொற்கள் யாவை?
விடை: தோகை, ஓலை

**செயல்பாடு: 15**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:**

விளையாட்டும் பொழுதுபோக்கும் ஓரினத்தின் பண்பாட்டு வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடம்பெறுவன. சங்க காலத்தில் இளையரும் முதியவரும் பலவகையான விளையாட்டுகளிலும் பொழுதுபோக்குகளிலும் ஈடுபட்டனர். அவற்றுள் ஒன்று, ஏறு தழுவுதல். முல்லை நிலத்தில் வாழ்ந்த மக்கள், கூரிய கொம்புகளை உடைய காளைகளை அடக்குவதனை வீர விளையாட்டாகக் கருதினர்.

1. **ஓரினத்தின் பண்பாட்டு வரலாற்றில் குறிப்பிடப்படுவன யாவை?**
   விளையாட்டும் பொழுதுபோக்கும் ஓரினத்தின் பண்பாட்டு வரலாற்றில் குறிப்பிடப்படுவன
2. **ஏறு தழுவுதல் என்றால் என்ன?**
   காளைகளை அடக்குதல் வீர விளையாட்டு ஏறு தழுவுதல் எனப்படும்
3. **உரைப்பகுதியில் இடம்பெற்றுள்ள எதிர்ச்சொற்களை எழுதுக.**
   இளையரும் x முதியவரும்
4. **ஏறு தழுவுதல் எந்த நிலத்துடன் தொடர்புடையது?**
   ஏறு தழுவுதல் முல்லை நிலத்துடன் தொடர்புடையது
5. நிரப்புக **ஏறு தழுவுதல் என்பது, ______________ விளையாட்டு. (உள்ளரங்க/ வெளியரங்க)**
   விடை: வெளியரங்க

**செயல்பாடு: 16**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:**

விரிவான கருத்தைச் சுருக்கிச் சொல்வதே பழமொழியின் சிறப்பு. சான்றாக, சுத்தம் சோறு போடும் என்னும் பழமொழி தரும் பொருளைக் காண்போம். சுத்தம் நோயற்ற வாழ்வைத் தரும். உடல்நலமே உழைப்புக்கு அடிப்படை. உழைத்துத் தேடிய பொருளால் உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றைப் பெறுகிறோம். இவை அனைத்திற்கும் சுத்தமே அடிப்படை. இவ்விரிந்த கருத்து சிறு அடிக்குள் அடங்கியுள்ளது.

1. **பழமொழியின் சிறப்பு சொல்வது**
   A. விரிவாகச்
   B. சுருங்கச்
   C. பழமையைச்

D. பல மொழிகளில்

விடை: சுருங்கச்

2. **நோயற்ற வாழ்வைத் தருவது ________**

விடை: சுத்தம்

3. **உடல் ஆரோக்கியமே அடிப்படை ________**

விடை: உழைப்பு

4. **உழைத்துத் தேடிய பொருளால் நாம் பெறுவன யாவை?**

விடை: உணவு, உடை, உறைவிடம்

5. **பத்திக்குப் பொருத்தமான தலைப்புத் தருக.**

விடை: சுத்தம்

**செயல்பாடு: 17**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:**

அது 1921 ஆம் ஆண்டு. மத்திய தரைக் கடலில், ஒரு கப்பல் இங்கிலாந்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. தமிழர் ஒருவர் கப்பலின் மேல்தளத்தில் நின்று கடல் அலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். திடீரென அவரது உள்ளத்தில் கடல்நீர் ஏன் நீலநிறமாகக் காட்சியளிக்கிறது என்ற வினா எழுந்தது. அவ்வினா அவரை உறங்க விடவில்லை. இங்கிலாந்து பயணம் முடிந்து இந்தியா திரும்பினார். பிறகு பாதரச ஆவி விளக்கு, பென்சீன் மற்றும் நிறமாலைக் காட்டி ஆகியவற்றின் உதவியுடன் தமது ஆய்வைத் தொடங்கினார்.

ஆய்வின் முடிவில் 1928 பிப்ரவரி 28 ஆம் நாள் “இராமன் விளைவு” என்னும் தமது கண்டுபிடிப்பை வெளியிட்டார். இக்கண்டுபிடிப்பு இந்தியாவிற்கு அறிவியலுக்கான முதல் நோபல் பரிசைப் பெற்றுத் தந்தது. அவர் தமது கண்டுபிடிப்பை வெளியிட்ட பிப்ரவரி 28 ஆம் நாளை நாம் ஆண்டு தோறும் “ தேசிய அறிவியல் நாள்” எனக் கொண்டாடி மகிழ்கிறோம். அவர் யார் தெரியுமா?அவர்தான் சர். சி. வி. இராமன்.

1. **இராமன் விளைவைக் கண்டறிந்தவர் யார்?**

விடை: சர். சி. வி. இராமன்

2. **இராமன் அவர்களுக்கு நோபல் பரிசைப் பெற்றுத் தந்த கேள்வி எது?**

A. கடல்நீர் ஏன் கறுப்பாகக் காட்சியளிக்கிறது?
B. கடல்நீர் ஏன் நீல நிறமாக இல்லை?
C. கடல்நீர் ஏன் நீல நிறமாகக் காட்சியளிக்கிறது?
D. கடல்நீர் ஏன் உப்பாக இருக்கிறது?

விடை: கடல்நீர் ஏன் நீல நிறமாகக் காட்சியளிக்கிறது?

3. **தேசிய அறிவியல் நாள் என்றைக்குக் கொண்டாடப்படுகிறது? ஏன்?**
   விடை: "இராமன் விளைவு" கண்டுபிடிப்பை வெளியிட்ட பிப்ரவரி 28 ஆம் நாளை நாம் ஆண்டு தோறும் " தேசிய அறிவியல் நாள்" எனக் கொண்டாடி மகிழ்கிறோம்
4. **இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பிடுக.**
   விடை: தேசிய அறிவியல் நாள்

**செயல்பாடு: 18**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:**

காமராசரின் வீட்டுக்குள் ஒரு சிறுவனும் அவனுடைய தங்கையும் நுழைய முயன்றனர். ஊழியர் அவர்களை தடுப்பதை காமராசர் கவனித்தார். உடனே அவர்களை உள்ளே அழைத்தார். "யாரைப் பார்க்க வந்தீங்க?" என்று அன்புடன் வினவினார். " எங்க அண்ணனுக்கு தேர்வுக்கு பணம் கட்ட அம்மாவிடம் வசதியில்லே. உங்களைப் பார்த்தால்,,,," என்று சிறுமி கூறி முடிப்பதற்குள் "அம்மா அனுப்பி விட்டாரா?" என்று காமராசர் கேட்டார். "இல்லை நாங்களாகத்தான் வந்தோம். அம்மா அப்பளம் போட்டு வீடு வீடாக கொண்டு போய் வித்துட்டு வருவாங்க. அதில் வரும் வருமானத்தை வச்சுதான் எங்களை படிக்க வைக்கிறாங்க" என்று குழந்தைகள் கூறினர். அதனைக் கேட்டதும் மாடியேறிச் சென்று பணத்தைக் கொண்டு வந்து கொடுத்தார்.

மறுநாள் குழந்தைகள் இருவரும் காமராசரைத் தேடி வந்தனர். "ஐயா தேர்வுக்கு பணம் கட்டியாச்சு. இந்த இரசீதை (பற்று சீட்டை) அம்மா உங்களிடம் காட்டிட்டு வரச் சொன்னாங்க" என்றனர். அதனைக் கேட்டுக் காமராசர் மனம் நெகிழ்ந்தார்.

1. காமராசரின் வீட்டிற்குள் நுழைய முயன்றவர்கள் ____________
   A. பெற்றோர்
   B. சிறுவன், சிறுமி
   C. மக்கள்
   D. ஆசிரியர்கள்
   விடை: சிறுவன், சிறுமி
2. இந்நிகழ்வு சிறுவனது குடும்பத்தின் எப்பண்பை விளக்குகிறது
   A. ஏழ்மை
   B. நேர்மை
   C. உழைப்பு
   D. கல்லாமை
   விடை: நேர்மை
3. மறுநாள் குழந்தைகள் வந்ததும் காமராசர் மனம் ________________
   விடை: நெகிழ்ந்தார்

4. சிறுவனும், சிறுமியும் எதற்காக காமராசரின் வீட்டிற்கு வந்தனர்?
விடை:சிறுவனின் தேர்வுக்கு பணம் கட்டுவதற்கு காமராசரிடம் உதவி கேட்டு வந்தனர்
5. காமராசர் செய்த உதவி யாது?
விடை:சிறுவனின் தேர்வுக்கு பணம் கட்டுவதற்காக காமராசரிடம் பண உதவி செய்தார்

**செயல்பாடு: 19**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:**

தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன. தமிழக மாட்டினங்களின் தாய் இனம் என்று 'காங்கேயம்' கருதப்படுகிறது. பிறக்கும்போது சிவப்பு நிறத்தில் இருக்கும் காங்கேயம் மாடுகள், ஆறு மாதம் வளர்ந்த பிறகு சாம்பல் நிறத்துக்கு மாறிவிடுகின்றன. பசுக்கள் சாம்பல் அல்லது வெள்ளை நிறத்தில் இருக்கின்றன. மிடுக்கான தோற்றத்துக்குப் பெயர்பெற்ற காங்கேயம் இனக் காளைகள் ஏறுதழுவுதல் நிகழ்விற்கும் பெயர் பெற்றுள்ளன. அத்துடன், ஏர் உழுவதற்கும் வண்டி இழுப்பதற்கும் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. கடுமையாக உழைக்கக்கூடிய காங்கேயம் மாடுகள் கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலத்தவரால் விரும்பி வாங்கிச் செல்லப்படுகின்றன. இலங்கை, பிரேசில், பிலிப்பைன்ஸ், மலேசியா ஆகிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கரூர் அமராவதி ஆற்றுத் துறையில் காங்கேய மாடுகளின் உருவம் பொறித்த கி.மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த சேரர் கால நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

**1. பின்வரும் நான்கு வினாக்களுக்கும் பொருந்தும் ஒரு விடையைத் தருக.**

அ) மிடுக்குத் தோற்றத்திற்கும் ஏறுதழுவுதலுக்கும் பெயர் பெற்றவை எவை?
விடை: காங்கேயம் இனக்காளைகள்
ஆ) தமிழக மாட்டினங்களின் தாய் இனம் என்று கருதப்படுவது யாது?
விடை: காங்கேயம் இனக்காளைகள்
இ) பிற மாநிலத்தவர் விரும்பி வாங்கிச் செல்கின்ற காளை இனம் எது?
விடை: காங்கேயம் இனக்காளைகள்
ஈ) மேற்கண்ட பத்தி எதைக் குறிப்பிடுகிறது?
விடை: காங்கேயம் இனக்காளைகள்

**செயல்பாடு: 20**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:**

தமிழ் என்னும் சொல்லுக்கு இனிமை என்பது பொருள். நம் தாய்மொழியாம் தமிழ் காலத்தால் முந்தையது மட்டுமன்று; உலகின் முதன்மொழியும் ஆகும். வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்த பெருமை நம் தமிழ்மொழிக்கே உண்டு. தமிழிலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்துபிரிவுகளைத் தன்னகத்தே கொண்டு திகழ்கிறது. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற உயரிய தத்துவத்தை உலகுக்கு உணர்த்தியது, நம் தமிழ்ப்பண்பாடு. உலகமே வியந்து பார்க்கும் வளமான சொற்கள் உடையது நம் அன்னைத் தமிழ்மொழி.

1. தமிழ் என்னும் சொல்லின் பொருள் யாது?
   விடை: தமிழ் என்னும் சொல்லுக்கு இனிமை என்பது பொருள்
2. உறவினர் என்னும் பொருள் தரும் சொல்லை பத்தியிலிருந்து எடுத்தெழுதுக.
   விடை: கேளிர்
3. தமிழ்மொழியில் என்னென்ன இலக்கணப் பிரிவுகள் உள்ளன?
   விடை: தமிழிலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்துபிரிவுகளைத் தன்னகத்தே கொண்டு திகழ்கிறது
4. தமிழ்ப் பண்பாடு உலகுக்கு உணர்த்திய உயரிய தத்துவம் யாது?
   விடை: யாதும் ஊரே யாவரும் கேளிர்

**செயல்பாடு: 21**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:**

தம் வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தினர் கருதுகின்றனர். உறவினர் வேறு, விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். அதனால் தான் 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் அன்றே கூறியுள்ளார்.

(அ) விருந்தினர் என்போர் யாவர்?
விடை: விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தினர் கருதுகின்றனர். உறவினர் வேறு, விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர்.

(ஆ) விருந்து குறித்து தொல்காப்பியர் கூறியது யாது?
விடை: 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் அன்றே கூறியுள்ளார்.

(இ) இவ்வுரைப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.
விடை: விருந்தோம்பல்

**செயல்பாடு: 22**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:**

மார்ஷல் ஏ. நேசமணி இளம் வயதிலேயே சமூக விடுதலைக்காகப் போராடியவர்; வழக்கறிஞர். நாகர்கோவில் நகர்மன்றத் தலைவராகவும் சட்டமன்ற உறுப்பினராகவும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார். குமரி மாவட்டப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர்; இதனால் மார்ஷல் நேசமணி என்று அழைக்கப்பட்டார். 1956 நவம்பர் 1ஆம் நாள் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்து, தமிழகத்தின் தென் எல்லையாக மாறியது. இவருடைய நினைவைப் போற்றும் வகையில் தமிழக அரசு இவருக்கு நாகர்கோவிலில் சிலையோடு மணிமண்டபமும் அமைத்துள்ளது.

(அ) இளம் வயதில் சமூக விடுதலைக்காக போராடியவர் யார்?
விடை: மார்ஷல் ஏ. நேசமணி

(ஆ) 1956 நவம்பர் 1-ல் தமிழ்நாட்டுடன் இணைந்த மாவட்டம் எது?
விடை: கன்னியாகுமரி

(இ) நேசமணியின் சிறப்பைப் போற்றும் வகையில் தமிழக அரசு செய்தது யாது?
விடை: நாகர்கோவிலில் சிலையோடு மணிமண்டபமும் அமைத்துள்ளது.

**பத்தியிலிருந்து வினாவிற்கான சரியான விடையைத் தேர்ந்தெடு:**

| **1.கீழ்க்கண்ட பத்தியினை படித்து வினாவிற்கு சரியான விடையைத் தேர்தெடுக.** |
|---|
| பறவைகள் கண்டம்விட்டுக் கண்டம் பறக்கின்றன. அவை பெருங்கடல்களையும் மலைகளையும் கடந்து போகின்றன. குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு புறப்பட்ட இடத்திற்கே வந்து சேர்கின்றன. இவ்வாறு பறவைகள் இடம் பெயர்தலை வலசை போதல் என்பர். நீர்வாழ் பறவைகளே பெரும்பாலும் வலசை போகின்றன. உணவு, இருப்பிடம், தட்பவெப்பநிலை மாற்றம், இனப்பெ ருக்கம் இவற்றிற்காகவே பறவைகள் இடம் பெயர்கின்றன. நிலவு, விண்மீன், புவிஈர்ப்புப் புலம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே பறவைகள் இடம் பெயர்கின்றன. பொதுவாக வடக்கிலிருந்து தெற்கு நோக்கியும், மேற்கிலிருந்து கிழக்கு நோக்கியும் பறவைகள் வலசை போகின்றன. |
| a) பறவைகள் இடம் பெயர்தலை எவ்வாறு அழைப்பார்கள்?<br>விடை: வலசை போதல்<br>b) எவற்றிற்காகவே பறவைகள் இடம் பெயர்கின்றன?<br>விடை: உணவு, இருப்பிடம், தட்பவெப்பநிலை மாற்றம், இனப்பெருக்கம்<br>c) எதை அடிப்படையாகக் கொண்டே பறவைகள் இடம் பெயர்கின்றன?<br>விடை: நிலவு, விண்மீன், புவிஈர்ப்புப் புலம் |

**2.கீழ்க்கண்ட பத்தியினை படித்து வினாவிற்கு சரியான விடையைத் தேர்தெடுக்க.**

காமராசர் முதல் அமைச்சராகப் பதவியேற்ற நேரத்தில் ஏறக்குறைய ஆறாயிரம் தொடக்கப்பள்ளிகள் மூடப்பட்டு இருந்தன. அவற்றை உடனடியாகத் திறக்க ஆணையிட்டார். மாநிலம் முழுவதும் அனைவருக்கும் இலவசக் கட்டாயக் கல்விக்கான சட்டத்தை இயற்றித் தீவிரமாக நடைமுறைப்படுத்தினார். மாணவர்கள் பசியின்றிப் படிக்க மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார். பள்ளிகளில் ஏற்றத்தாழ்வின்றிக் குழந்தைகள் கல்வி கற்கச் சீருடைத் திட்டத்தை அறிமுகம் செய்தார். பள்ளிகளின் வசதிகளைப் பெருக்கப் பள்ளிச்சீரமைப்பு மாநாடுகள் நடத்தினார். மாணவர்கள் உயர்கல்வி பெறப் பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், கால்நடைமருத்துவக் கல்லூரிகள், ஆசிரியப் பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றைப் புதிதாகத் தொடங்கினார். தமிழ்நாட்டில் பல கிளைநூலகங்களைத் தொடங்கினார். இவ்வாறு கல்விப்புரட்சிக்கு வித்திட்டவர் காமராசரே ஆவார். நடுவண் அரசு 1976இல் பாரதரத்னா விருது வழங்கியது

a) கல்விப்புரட்சிக்கு வித்திட்டவர்?

விடை: காமராசர்

b) காமராசர் பாரத ரத்னா விருது பெற்ற ஆண்டு?

விடை: 1976

c) காமராஜர் துவங்கிய திட்டங்கள்?

விடை: இலவசக் கட்டாயக் கல்விக்கான சட்டம், மதிய உணவுத் திட்டம், சீருடைத்திட்டம்

**3.கீழ்க்கண்ட பத்தியினை படித்து வினாவிற்கு சரியான விடையைத் தேர்தெடுக்க**

வாழ்க்கைக்கு வளம் தரும் மழைக்கடவுளை வழிபடும் நோக்கில் அக்காலத்தில் போகிப்பண்டிகை இந்திரவிழாவாகக் கொண்டாடப்பட்டது. தை முதல் நாளில் திருவள்ளுவராண்டு தொடங்குகிறது. தை இரண்டாம் நாள் திருவள்ளுவர் நாள் கொண்டாடப்படுகிறது. திருவள்ளுவர் கி.மு (பொ.ஆ.மு) 31இல் பிறந்தவர். எனவே, திருவள்ளுவராண்டைக் கணக்கிட நடைமுறை ஆண்டுடன் 31 ஐக் கூட்டிக்கொள்ள வேண்டும். (எ.கா.) 2018 + 31 = 2049. அறுவடைத் திருநாள் ஆந்திரம், கர்நாட கம், மராட்டியம், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் மகரசங்கராந்தி என்ற பெயரில் கொண்டாடப்படுகிறது. பஞ்சாப் மாநிலத்தில் லோரி என்று கொண்டாடப்படுகிறது. குஜராத், இராஜஸ்தான் மாநிலங்களில் உத்தராயன் என்று கொண்டாடப்படுகிறது.

a) அக்காலத்தில் போகிப்பண்டிகையை எவ்வாறு கொண்டாடப்பட்டது?

விடை: இந்திர விழாவாகக் கொண்டாடப்பட்டது.

b) திருவள்ளுவர் நாள் எப்போது கொண்டாடப்படுகிறது?

விடை: தை இரண்டாம் நாள்

c) அறுவடைத் திருநாளை மகரசங்கராந்தி என எந்தந்த மாநிலங்கள் கொண்டாடுகின்றனர்?

விடை: ஆந்திரம், கர்நாட கம், மராட்டியம், உத்திரப் பிரதேசம்.

**4.கீழ்க்கண்ட பத்தியினை படித்து வினாவிற்கு சரியான விடையைத் தேர்தெடுக்க**

நம்மிடம் கூடுதலாக இருக்கும் பொருள்களைக் கொடுத்து நமக்குத் தேவையான பொருள்களைப் பெற்றுக் கொள்வது பண்டமாற்று வணிகம் ஆகும். நெல்லைக் கொடுத்து அதற்குப் பதிலாக உப்பைப் பெற்றனர். வணிகத்தைத் தரைவழி வணிகம், நீர்வழி வணிகம் எனப் பிரிக்கலாம். தமிழ்நாட்டின் தலைசிறந்த துறைமுகமாகப் பூம்புகார் விளங்கியது. அவ்வூர்த் துறைமுகத்தில் பல்வேறு நாட்டுக் கப்பல்கள் தத்தம் நாட்டுக் கொடிகளோடு வந்து நின்றன. அவற்றின் மூலம் வெளிநாட்டுப் பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டன. தமிழ்நாட்டுப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

a) பண்டமாற்று வணிகம் என்றால் என்ன?

விடை: நம்மிடம் கூடுதலாக இருக்கும் பொருள்களைக் கொடுத்து நமக்குத் தேவையான பொருள்களைப் பெற்றுக் கொள்வது பண்டமாற்று வணிகம் ஆகும்.

b) தமிழ்நாட்டின் தலைசிறந்த துறைமுகம்?

விடை: தமிழ்நாட்டின் தலைசிறந்த துறைமுகமாகப் பூம்புகார் விளங்கியது.

c) வணிகத்தின் பிரிவுகள்?

விடை: வணிகத்தைத் தரைவழி வணிகம், நீர்வழி வணிகம் எனப் பிரிக்கலாம்.

**5.கீழ்க்கண்ட பத்தியினை படித்து வினாவிற்கு சரியான விடையைத் தேர்தெடுக்க**

1919 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் காந்தியடிகள் சென்னைக்கு வந்தார். அப்போது ஆங்கில அரசு ரௌலட் சட்டம் என்னும் கடுமையான சட்டத்தை நடைமுறைப்படுத்தி இருந்தது. அதனை எதிர்த்துப் பெரிய போராட்டத்தை நடத்தக் காந்தியடிகள் திட்டமிட்டார். தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த காலத்தில் தமிழ்மொழியைக் கற்கத் தொடங்கியதாகக் கூறியுள்ளார். 1937 ஆம் ஆண்டு சென்னையில் இலக்கிய மாநாடு ஒன்று நடைபெற்றது. அம்மாநாட்டுக்குக் காந்தியடிகள் தலைமை வகித்தார். உ.வே.சாமிநாதர் வரவேற்புக்குழுத் தலைவராக இருந்தார்.

a) ரௌலட் சட்டம் எந்த வருடம் நடைமுறைப்படுத்தப்பட்டது?

விடை: 1919

b) இலக்கிய மாநாடு எங்கு - எந்த வருடம் நடைபெற்றது?

விடை: சென்னை - 1937

c) இலக்கிய மாநாட்டிற்கு வரவேற்புக்குழுத் தலைவர் யார்?

விடை: உ.வே.சாமிநாதர்

**6.கீழ்க்கண்ட பத்தியினை படித்து வினாவிற்கு சரியான விடையைத் தேர்தெடுக்க**

அன்னை தெரசாவிற்கு அடுத்து அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற இந்தியர் கைலாஷ் சத்யார்த்தி. அவருடைய மனித நேயம் பிற்காலத்தில் அவரைப்பள்ளி செல்லாத குழந்தைகள் மேல் பரிவு கொள்ள வைத்தது. அதற்காக அவர் குழந்தைகளைப் பாதுகாப்போம் என்னும் இயக்கத்தைத் தொடங்கினார். கடந்த முப்பது ஆண்டுகளில் எண்பத்து ஆறாயிரம் குழந்தைத் தொழிலாளர்களை மீட்டுள்ளார். உலகக் குழந்தைகள் கல்வி உரிமைக்காக 103 நாடுகளில் 80,000 கி.மீ தூரம் நடைப்பயணம் சென்றுள்ளார். குழந்தைகளின் கல்வி மற்றும் உரிமைக்காக நாடு கடந்து பரப்புரை ஆற்றி வருகிறார்.

a) அன்னை தெரசாவிற்கு அடுத்து அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற இந்தியர்?

விடை: கைலாஷ் சத்யார்த்தி

b) கைலாஷ் சத்யார்த்தி துவங்கிய இயக்கத்தின் பெயர்?

விடை: குழந்தைகளைப் பாதுகாப்போம்

c) உலகக் குழந்தைகள் கல்வி உரிமைக்காக கைலாஷ் சத்யார்த்தி எத்தனை நாடுகள் & எவ்வளவு கி.மீ நடைப்பயணம் சென்றுள்ளார்?

விடை: 103 நாடுகளில் 80,000 கி.மீ தூரம் நடைப்பயணம் சென்றுள்ளார்

**7.கீழ்க்கண்ட பத்தியினை படித்து வினாவிற்கு சரியான விடையைத் தேர்தெடுக்க**

பிரம்மபுத்திரா ஆற்றில் ஆண்டுதோறும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும். 1979 ஆம் ஆண்டும் அது போன்று ஒரு பெருவெள்ளம் ஏற்பட்டது. வெள்ளத்தில் அடித்து வரப்பட்ட ஏராளமான பாம்புகள், மரங்கள் இல்லாத இத்தீவில் கரை ஒதுங்கின. ஜிட்டுகலிட்டா என்னும் வனவிலங்கு ஆர்வலர் என்னுடைய காட்டைப் பற்றிக் கேள்விப்பட்டு இங்கு வந்தார். நான் இந்தக் காட்டை உருவாக்கிய முறையை அவரிடம் கூறினேன். காடு பற்றி டைம்ஸ் ஆப் இந்தியா இதழில் செய்தி வெளிவந்தது. புலிகள் வந்த பிறகுதான் இக்காட்டின் உணவுச்சங்கிலி நிறைவடைந்தது, நான் புலிகளுக்குத் தொல்லையில்லாமல் எனது பாதைகளை வகுத்துக்கொண்டு இக்காட்டைப் பாதுகாத்து வருகிறேன்.

a) எந்த ஆற்றில் ஆண்டுதோறும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும்?

விடை: பிரம்மபுத்திரா

b) எந்த விலங்கு வந்த பிறகு இக்காட்டின் உணவுச்சங்கிலி நிறைவடைந்தது?

விடை: புலிகள்

c) ஜிட்டுகலிட்டா என்பவர் யார்?

விடை: வனவிலங்கு ஆர்வலர்

**8.கீழ்க்கண்ட பத்தியினை படித்து வினாவிற்கு சரியான விடையைத் தேர்தெடுக்க**

முத்துராமலிங்கத்தேவர் கி.பி. (பொ.ஆ.) 1908 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் முப்பதாம் நாள் இராமநாதபுரம் மாவட்டத்தில் பசும்பொன் என்னும் ஊரில் செல்வச் செழிப்பு மிகுந்த குடும்பத்தில் பிறந்தார். மேலும் பல தலைவர்கள் முத்துராமலிங்கத்தேவரின் பேச்சாற்றலைப் பாராட்டியுள்ளனர். 'தென்னாட்டுச்சிங்கம் என்று தேவரைச் சொல்லுகிறார்களே, அது சாலப்பொருந்தும் என அவரது தோற்றத்தைப் பார்த்த உடனேயே நினைத்தேன். அவர் பேசத் தொடங்கியதும் சிங்கத்தின் முழக்கம் போலவே இருந்தது' என்று அறிஞர் அண்ணாவும் அவரைப் புகழ்ந்துரைத்துள்ளார்.

'முத்துராமலிங்கத்தேவர் பேச்சு உள்ளத்தில் இருந்து வெளிவருகிறது; உதடுகளிலிருந்து அல்ல. உள்ளத்தால் எதிலும் பற்றற்று உண்மையெனப் பட்டதை மறைக்காமல் அப்படியே பேசிவிடுவது அவர் வழக்கம்' என்று மூதறிஞர் இராஜாஜி பாராட்டியுள்ளார்.

a) முத்துராமலிங்கத்தேவர் எங்கு பிறந்தார்?

விடை: இராமநாதபுரம் மாவட்டத்தில் பசும்பொன் என்னும் ஊரில் செல்வச் செழிப்பு மிகுந்த குடும்பத்தில் பிறந்தார்.

b) முத்துராமலிங்கத்தேவரைப் பற்றி அண்ணா கூறுவது?

விடை: 'தென்னாட்டுச்சிங்கம் என்று தேவரைச் சொல்லுகிறார்களே, அது சாலப்பொருந்தும் என அவரது தோற்றத்தைப் பார்த்த உடனேயே நினைத்தேன். அவர் பேசத் தொடங்கியதும் சிங்கத்தின் முழக்கம் போலவே இருந்தது' என்று அறிஞர் அண்ணாவும் அவரைப் புகழ்ந்துரைத்துள்ளார்.

c) முத்துராமலிங்கத்தேவரைப் பற்றி ராஜாஜி கூறுவது?

விடை: 'முத்துராமலிங்கத்தேவர் பேச்சு உள்ளத்தில் இருந்து வெளிவருகிறது; உதடுகளிலிருந்து அல்ல. உள்ளத்தால் எதிலும் பற்றற்று உண்மையெனப் பட்டதை மறைக்காமல் அப்படியே பேசிவிடுவது அவர் வழக்கம்'.

**9.கீழ்க்கண்ட பத்தியினை படித்து வினாவிற்கு சரியான விடையைத் தேர்தெடுக்க**

கப்பல் பல்வேறு வகையான உறுப்புகளை உடையது. எரா, பருமல், வங்கு, கூம்பு, பாய்மரம், சுக்கான், நங்கூரம் போன்றவை கப்பலின் உறுப்புகளுள் சிலவாகும். கப்பலின் முதன்மையான உறுப்பாகிய அடிமரம் எரா எனப்படும். குறுக்கு மரத்தைப் பருமல் என்பர். கப்பலைச் செலுத்துவதற்கும் உரிய திசையில் திருப்புவதற்கும் பயன்படும் முதன்மையான கருவி சுக்கான் எனப்படும். கப்பலை நிலையாக ஓரிடத்தில் நிறுத்தி வைக்க உதவும் உறுப்பு நங்கூரம் ஆகும். சமுக்கு என்னும் ஒரு கருவியையும் கப்பல்களில் பயன்படுத்தினர் என்று கப்பல் சாத்திரம் என்னும் நூல் குறிப்பிடுகிறது. இது காந்த ஊசி பொருத்தப்பட்ட திசைகாட்டும் கருவியாக இருக்கலாம் என ஆய்வா ளர்கள் கருதுகின்றனர். கப்பல் செலுத்துபவரை மாலுமி, மீகாமன், நீகான், கப்பலோட்டி முதலிய பல பெயர்களால் அழைப்பர்.

a) கப்பலின் உறுப்புகள் யாவை?

விடை: எரா, பருமல், வங்கு, கூம்பு, பாய்மரம், சுக்கான், நங்கூரம்.

b) கப்பலைச் செலுத்துவதற்கும் உரிய திசையில் திருப்புவதற்கும் பயன்படும் முதன்மையான கருவி _______ எனப்படும்.

விடை: சுக்கான்

c) கப்பல் செலுத்துபவரை எவ்வாறு அழைப்பர்?

விடை: மாலுமி, மீகாமன், நீகான், கப்பலோட்டி.

**10.கீழ்க்கண்ட பத்தியினை படித்து வினாவிற்கு சரியான விடையைத் தேர்தெடுக்க**

கல்வி கற்பதற்காகவே குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புகிறோம். பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களால்தான் இளம்பிள்ளைகளை நல்ல குடிமக்களாக உருவாக்க முடியும். நமது எதிர்காலத்தை உருவாக்கும் பள்ளிக்குக் கோயில் என்று பெயர் வைத்தார் பாரதியார். ”பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்; எங்கள் பாரத தேசமென்று தோள்கொட்டுவோம்” என்றார். ஏன் அப்படிச் சொன்னார் பாரதி? ஏனெனில் கல்விக் கூடங்களில்தான் குழந்தைகளின் எதிர்காலம் நிர்ணயிக்கப்படுகிறது. மாணவர்கள் எல்லோரும் எதிர்காலத்திலே மேதைகளாக ஆகவேண்டும். இந்த உலகமே போற்றக்கூடிய அறிஞர்களாக ஆகவேண்டும். அதற்காகத்தான் கோயில்களாகிய பள்ளிக்கூடங்களில் குழந்தைகளைக் கொண்டு வந்து விடுகிறோம்.

a) யார் இளம்பிள்ளைகளை நல்ல குடிமகனாக உருவாக்குவார்?

விடை: ஆசிரியர்கள்

b) யார் பள்ளிக்குக் கோயில் என்று பெயர் வைத்தார்?

விடை: பாரதியார்

c) இப்பத்திக்கு பொருத்தமான தலைப்பு?

விடை: பள்ளிக்கூடத்தின் அத்தியாவசியம்

**11.கீழ்க்கண்ட பத்தியினை படித்து வினாவிற்கு சரியான விடையைத் தேர்தெடுக்க**

வேட்டைக்குச் செல்லுதல், நடனம் ஆடுதல், போர் செய்தல் போன்ற காட்சிகள் வரையப்பட்டன. பெரும்பாலும் கோட்டோவியமாக இருப்போம். மண் மற்றும் கல் துகள்களைக் கொண்டு எங்களுக்கு வண்ணம் தீட்டினர். குகை ஓவியங்களை உற்று நோக்கினால் பழந்தமிழரின் வாழ்க்கை முறைகளை அறிந்து கொள்ளலாம். தஞ்சைப் பெரியகோயிலில் சுவர் ஓவியங்களை ஏராளமாகக் காண முடியும். ஓவியம் வரையப் பயன்படும் துணியை எழினி, திரைச்சீலை, கிழி, படாம் என பலப் பெயர்களில் கூறுவார்கள். ஓவு, ஓவியம், ஓவம், சித்திரம், படம், படாம், வடிக்கைச்செய்தி என்பன ஓவியத்திற்கு வேறுப் பெயர்கள்.

a) பழந்தமிழரின் வாழ்க்கை முறைகளை கூறும் ஓவியம்?

விடை: குகை ஓவியம்.

b) குகை ஓவியங்களை எங்கு அதிகமாக காணலாம்?

விடை: தஞ்சைப் பெரியகோயில்

c) ஓவியத்திற்கு வேறுப் பெயர்கள்?

விடை: ஓவு, ஓவியம், ஓவம், சித்திரம், படம், படாம், வடிக்கைச்செய்தி

**12.கீழ்க்கண்ட பத்தியினை படித்து வினாவிற்கு சரியான விடையைத் தேர்தெடுக்க**

திருநெல்வேலிப் பகுதியை வளம் செழிக்கச் செய்யும் ஆறு தாமிரபரணி ஆகும். இதனைத் தண்பொருநை நதி என்று முன்னர் அழைத்தனர். இது பச்சையாறு, மணிமுத்தாறு, சிற்றாறு, காரையாறு, சேர்வலாறு, கடனாநதி என்று பல கிளை ஆறுகளாகப் பிரிந்து திருநெல்வேலியை நீர்வளம் மிக்க மாவட்டமாகச் செய்கிறது. தாமிரபரணி ஆற்றின் மேற்குக் கரையில் திருநெல்வேலியும் கிழக்குக் கரையில் பாளையங்கோட்டையும் அமைந்துள்ளன.இவ்விரு நகரங்களும் இரட்டை நகரங்கள் என அழைக்கப்படுகின்றன. பாளையங்கோட்டையில் அதிக அளவில் கல்வி நிலையங்கள் இருப்பதால் அந்நகரைத் தென்னிந்தியாவின் ஆக்ஸ்போர்டு என்பர்.

a) தண்பொருநை நதி?

| |
|---|
| விடை: தாமிரபரணி<br>b) தாமிரபரணியின் துணை ஆறுகள்?<br>விடை: பச்சையாறு, மணிமுத்தாறு, சிற்றாறு,காரையாறு, சேர்வலாறு, கடனாநதி.<br>c) பாளையங்கோட்டையில் அதிக அளவில் கல்வி நிலையங்கள் இருப்பதால் அந்நகரைத் _______ என்பர்.<br>விடை: தென்னிந்தியாவின் ஆக்ஸ்போர்டு. |
| **13.கீழ்க்கண்ட பத்தியினை படித்து வினாவிற்கு சரியான விடையைத் தேர்தெடுக்க** |
| “பழமையான மொழிகளிலே ஒன்றைத்தான் ஆட்சிமொழி ஆக்க வேண்டும் என்றால், அது தமிழ்மொழிதான் என்று நான் உறுதியாகச் சொல்வேன். இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே 1962 ஆம் ஆண்டு போர் மூண்டது. அப்போது தனது ஒரே மகனைப் போர் முனைக்கு அனுப்ப ஆயத்தமாக இருப்பதாகத் தெரிவித்து அந்தத் தலைவர் அப்போதைய முதன்மை அமைச்சர் ஜவகர்லால் நேருவுக்குக் கடிதம் எழுதினார். அவர்தான் கண்ணியமிகு காயிதே மில்லத். அவரது இயற்பெயர் முகம்மது சுமாயில். ஆனால் மக்கள் அவரை அன்போடு காயிதே மில்லத் என்று அழைத்தனர். தமிழக அரசியல் வானில் கவ்வியிருந்த காரிருளை அகற்ற வந்த ஒளிக்கதிராகக் காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் அவர்கள் திகழ்கிறார் என்று அறிஞர் அண்ணா கூறுகிறார். இப்படிப்பட்ட தலைவர் கிடைப்பது அரிது. அவர் நல்ல உத்தமமான மனிதர் என பெரியார் குறிப்பிட்டுள்ளார். |
| a) இந்தியா சீனா போர் எந்த ஆண்டு நடைபெற்றது?<br>விடை: 1962<br>b) காயிதே மில்லத் அவர்களின் இயற்பெயர்?<br>விடை: இயற்பெயர் முகம்மது இஸ்மாயில்<br>c) அறிஞர் அண்ணா காயிதே மில்லத்தை எவ்வாறு குறிப்பிட்டுள்ளார்?<br>விடை: தமிழக அரசியல் வானில் கவ்வியிருந்த காரிருளை அகற்ற வந்த ஒளிக்கதிராகக் காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் அவர்கள் திகழ்கிறார். |
| **14.கீழ்க்கண்ட பத்தியினை படித்து வினாவிற்கு சரியான விடையைத் தேர்தெடுக்க** |
| மிகவும் பழமையான கைவினைக்கலைகளுள் ஒன்று மண்பாண்டக் கலை. சிந்துசமவெளி அகழாய்வில் பானைஓடுகள் கிடைத்துள்ளன என்பதைப் படித்திருப்பீர்களே. தமிழ்நாட்டில் ஆதிச்சநல்லூரில் முதுமக்கள் தாழிகள் கிடைத்துள்ளன. நாகை மாவட்டம் செம்பியன் கண்டியூரில் கலையழகு மிகுந்த |

| |
|---|
| மண்கலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மதுரைக்கு அருகில் உள்ள கீழடியில் ஏராளமான சுடுமண் பொருள்கள் கிடைத்துள்ளன. இவை எல்லாம் தமிழருக்கும் மண்பாண்டக்கலைக்கும் உள்ள தொடர்பைக் காட்டும் சான்றுகள் ஆகும். மண்பாண்டங்களில் சமைத்தால் உணவு நல்ல சுவையுடன் இருக்கும். மேலும் உடல்நலத்திற்கும் நல்லது. மண்பானையில் வைத்த தண்ணீர் குளிர்ச்சியாக இருக்கும். இப்போது மண்பாண்டங்களின் பயன்பாடு குறைந்து வருகிறது. ஆனால் இன்னும் திருவிழாக்களிலும், சமயச் சடங்குகளிலும் மண்பானைகளே பயன்பட்டு வருவது சற்று ஆறுதல் அளிக்கிறது. இந்த மண்பாண்டக் கலையின் இன்னொரு வளர்ச்சி நிலைதான் சுடுமண் சிற்பக்கலை. |
| a) தமிழ்நாட்டில் எங்கு முதுமக்கள் தாழிகள் கிடைத்துள்ளன?<br>விடை: ஆதிச்சநல்லூர்<br>b) கீழடி எங்குள்ளது?<br>விடை: மதுரைக்கு அருகில் உள்ளது<br>c) மண்பாண்டங்களின் முக்கியத்துவங்கள்?<br>விடை: மண்பாண்டங்களில் சமைத்தால் உணவு நல்ல சுவையுடன் இருக்கும். மேலும் உடல்நலத்திற்கும் நல்லது. மண்பானையில் வைத்த தண்ணீர் குளிர்ச்சியாக இருக்கும். |
| **15.கீழ்க்கண்ட பத்தியினை படித்து வினாவிற்கு சரியான விடையைத் தேர்தெடுக்க** |
| எம்.ஜி.ஆர். தமிழக முதலமைச்சராக இருந்தபோது ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத்தரம் உயர அரும்பாடுபட்டார். உழவர்களின் கடன் தள்ளுபடி, ஏழைகளுக்கான வீட்டு வசதித்திட்டம், ஆதரவற்ற மகளிருக்குத் திருமண உதவித்திட்டம், தாய்சேய் நல இல்லங்கள், பற்பொடி வழங்கும் திட்டம், நலிவடைந்த பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பாடநூல் வழங்கும் திட்டம், முதியோருக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம், வேலைவாய்ப்பு அற்றவர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திப் புகழ் பெற்றார். மதுரை மாநகரில் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டைச் சிறப்பாக நடத்தினார். தஞ்சையில் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்தார். |
| a) எம்.ஜி.ஆர் செயல்படுத்திய திட்டங்கள்?<br>விடை: உழவர்களின் கடன் தள்ளுபடி, ஏழைகளுக்கான வீட்டு வசதித்திட்டம், ஆதரவற்ற மகளிருக்குத் திருமண உதவித்திட்டம், தாய்சேய் நல இல்லங்கள், பற்பொடி வழங்கும் திட்டம், நலிவடைந்த பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்குப் |

பாடநூல் வழங்கும் திட்டம், முதியோருக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம், வேலைவாய்ப்பு அற்றவர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம்.

b) ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு எங்கு நடந்தது?

விடை: மதுரை

c) தமிழ்ப் பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்தார்?

விடை: எம்.ஜி.ஆர்

**16.கீழ்க்கண்ட பத்தியினை படித்து வினாவிற்கு சரியான விடையைத் தேர்தெடுக்க**

அம்பேத்கர் 1891 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14 ஆம் நாள் ராம்ஜி சக்பால் - பீமாபாய் இணையருக்குப் பதினான்காவது குழந்தையாகப் பிறந்தார். இவரது ஊர் மகாராட்டிர மாநிலத்தில் உள்ள இரத்தினகிரி மாவட்டத்தைச் சேர்ந்த அம்பவாதே என்பதாகும். இவருடைய தந்தை இராணுவப்பள்ளி ஒன்றில் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தார். விடுதலைபெற்ற இந்தியாவின் முதல் சட்ட அமைச்சராகவும் இந்திய அரசியல் சாசனத்தின் தந்தையாகவும் விளங்கியவர் பீமாராவ் ராம்ஜி அம்பேத்கர். இவர் சமூகச் சீர்திருத்தவாதியாக மட்டுமல்லாமல், மிகச்சிறந்த பொருளியல் அறிஞராகவும் அரசியல் தத்துவமேதையாகவும் பகுத்தறிவுச் சிந்தனயாளராகவும் விளங்கினார். சிறந்த எழுத்தாளராகவும் பேச்சாளராகவும் மக்களால் போற்றப்பட்டார்.

a) டாக்டர். அம்பேத்கர் எங்கு எப்போது பிறந்தார்?

விடை: அம்பேத்கர் 1891 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14 ஆம் நாள் & இவரது ஊர் மகாராட்டிர மாநிலத்தில் உள்ள இரத்தினகிரி மாவட்டத்தைச் சேர்ந்த அம்பவாதே என்பதாகும்.

b) இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர்?

விடை: டாக்டர். அம்பேத்கர்

c) அம்பேத்கரின் பெற்றோர் யார்?

விடை: ராம்ஜி சக்பால் - பீமாபாய்

**17.கீழ்க்கண்ட பத்தியினை படித்து வினாவிற்கு சரியான விடையைத் தேர்தெடுக்க**

உலகின் குறிப்பிடத்தக்க, பழைமையான நாகரிகங்களுள் இந்திய நாகரிகமும் ஒன்று. மொகஞ்சதாரோ - ஹரப்பா அகழாய்வுக்குப் பின்னர் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதைத் திராவிட நாகரிகம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். திராவிடர் பேசிய மொழியே திராவிட மொழி எனப்படுகிறது. திராவிடம் என்ற சொல்லை முதலில் குறிப்பிட்டவர் குமரிலபட்டர். தமிழ் என்ற

| |
|---|
| சொல்லிலிருந்துதான் திராவிடா என்ற சொல் பிறந்தது என்று மொழி ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். ஹீராஸ் பாதிரியார் என்பார் இம்மாற்றத்தைத் தமிழ் -தமிழா - தமிலா -டிரமிலா - ட்ரமிலா - த்ராவிடா - திராவிடா என்று விளக்குகின்றார். முதன் முதலில் பிரான்சிஸ் எல்லிஸ் என்பார் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்றமொழிகளை ஒப்புமைப்படுத்தி ஆய்ந்து இவை தனியொரு மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவை என்ற கருத்தை முன்வைத்தார். இம்மொழிகளை ஒரே இனமாகக் கருதித் தென்னிந்தியமொழிகள் எனவும் பெயரிட்டார். இதனையொட்டி, மால்தோ, தோடா, கோண்டி முதலான மொழிகள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஹோக்கன் என்பார் இம்மொழிகள் அனைத்தையும் இணைத்துத் தமிழியன் என்று பெயரிட்டதோடு ஆரிய மொழிகளிலிருந்து இவை மாறுபட்டவை என்றும் கருதினார். மாக்ஸ் முல்லரும் இதே கருத்தைக் கொண்டிருந்தார். |
| a) திராவிடம் என்ற சொல்லை முதலில் குறிப்பிட்டவர்?<br>விடை: குமரிலபட்டர்<br>b) தென்னிந்திய மொழிகளின் மீதான ஆய்வு மேற்கொண்டவர்?<br>விடை: பிரான்சிஸ் எல்லிஸ்<br>c) தமிழ் திராவிடமாக மாறும் மாற்றாத்தை விவரி?<br>விடை: தமிழ் - தமிழா - தமிலா - டிரமிலா - ட்ரமிலா - த்ராவிடா - திராவிடா |
| **18.கீழ்க்கண்ட பத்தியினை படித்து வினாவிற்கு சரியான விடையைத் தேர்தெடுக்க** |
| சிந்துவெளி நாகரிக வரலாற்றிலும் காளை முக்கியப் பங்கு வகிக்கின்றது. இம்மக்கள் காளையைத் தெய்வமாக வழிபட்டதை அகழாய்வில் கிடைக்கப்பெற்ற சான்றுகள் வாயிலாக அறிகிறோம். சிந்து வெளி அகழாய்வுகளில் கண்டறியப்பட்ட மாடு தழுவும் கல் முத்திரை ஒன்று தமிழர்களின் பண்பாட்டுத் தொல்லியல் அடையாளமான ஏறு தழுவுதலைக் குறிப்பதாக ஐராவதம் மகாதேவன் தெரிவித்துள்ளார். ஏறு தழுவுதல், முல்லை நிலத்து மக்களின் அடையாளத்தோடும் மருத நிலத்து வேளாண் குடிகளின் தொழில் உற்பத்தியோடும் பாலை நிலத்து மக்களின் தேவைக்கான போக்குவரத்துத் தொழிலோடும் பிணைந்தது. இதுவே வேளாண் உற்பத்தியின் பண்பாட்டு அடையாளமாக நீட்சி அடைந்தது. |
| a) சிந்துவெளி மக்கள் எந்த விலங்கை தெய்வமாக வழிபட்டனர்?<br>விடை: காளை |

b) தமிழர்களின் பண்பாட்டுத் தொல்லியல் அடையாளமான ஏறு தழுவுதலைக் குறிப்பதாக கூறியவர்?

விடை: ஐராவதம் மகாதேவன்

c) ஏறு தழுவுதல் இந்நிலமக்களின் அடையாளமாக திகழ்கிறது?

விடை: முல்லை

**19.கீழ்க்கண்ட பத்தியினை படித்து வினாவிற்கு சரியான விடையைத் தேர்தெடுக்க**

தொலைநகல் இயந்திரம் கோப்புகளையும் ஒளிப்படங்களயும் உடனடியாக ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு அனுப்பப்பயன்படுகிறது. 1846 இல்ஸ்காட்லாந்துக் கண்டுபிடிப்பாளர் அலெக்சாண்டர் பெயின் (Alexander Bain) என்பார் குறியீடுகளை மின்னாற்றல் உதவியுடன் அச்சிடுவதில் வெற்றிகண்டு அதற்குரிய காப்புரிமையைப் பெற்றார். இத்தாலி நாட்டு இயற்பியல் அறிஞர் ஜியோவான்னி காசில்லி (Giovanni Caselli) பான்டெலிகிராஃப் (Pantelegraph) என்ற தொலைநகல் கருவியை உருவாக்கினார். அவருடைய கண்டுபிடிப்பைக் கொண்டு, 1865இல் பாரிஸ் நகரிலிருந்து லியான் நகரத்துக்குத் தொலைநகல் சேவை துவங்கப்பட்டது.

a) தொலைநகல் இயந்திரம் பயன்?

விடை: தொலைநகல் இயந்திரம் கோப்புகளையும் ஒளிப்படங்களயும் உடனடியாக ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு அனுப்பப்பயன்படுகிறது.

b) தொலைநகல் இயந்திரத்துக்கு காப்புரிமை பெற்றவர்?

விடை: அலெக்சாண்டர் பெயின்

c) எங்கு & எப்போது தொலைநகல் சேவை துவங்கப்பட்டது?

விடை: 1865இல் பாரிஸ் நகரிலிருந்து லியான் நகரத்துக்குத் தொலைநகல் சேவை துவங்கப்பட்டது.

**20.கீழ்க்கண்ட பத்தியினை படித்து வினாவிற்கு சரியான விடையைத் தேர்தெடுக்க**

தாமிரபரணி ஆறு கடலில் கலக்கும் இடத்தில் ஆற்றின் மேற்குக்கரையில் அமைந்த இயற்கைத் துறைமுகம் கொற்கை. பாண்டியர்களில், ஆளும் மன்னரை அடுத்து அரசாளவரும் பட்டத்து இளவரசர்கள் இத்துறைமுக நகரிலேயே தங்கி நிருவாகம் கற்றனர். பாண்டியன் நெடுஞ்செழியன் உயிர்துறந்த பின் கொற்கையில் இருந்த பட்டத்து இளவரசன் வெற்றிவேற்செழியன் மதுரை வந்து அரியணை ஏறினான் என்னும் செய்தியைச் சிலப்பதிகாரத்தின் நீர்ப்படைக் காதையிலுள்

| |
|---|
| அடிகள் குறிப்பிடுகின்றன. பாண்டியர்களின் கப்பற்படைத் தளமாகவும் கொற்கை விளங்கியது. |
| a) கொற்கை துறைமுகம் எங்கு அமைத்துள்ளது?<br><br>விடை: தாமிரபரணி ஆறு கடலில் கலக்கும் இடத்தில் ஆற்றின் மேற்குக்கரையில் அமைத்துள்ளது.<br><br>b) துறைமுகம் கொற்கை எந்த அரசர்களின் துறைமுகம்?<br><br>விடை: பாண்டியர்களின் துறைமுகம்<br><br>c) இதில் சிலப்பதிகாரம் கூறும் செய்தி யாது?<br><br>விடை: பாண்டியன் நெடுஞ்செழியன் உயிர்துறந்தபின் கொற்கையில் இருந்த பட்டத்து இளவரசன் வெற்றிவேற்செழியன் மதுரை வந்து அரியணை ஏறினான் என்னும் செய்தியைச் சிலப்பதிகாரத்தின் நீர்ப்படைக் காதையிலுள் அடிகள் குறிப்பிடுகின்றன. |
| **21.கீழ்க்கண்ட பத்தியினை படித்து வினாவிற்கு சரியான விடையைத் தேர்தெடுக்க** |
| தமிழ்ச் சமூகத்தின் நல்வாழ்வுக்கு உறுதுணையாக இருக்கக்கூடிய பல்வேறு தொழில் பிரிவினர் இருந்தனர். தச்சுத் தொழில் மேலோங்கி இருந்தது. தேர், வண்டி, நாவாய்கள், படகுகள், வீடுகளுக்கான தூண்கள், கதவுகள், கட்டில்கள் முதலான பல பொருள்கள் செய்யப்பட்டன. இரும்பாலும் பொன்னாலும் கருவிகள் நகைகள் செய்யப்பட்டன. நெய்தல் தொழில் மேம்பட்டிருந்தது. உமணர் ஊர் ஊராகச் சென்று உப்பு வணிகம் செய்தனர். பாணர்கள், இசைக் கலைஞர்கள். இவர்கள் பெயரில் இலக்கியங்கள் படைக்கப்படும் அளவு சமூகத்தில் புகழ்பெற்றிருந்தனர். மீன்பிடித் தொழில் பற்றிய குறிப்புகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. உழவுத்தொழில் மிகப்பெரும் தொழிலாக இருந்தது. வேறு பலவகையான சிறுதொழில்கள் செய்வோரும் இருந்தனர். மன்னர்க்குரிய கூத்து 'வேத்தியல்' என்றும் மற்றவர்க்குரியவை 'பொதுவியல்' என்றும் அழைக்கப்பட்டன. |
| a) ஊர் ஊராகச் சென்று உப்பு வணிகம் செய்தவர் யார்?<br><br>விடை: உமணர்<br><br>b) மன்னர்க்குரிய கூத்து கலையின் பெயர்?<br><br>விடை: 'வேத்தியல்'<br><br>c) 'பொதுவியல்' என்றால் என்ன?<br><br>விடை: பொது மக்களுக்கான கூத்து. |

| |
|---|
| **22.கீழ்க்கண்ட பத்தியினை படித்து வினாவிற்கு சரியான விடையைத் தேர்தெடுக்க** |
| இந்திய தேசிய இராணுவத்தில் ஜான்சிராணி பெயரில் பெண்கள் படை உருவாக்கப்பட்டது. இதன் தலைவர் டாக்டர் லட்சுமி. இப்படையில் தமிழ்ப் பெண்கள் பெருமளவில் பங்கேற்றார்கள். இதில் தலைசிறந்த தலைவர்களாக ஜானகி, இராஜாமணி போன்றோர் விளங்கினர். நேதாஜி அமைத்த தற்காலிக அரசில் கேப்டன் லட்சுமி, சிதம்பரம் லோகநாதன் முதலான தமிழர்கள் அமைச்சர்களாக இருந்தார்கள். சிறந்த தலைவர்களை உருவாக்க நேதாஜி 45 இளைஞர்களை டோக்கியோ அனுப்பினார். அவர்களில் பெரும்பாலோர் தமிழர்கள். அதில் பயிற்சி பெற்றவர்களுள் குறிப்பிடத்தக்கவர் கேப்டன் தாசன் ஆவார். அவர் பின்பு சுதந்திர இந்தியாவில் செசல்ஸ் நாட்டுத் தூதுவராகப் பணியாற்றினார். |
| a) யார் பெயரில் பெண்கள் படை உருவாக்கப்பட்டது?<br>விடை: ஜான்சிராணி<br>b) நேதாஜி அமைத்த தற்காலிக அரசில் இருந்த தமிழர்கள்?<br>விடை: கேப்டன் லட்சுமி, சிதம்பரம் லோகநாதன்<br>c) கேப்டன் தாசன் என்பவர் யார்?<br>விடை: சுதந்திர இந்தியாவில் செசல்ஸ் நாட்டுத் தூதுவராகப் பணியாற்றினார். |
| **23.கீழ்க்கண்ட பத்தியினை படித்து வினாவிற்கு சரியான விடையைத் தேர்தெடுக்க** |
| வெண்தாடி வேந்தர், பகுத்தறிவுப் பகலவன், வைக்கம் வீரர், ஈரோட்டுச் சிங்கம் என்றெல்லாம் பலவாறு சிறப்பிக்கப்படுபவர் தந்தை பெரியார். மூடப்பழக்கத்தில் மூழ்கிக் கிடந்த தமிழ் மக்களைப் பகுத்தறிவுப் பாதைக் கு அழைத்துச் சென்றவர்; அடிமையாய் உறங்கிக் கிடந்த சமூகம் விழிப்பதற்குச் சுயமரியாதைப் பூபாளம் இசைத்தவர்; மானமும் அறிவும் கொண்டவர்களாகத் தமிழர்கள் வாழவேண்டும் என்று அரும்பாடுபட்டவர்; தானே முயன்று கற்று, சுயமாகச் சிந்தித்து அறிவார்ந்த கருத்துகளை வெளியிட்டவர். |
| a) பெரியாரின் வேறுப் பெயர்கள்?<br>விடை: வெண்தாடி வேந்தர், பகுத்தறிவுப் பகலவன், வைக்கம் வீரர், ஈரோட்டுச் சிங்கம்<br>b) பூபாளம் - பொருள்? |

விடை: பூபாளம் இராகம் கருநாடக இசையில் பயன்படும் இராகங்களில் ஒன்றாகும்

c) மூடப்பழக்கத்தில் மூழ்கிக் கிடந்த தமிழ் மக்களைப் பகுத்தறிவுப் பாதைக்கு அழைத்துச் சென்றவர்?

விடை: பெரியார்

**24.கீழ்க்கண்ட பத்தியினை படித்து வினாவிற்கு சரியான விடையைத் தேர்தெடுக்க**

தமிழன் கற்களும் முட்களும் நிறைந்திருந்த பெரிய நிலப்பரப்பைத் திருத்திப் பண்படுத்தினான். தனது உடல் வலிமையால் வளத்தைப் பெருக்கினான். ஊர், நகரம், நாடு ஆகியவற்றை உருவாக்கி வாழும் பெருமையைப் பெற்றான். முல்லை, மருதம், குறிஞ்சி, நெய்தல் என நிலத்தை நால்வகைப்படுத்திய நாகரிக மனிதன் அவன். பழந்தமிழன் ஆழமான கடல்களைக் கடந்து பயணம் செய்தான். அச்சம் தரும் போர்களிலும் எளிதாக வெற்றி கண்டான். பனிசூழ்ந்த இமயமலையில் தன் வெற்றிக் கொடியை நாட்டினான். ஆழ்கடலில் மூழ்கி முத்தெடுத்தான். ஏலம், மிளகு ஆகியவற்றைப் பெருமகிழ்ச்சியோடு கப்பல்களில் ஏற்றிக் கண்டங்கள் தோறும் அனுப்பி வணிகம் செய்தான். கப்பலில் உலகை வலம் வந்தான். அவன் எதற்கும் அஞ்சாதவன். ஆனால், சான்றோர்கள் அஞ்சும் தீமைகளைச் செய்ய அஞ்சுபவன்.

1. யார் கற்களும் முட்களும் நிறைந்திருந்த பெரிய நிலப்பரப்பைத் திருத்திப் பண்படுத்தினான்?

a) பெண்
b) ஆண்
c) தமிழன்
d) ஆரியர்
e) விடை தெரியவில்லை

விடை: c

Exp:தமிழன் கற்களும் முட்களும் நிறைந்திருந்த பெரிய நிலப்பரப்பைத் திருத்திப் பண்படுத்தினான்.

2. தமிழன் உடல் வலிமையால் எதைப் பெருக்கினான்?

a) வளம்
b) அழகு
c) நெருப்பு
d) அமைதி
e) விடை தெரியவில்லை

விடை: a

Exp:தமிழன் உடல் வலிமையால் வளத்தைப் பெருக்கினான்

*3.* யார் ஆழமான கடல்களைக் கடந்து பயணம் செய்தான்?

a) ஆண்
b) பெண்
c) பழந்தமிழன்
d) ஆரியர்
e) விடை தெரியவில்லை
விடை: c
Exp:பழந்தமிழன் ஆழமான கடல்களைக் கடந்து பயணம் செய்தான்.

**25.கீழ்க்கண்ட பத்தியினை படித்து வினாவிற்கு சரியான விடையைத் தேர்தெடுக்க**

சமத்துவம், பகுத்தறிவு ஆகிய கொள்கைகளை மக்களிடம் பரவலக்கியவர்கள் தந்தை பெரியாரும் அண்ணல் அம்பேத்கரும் ஆவர். இவர்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர அயோத்திதாசர்.
இவரைத் தென்னிந்தியச் சமூகச் சீர்திருத்தத்தின் தந்தை என்று போற்றுவர். 1907ஆம் ஆண்டு சென்னையில் ஒருபைசாத்தமிழன் என்னும் வார இதழை காலணா விலையில் தொடங்கினார். ஓர் ஆண்டிற்குப்பின் அவ்விதழின் பெயரைத் தமிழன் என மாற்றினார்.
1892 ஆம் ஆண்டு திராவிட மகாஜன சங்கம் என்னும் அமைப்பைத் தோற்றுவித்தார். இவ்வமைப்பு சாலைகள் அமைத்தல், கால்வாய்கள் பராமரித்தல், குடிகளின் பாதுகாப்புக்குக் காவல்துறையினரை நியமித்தல், பொதுமருத்துவமனைகள் அமைத்தல், சிற்றூர்கள்தோறும் கல்விக்கூடங்கள் ஏற்படுத்துதல் போன்றவற்றுக்காகவும் போராடியது.

a) தென்னிந்தியச் சமூகச் சீர்திருத்தத்தின் தந்தை?
விடை: அயோத்திதாசர்.
b) எந்த வருடம் ஒருபைசாத்தமிழன் துவங்கப்பட்டது?
விடை: 1907
c) 1892 ஆம் ஆண்டு அயோத்திதாசரால் துவங்கப்பட்ட அமைப்பு?
விடை: திராவிட மகாஜன சங்கம்.

**பயிற்சி வினாக்கள்:**

**1. கீழ்க்கண்ட பத்தியைப் படித்து வினாவிற்கான சரியான விடையைத் தேர்ந்தெடு.**

முத்துராமலிங்கர் இந்திய விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்றார். தமது பேச்சாற்றலால் ஆங்கில ஆட்சிக்கு எதிராக மக்களிடம் பெரும் எழுச்சியை ஏற்படுத்தினார். மேடைகளில் அவர் ஆற்றிய வீர உரையைக் கேட்ட மக்கள் ஆங்கில ஆட்சிக்கு எதிராக வீறு கொண்டு எழுந்தனர். அதனால் அச்சமடைந்த ஆங்கில அரசு பலமுறை அவரைக் கைது செய்து சிறையில் அடைத்தது. மேலும் வாய்ப்பூட்டுச் சட்டம் மூலம் மேடைகளில் அரசியல் பேசக்கூடாது என்று அவருக்குத் தடை விதித்தது. வட இந்தியாவில் வாய்ப்பூட்டுச் சட்டத்தின்படி பேசத் தடை விதிக்கப்பட்ட தலைவர் பாலகங்காதர திலகர். அவரைப் போலவே

தென்னாட்டில் அச்சட்டத்திற்கு ஆட்பட்ட தலைவர் முத்துராமலிங்கர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது விடுதலை வேட்கையை அறிந்த திரு.வி. கலியாணசுந்தரனார் தேசியம் காத்த செம்மல் என்று பாராட்டியுள்ளார். வங்கச் சிங்கம் என்று போற்றப்பட்ட நேதாஜி சுபாஷ் சந்திர போசுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்.

1. விடுதலைப் போரில் பங்கேற்றவர்
   (A) கந்தன்
   (B) முத்து இராமலிங்கர்
   (C) நாதன்
   (D) பாலன்
   (E) விடை தெரியவில்லை

2. அவர் உரையைக் கேட்ட ஆங்கில அரசு செய்த செயல்
   (A) சிறையில் அடைத்தது
   (B) பரிசு அளித்தது
   (C) பதக்கம் அளித்தது
   (D) பாராட்டியது
   (E) விடை தெரியவில்லை

3. மேடைகளில் அரசியல் பேசக் கூடாது என்று தடை விதிக்கப்பட்ட சட்டம்
   (A) 144 சட்டம்
   (B) இல்லப்பூட்டுச் சட்டம்
   (C) வாய்ப்பூட்டுச் சட்டம்
   (D) சொத்துரிமை மறுப்புச் சட்டம்
   (E) விடை தெரியவில்லை

4. தேசியம் காத்த செம்மல் என்று பாராட்டியவர்?
   (A) திரு.வி. கலியாணசுந்தரனார்
   (B) பாரதியார்
   (C) சர்.சி.வி. இராமன்
   (D) பாரதிதாசன்

(E) விடை தெரியவில்லை

5. வங்கச் சிங்கம் என்று பாராட்டப்படுபவர்?

(A) திருப்பூர் குமரன்

(B) சுப்ரமணிய சிவா

(C) திலகர்

(D) நேதாஜி சுபாஷ் சந்திர போசு

(E) விடை தெரியவில்லை

விடைகள்:
1. B 2. A 3. C 4. A 5.D

**2. கீழ்க்கண்ட பத்தியைப் படித்து வினாவிற்கான சரியான விடையைத் தேர்ந்தெடு.**

கப்பல் பல்வேறு வகையான உறுப்புகளை உடையது. எரா, பருமல், வங்கு. கூம்பு, பாய்மரம், சுக்கான், நங்கூரம் போன்றவை கப்பலின் உறுப்புகளுள் சிலவாகும். கப்பலின் முதன்மையான உறுப்பாகிய அடிமரம் எரா எனப்படும். குறுக்கு மரத்தைப் பருமல் என்பர். கப்பலைச் செலுத்துவதற்கும் உரிய திசையில் திருப்புவதற்கும் பயன்படும் முதன்மையான கருவி சுக்கான் எனப்படும். கப்பலை நிலையாக ஓரிடத்தில் நிறுத்தி வைக்க உதவும் உறுப்பு நங்கூரம் ஆகும். சமுக்கு என்னும் ஒரு கருவியையும் கப்பல்களில் பயன்படுத்தினர் என்று கப்பல் சாத்திரம் என்னும் நூல் குறிப்பிடுகிறது.

**1. கப்பலின் முதன்மையான உறுப்பாகிய அடிமரத்தின் பெயர் தேர்க.**

(A) பருமல் (B) வங்கு

(C) கூம்பு (D) எரா

(E) விடை தெரியவில்லை

**2. கப்பலைச் செலுத்துவதற்கும் உரிய திசையில் திருப்புவதற்கும் பயன்படும் முதன்மையான கருவியைத் தேர்க.**

(A) பருமல்

(B) எரா

(C) சுக்கான்

(D) கூம்பு

(E) விடை தெரியவில்லை

**3. கப்பலை நிலையாக ஓரிடத்தில் நிறுத்தி வைக்க உதவும் உறுப்பு**

(A) சுக்கான்

(B) பருமல்

(C) நங்கூரம்

(D) கூம்பு

(E) விடை தெரியவில்லை

**4. கப்பலின் குறுக்கு மரத்தின் பெயர்**

(A) வங்கு

(B) பருமல்

(C) நங்கூரம்

(D) சுக்கான்

(E) விடை தெரியவில்லை

**5. கப்பல்களில் பயன்படுத்தும் ஒரு கருவியாக கப்பல் சாத்திரம் நூல் குறிப்பிடுவது**

(A) சமுக்கு

(B) எரா

(C) பருமல்

(D) கூம்பு

(E) விடை தெரியவில்லை

விடைகள்:
1. D 2. C 3. C 4.B 5. A

# செய்தித்தாள் - தலையங்கம் முகப்புச் செய்திகள் அரசு சார்ந்த செய்திகள் - கட்டுரைகள் இவற்றை வாசித்தல் - புரிந்து கொள்ளும் திறன்

**வாசிப்பு:**

வாசிப்பு என்பது, ஓர் உன்னதமான தனி அனுபவம். சமூக அனுபவங்கள் கூட்டுத்தொகுப்பாகப் படைப்புகளில் வெளிப்படுகின்றன. அவற்றை வாசிக்கும் ஒரு வாசகன் தன் வாசிப்பின் ஊடாக ஒட்டுமொத்த சமூக அனுபவக்களத்திற்குள் பயணிக்க முடியும். இடம், காலம், மொழி கடந்த அந்த மானுட வாழ்வியல் பதிவுகளிலிருந்து தனக்கான உன்னதங்களை அவன் எடுத்துக் கொள்கிறான். ஆக, வாசிப்பு நிறைந்த ஒரு சமுதாயமே மரபின் பண்பாட்டுக் கூறுகளோடு இயைந்த ஒரு நவீனத்தைத் தகவமைத்துக்கொள்ள முடியும்.

**வாசிப்பின் படிநிலைகள்:**

இலக்கிய வாசிப்பு என்பது, ஒரே மையத்திலேயே எப்போதும் இயங்குவதில்லை. அது பல்வேறு வாசிப்புப் படிநிலைகளின் ஊடாகக் கடந்து கொண்டே இருக்கிறது. ஒரு நல்ல வாசகனின் வாசிப்புத்தரம் என்பது, குழந்தை இலக்கிய வாசிப்பிலிருந்து பொழுதுபோக்கு, சாகசம், குற்றவியல், மெல்லுணர்வு, இலட்சியவாதம் ஆகியவற்றின் வழியாகச் செவ்வியல் வாசிப்பை நோக்கி நாளும் வளர்ந்துகொண்டே செல்லும் தன்மையுடையது.

செய்திப் பரிமாற்றத்தின் வளர்ச்சி நிலைகள்



**செய்தியின் பகுதிகள்:**

செய்தித்தாளில் வெளிவருகின்ற ஒரு செய்தி தலைப்பு, முகப்பு, செய்தி விளக்கம் ஆகிய மூன்று பகுதிகளைக்கொண்டு அமைகிறது.

### 1. தலைப்பு

செய்தியின் தலைப்பு, பெரிய எழுத்துகளில் அச்சிடப்பட்டிருக்கும். இது படிப்பவர்களைக் கவர்ந்திழுக்கும் வகையிலும், படித்தவுடன் செய்தியை உணரும் வகையிலும் இருக்கும். தலைப்புகள் ஒரு செய்தித்தாளுக்கு வடிவ அமைப்பையும் அழகையும் கொடுக்கின்றன.

**தமிழ்நாடு மின் வாரிய**
**இணையதளம் புதுப்பிப்பு**

● தகவல்களை விரைவாகப் பெற முடியும்

**தலைப்பின் நோக்கம்:**

"இதழ்களை, அவற்றில் இடம்பெறும் தலைப்புகளே துல்லியமாகக் கணிக்கின்றன" என்று **ஆலன் ஹோம் கோம்ப்** கூறுகிறார். செய்தித் தலைப்பைச் செய்தித் தாளின் பலகணி என்பர். செய்தியின் சிறப்புத்தன்மைகளைக் கூறுதல், இன்றியமையாமையை உணர்த்துதல், படிப்பவர்களைக் கவர்தல், விற்பனையை உயர்த்துதல் ஆகியவை தலைப்பின் நோக்கங்களாகும்.

**தலைப்பின் வகைகள்:**

### 1. கூம்புத் தலைப்பு

கோபுர அமைப்பில் முதல் வரி சிறியதாகவும் தொடரும் வரிகள் அதனைவிட நீளமானவையாகவும் இருக்கும்.

தமிழ்
ஊடகங்களில்
பணியாற்ற ஆசையா?

### 2. தலைகீழ்க் கூம்புத்தலைப்பு

தலைகீழ்க்கோபுரம்போல இருக்கும்.

தமிழ் ஊடகங்களில்
பணியாற்ற
ஆசை

**3. இடப்பக்கம் தள்ளிய தலைப்பு**

இடப்பக்கம் தள்ளியதாகத் தலைப்பு இருக்கும்.

ஊடகங்களில் பணியாற்ற
ஆசையா?

**4. வலப்பக்கம் தள்ளிய தலைப்பு**

வலப்பக்கம் தள்ளியதாகத் தலைப்பு இருக்கும்.

ஊடகங்களில் பணியாற்ற
ஆசையா?

**5. உடுக்குத் தலைப்பு**

உடுக்கையின் உருவம்போலத் தலைப்பு இருக்கும்.

இவ்வாறு பலவகையான தலைப்பு வடிவங்கள் செய்தித்தாளில் இடம்பெறும்.

கணித்தமிழ் வழியாகக்
கன்னித்தமிழ்
பெருமையைக் காப்போம்

**2. முகப்பு**

தலைப்பைத் தொடர்ந்து இடம்பெறுவது முகப்பு. இதில் ஒரு செய்தியின் முதன்மையான உள்ளடக்கம் ஓரிரு சொற்றொடர்களில் அமையும்.

**முகப்பின் தன்மை**

செய்தியின் முகப்புப் பகுதி, சுருக்கமாகவும் தெளிவாகவும் எளிமையாகவும் இருத்தல் வேண்டும். இது செய்திக்கு உயிரோட்டம் தருகிறது: படிப்பவர்களின் ஆவலையும் தூண்டுகிறது.

இந்திய அஞ்சல் துறை
இணையத்தள வங்கி சேவை

● நாடு முழுவதும் மார்ச் மாதத்தில் அமல்படுத்த முடிவு

## 3.செய்தி விளக்கப்பகுதி

செய்தியின் தலைப்பையும் முகப்பையும் எழுதிய பிறகு, செய்தியின் விளக்கப்பகுதியை எழுத வேண்டும். செய்திகள் தொடக்கம், இடை, இறுதி என்று மூன்று நிலைகளில் அமைதல் வேண்டும்.

செய்தியின் விளக்கப்பகுதியை எழுதுவதற்கு முன்னால் மூன்று குறிப்புகளைக் கவனத்தில் கொள்ளவேண்டும். முதலாவதாகச் செய்தியை முழுமையாகப் படித்து, படிப்பவர்களுக்கு எவை தேவை என்பதைத் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். இரண்டாவதாக செய்திக்குத் தேவையான எல்லா விவரங்களும் இருக்கின்றனவா என்பதைக் கவனிக்க வேண்டும். மூன்றாவதாகச் செய்தியை எவ்வளவு விரைவாகக் கூற முடியுமோ அவ்வளவு விரைவாகக் கூற வேண்டும்.

செய்தியின் விளக்கப்பகுதி, செய்தியைப் பொருள் மயக்கமின்றி உணர்த்துவதாகவும் புதுமையாகவும் சுவையூட்டுவதாகவும் விறுவிறுப்பாகவும் அமைவதன் மூலம் செய்தியின் மதிப்பு கூடுகிறது.

**பக்க அமைப்புமுறை:**

செய்தித்தாளில் இடம்பெற வேண்டிய செய்திகள், எந்தெந்தப் பக்கத்தில் எந்தெந்த இடத்தில் எப்படி அமைய வேண்டுமெனத் தீர்மானிப்பது, பக்க வடிவமைப்பு. செய்தித்தாளின் அனைத்துப் பக்கங்களும் மிகவும் இன்றியமையாதவையாக இருப்பினும், முதற்பக்கம் சிறப்பானதாகவும் பொலிவுடையதாகவும் அமைந்திருக்கும். முதற்பக்கத்தில் முதன்மையான அரசியல் செய்திகள், உள்ளத்தை உருக வைக்கும் நிகழ்வுகள், வண்ணப்படங்கள் போன்றவை இடம்பெற்றுப் படிக்கும் ஆவலைத் தூண்டும் விதமாக அமைந்திருக்கும். செய்தித்தாளை அச்சிடுவதற்கு முன்புவரை கிடைக்கக்கூடிய (கடைசி நேரச் செய்திகள்) இன்றியமையாத செய்திகள், முதற்பக்கத்தில் வடிவமைக்கப்பட்டிருக்கும். மற்ற பக்கங்கள் முன்பே முழுமையாக முடிக்கப்பட்டிருக்கும். செய்திகளை வழங்குவதன் அடிப்படையில் செய்தித்தாள் மூவகைப் பக்க அமைப்பைக் கொண்டுள்ளது.

1. **சமநிலைப் பக்க அமைப்பு**
   முறையான ஓர் அமைப்பில் செய்திகள், படங்கள், கேலிச்சித்திரங்கள், துணுக்குகள். விளம்பரங்கள் ஆகியவற்றை ஒரே சீராக அமைப்பது.
2. **மாறுபட்ட பக்க அமைப்பு**
   ஒரு பக்கத்தைச் சமநிலையில் அமைக்கின்றபொழுதே இடையிடையே மாறுபட்ட முறைகளில் செய்திகளையும் படங்களையும் அமைப்பது.
3. **கலப்புநிலைப் பக்க அமைப்பு**
   சமநிலைப் பக்க அமைப்பிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக அமைப்பது கலப்பு நிலைப் பக்க அமைப்பு. இதில், செய்திகள் மற்றும் உள்ளடக்கங்கள் இடம்பெறும் பக்கங்கள் ஒவ்வொரு நாளும் மாறுபடலாம்.

சமநிலைப்பக்க அமைப்பு




**பக்க அமைப்பின் நோக்கங்கள்:**

படிப்பவர்களைக் கவர்தல், செய்தியின் இன்றியமையாமையைக் காட்டுதல், படிப்பதற்கு ஏற்றவாறு அமைத்தல், சுவை கூட்டுதல், இதழை இனம் காட்டுதல், விரும்புவதைப் படிக்கச் செய்தல், பயனை மதிப்பிட உதவுதல், மிகுதியான செய்திகளைப் படிக்க வாய்ப்பளித்தல் முதலியன பக்க அமைப்பின் நோக்கங்களாகும்.

**பத்தி அமைப்பு:**

இதழ்களில் பத்திகள் ஐந்து செ.மீ. நீளத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். ஒரு பத்திக்கும் இன்னொரு பத்திக்கும் தொடர்பு இருக்கவேண்டும். இரண்டு பத்திக்குமிடையே தொடர்பு விட்டுப்போகுமிடத்தில் துணைத் தலைப்பிட்டு இணைப்பை ஏற்படுத்த வேண்டும்.

**படங்கள்:**

நாளிதழ் வனப்பையும் செய்தி மதிப்பையும் கூட்டுவனவாகப் படங்கள் உள்ளன. ஆயிரம் சொற்களால் சொல்ல முடியாதவற்றை ஒரு படம் உணர்த்திவிடுகிறது. கற்றோர். எழுத்தறிவற்றோர், முதியோர், சிறுவர்கள் ஆகிய அனைத்துத் தரப்பினரும் பார்த்துச் செய்திகளைப் புரிந்துகொள்ளப் படங்கள் உதவுகின்றன.

**இதழ்களின் மொழிநடை:**

ஓர் இதழுக்குச் சிறப்பு சேர்ப்பனவற்றுள் முதன்மையானது, அதனுடைய மொழி நடையாகும். சிறப்பான மொழிநடை மக்களை வெகுவாக ஈர்க்கிறது. நாம் மற்றவர்களோடு பேசுவதற்குப் பயன்படுத்துவது பேச்சுத் தமிழாகும். விளம்பரத்திற்காகக் கையாளும் தமிழ், அழகாகவும் செறிவாகவும் இருக்கும். மேடை ஏறி முழங்கும் பேச்சாளர்கள் சிலர், பயன்படுத்தும் நடை இலக்கிய நயத்துடன் இருக்கும்.

மொழிநடை பொருளுக்கேற்பவும் வேறுபடுகிறது. பெரும்புலவர்கள் எழுதுகின்ற இலக்கியக் கட்டுரைகள் சொற்செறிவுடன் அமைந்திருக்கும். இதழ்களில் இடம்பெறும் புனைகதைகளில், அணி சேர்க்கும் அடைமொழிகளும் உவமைகளும் கையாளப்படும். சிறுகதைகளில் சொற்கள் சிக்கனமாகப் பயன்படுத்தப்படும். இதுபோலவே படிக்கத்தெரிந்தவர்கள் அனைவரும் எளிதாகப் படித்துப் புரிந்துகொள்ளும் வகையில் இதழ்களில் மொழிநடை அமைந்திருக்கும்.

**தலையங்க மொழிநடை:**

நாளிதழ், பருவ இதழ்களில் தலையங்கம் முதன்மையான இடத்தைப் பெறுகின்றது. நடைமுறையில், தலையங்கம் இதழின் தரத்தை உயர்த்துகின்றது. தலையங்கம், செய்தித்தாளின் சமூகப் பார்வையையும் நிலைப்பாட்டையும் வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

**தலையங்கத்தின் இயல்புகள்:**

தலையங்கம், ஓர் இதழின் கருத்துக் கண்ணாடி ஆகும். இதனை எழுதும் ஆசிரியர், தம் பொறுப்பினை உணர்ந்து எழுதவேண்டும். எதனைப் பற்றித் தலையங்கம் எழுதினாலும் தரவுகளைத் திரட்டிவைத்துக்கொண்டு நடுநிலையோடு எழுதுதல் வேண்டும். கட்டுரையைப்போல் விரிவாக இல்லாமல் சுவையாகவும் சிந்தனையைத் தூண்டுவதாகவும் அமைவது. தலையங்கத்திற்குச் சிறப்பைத் தரும். சிறந்த தலையங்கங்கள் பொருளுக்கேற்பத் தெளிவான நடையில், வலுவான கருத்துகளைக்கொண்டு அமைந்திருக்கும். ஒரு கொள்கை / கருத்தின் மீதான செய்தித் தாளின் நிலைப்பாட்டை இதன் மூலம் அறியலாம்.

**இடம்பெறும் பிற செய்திகள்:**

இதழ்கள், நடப்புச்செய்திகளை வெளியிடுவதோடு அல்லாமல் கருத்துப்படம், நூல் மதிப்புரை, வாசகர் கடிதம், விளம்பரம் முதலிய பகுதிகளுக்கெனக் குறிப்பிட்ட பக்கங்களில் இடங்களை ஒதுக்கி அவை தொடர்பான செய்திகளை வெளியிடுகின்றன.

### உலகச் செய்தி நிறுவனங்கள்

1. அமெரிக்க அசோசியேட்டட் பிரஸ் (A.P)
2. இராய்ட்டர் நிறுவனம் ( Reuter)
3. ஏஜென்சி பிரான்ஸ் பிரஸ் (A.F.P)
4. யுனைடெட் பிரஸ் இன்டர்நேஷனல் ( U.P.I)
5. டாஸ் செய்தி நிறுவனம் (Tass)

### இந்தியச் செய்தி நிறுவனங்கள்

#### பொது நிறுவனம்

1. அசோசியேட்டட் பிரஸ் ஆப் இந்தியா (A.P.I)
2. பிரஸ் டிரஸ்ட் ஆப் இந்தியா (P.T.I)
3. யுனைடெட் பிரஸ் ஆப் இந்தியா (U.P.I)
4. யுனைடெட் நியூஸ் ஆப் இந்தியா (U.N.I)
5. பிரி பிரஸ் ஆப் இந்தியா (F.P.I)

#### தனியார் நிறுவனங்கள்

1. குளோப் நியூஸ் ஏஜென்சி (Globe News Agency)
2. ஓரியண்ட் பிரஸ் (Orient Press)
3. டைம்ஸ் ஆப் இந்தியா (Times of India)
4. இந்தியன் எக்ஸ்பிரஸ் (Indian Express)

**பயிற்சி வினாக்கள்:**

**பின்வரும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி:**

செய்தித்தாளில் வெளிவருகின்ற ஒரு செய்தி தலைப்பு, முகப்பு, செய்தி விளக்கம் ஆகிய மூன்று பகுதிகளைக்கொண்டு அமைகிறது. "இதழ்களை, அவற்றில் இடம்பெறும் தலைப்புகளே துல்லியமாகக் கணிக்கின்றன" என்று ஆலன் ஹோம் கோம்ப் கூறுகிறார். செய்தித் தலைப்பைச் செய்தித் தாளின் பலகணி என்பர். செய்தியின் சிறப்புத்தன்மைகளைக் கூறுதல், இன்றியமையாமையை உணர்த்துதல், படிப்பவர்களைக் கவர்தல், விற்பனையை உயர்த்துதல் ஆகியவை தலைப்பின் நோக்கங்களாகும். தலைப்பைத் தொடர்ந்து இடம்பெறுவது முகப்பு. இதில் ஒரு செய்தியின் முதன்மையான உள்ளடக்கம் ஓரிரு சொற்றொடர்களில் அமையும்.

1. **"இதழ்களை, அவற்றில் இடம்பெறும் தலைப்புகளே துல்லியமாகக் கணிக்கின்றன" என்ற கூற்றினை கூறியவர் யார்?**

   (A) வில்லியம் ஜான்

   (B) ஆலன் ஹோம் கோம்ப்

   (C) மாக்சு முல்லர்

   (D) பெஞ்சமின் பிராங்கிளின்

   (E) விடை தெரியவில்லை

**2. செய்தித்தாளில் வெளிவருகின்ற ஒரு செய்தி எத்தனை பகுதிகளைக்கொண்டு அமைகிறது?**

(A) நான்கு

(B) ஆறு

(C) மூன்று

(D) ஐந்து

(E) விடை தெரியவில்லை

**3. தலைப்பின் நோக்கங்கள் எவை?**

(A) விற்பனையை உயர்த்துதல்

(B) இன்றியமையாமையை உணர்த்துதல்

(C) செய்தியின் சிறப்புத்தன்மைகளைக் கூறுதல்

(D) மேற்கண்ட அனைத்தும்

(E) விடை தெரியவில்லை

**4. தலைப்பைத் தொடர்ந்து இடம்பெறுவது எது?**

(A) முகப்பு

(B) விளையாட்டுச் செய்திகள்

(C) செய்தி விளக்கம்

(D) முதன்மையான உள்ளடக்கம்

(E) விடை தெரியவில்லை

**5. செய்தித் __________ செய்தித் தாளின் பலகணி என்பர்.**

(A) முகப்பை

(B) தலைப்பை

(C) செய்தி விளக்கத்தை

(D) முதன்மையான உள்ளடக்கத்தை

(E) விடை தெரியவில்லை

விடைகள்:

1.B 2.C 3.D 4.A 5.B

**பின்வரும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி:**

செய்தியின் தலைப்பையும் முகப்பையும் எழுதிய பிறகு, செய்தியின் விளக்கப்பகுதியை எழுத வேண்டும். செய்திகள் தொடக்கம், இடை, இறுதி என்று மூன்று நிலைகளில் அமைதல் வேண்டும்.செய்தியின் விளக்கப்பகுதியை எழுதுவதற்கு முன்னால் மூன்று குறிப்புகளைக் கவனத்தில் கொள்ளவேண்டும். முதலாவதாகச் செய்தியை முழுமையாகப் படித்து, படிப்பவர்களுக்கு எவை தேவை என்பதைத் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். இரண்டாவதாக செய்திக்குத் தேவையான எல்லா விவரங்களும் இருக்கின்றனவா என்பதைக் கவனிக்க வேண்டும். மூன்றாவதாகச் செய்தியை எவ்வளவு விரைவாகக் கூற முடியுமோ அவ்வளவு விரைவாகக் கூற வேண்டும். தலையங்கம், ஓர் இதழின் கருத்துக் கண்ணாடி ஆகும். இதனை எழுதும் ஆசிரியர், தம் பொறுப்பினை உணர்ந்து எழுதவேண்டும்.

1. **ஓர் இதழின் கருத்துக் கண்ணாடி எது?**

   (A) தலையங்கம் (B) விளக்கப்பகுதி

   (C) முதன்மையான உள்ளடக்கம் (D) முகப்பு

   (E) விடை தெரியவில்லை

2. **செய்திகள் எத்தனை நிலைகளில் அமைதல் வேண்டும்?**

   (A) நான்கு (B) ஆறு (C) மூன்று

   (D) ஐந்து (E) விடை தெரியவில்லை

3. **செய்தியின்__________ எழுதிய பிறகு, செய்தியின் விளக்கப்பகுதியை எழுத வேண்டும்.**

   (A) தலைப்பையும் (B) முகப்பையும்

   (C) தலைப்பையும் முகப்பையும் (D) உள்ளடக்கத்தை

   (E) விடை தெரியவில்லை

4. **__________ எழுதும் ஆசிரியர், தம் பொறுப்பினை உணர்ந்து எழுதவேண்டும்**

   (A) தலையங்கம் (B) விளக்கப்பகுதி

   (C) முதன்மையான உள்ளடக்கம் (D) முகப்பு

   (E) விடை தெரியவில்லை

5. **செய்தியை எவ்வளவு விரைவாகக் கூற முடியுமோ அவ்வளவு விரைவாகக் கூற வேண்டும் என்பது____________குறிப்பாகும்?**

(A) முதலாவது (B) இரண்டாவது

(C) மூன்றாவது (D) ஏழாவது

(E) விடை தெரியவில்லை

விடைகள்:

1.A 2.C 3. C 4.A 5.C

மனித நேயம் வளர்ப்போம் மானுடம் மீட்போம் சைதை சா. துரைசாமியின் மனித நேய அறக்கட்டளை

## ஆவண உள்ளடக்கத்தை புரிந்து கொள்ளும் திறன்

### தமிழறிஞர்கள் நூல்கள் நாட்டுடைமை விவரப் படிவம்

1. தமிழறிஞர் பெயர் :
2. பிறந்த நாள் :
3. கல்வித் தகுதி :
4. வாழ்க்கைக் குறிப்பு :
   (தனித்தாளில் இணைக்கப்படுதல் வேண்டும்)
5. எழுதிய நூல்கள் பின்வருமாறு இனம் வாரியாக எண்ணிக்கை (நூற் பெயர் பட்டியல் தனித்தாளில் இணைக்கப்படுதல் வேண்டும்) :

   அ கவிதை
   ஆ சிறுகதை
   இ புதினம்
   ஈ நாடகம்
   உ கட்டுரைகள்
   ஊ திறனாய்வு / ஆராய்ச்சி
   எ மொழி பெயர்ப்பு
   ஏ உரை நூல்கள்
   ஐ பிற
   (நூல்கள் புத்தக வடிவிலும், மென்நகல் (softcopy) வடிவிலும் குறுந்தகடு அல்லது விரலியில் (pendrive) பதிவு செய்து இணைக்கப்படுதல் வேண்டும்)

**1. கீழே கொடுக்கப்பட்ட தமிழறிஞர்கள் நூல்காள் நாட்டுமை விவரப்படிவத்தில் நூல்கள் எந்த முறையில் பதிவு செய்து இணைக்கப்பட வேண்டும் என கொடுக்கப்பட்டுள்ளது?**

a) புத்தக வடிவம்

b) மென் நகல் வடிவம்

c) குறுந்தகடு அல்லது விரலி

d) இவையனைத்தும்

e) விடை தெரியவில்லை

விடை: d

**செய்தி வெளியீடு எண் : 490** **நாள் : 04.03.2025**

**ஜெர்மனி நாட்டில் பணிபுரிய செவிலியர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு, விருப்பம் உள்ளவர்கள் உடனடியாக விண்ணப்பிக்கலாம்.**

ஜெர்மன் நாட்டிலுள்ள மருத்துவமனைகளில் பணிபுரிவதற்க்கு ஆறு மாதம் பணி அனுபவம் பெற்ற 35 வயதிற்க்குட்பட்ட, டிப்ளமோ மற்றும் பட்டதாரி ஆண்/பெண் செவிலியர்கள் தேவைப்படுகிறார்கள். இவர்களுக்கு B1,B2 நிலையில் இலவசமாக ஜெர்மன் மொழி பயிற்றுவித்து மாத சம்பளமாக சுமார் 2 இலட்சம் வழங்கப்படும்.

எனவே, தகுதியுள்ளவர்கள் தங்களின் சுய விவரங்கள் அடங்கிய விண்ணபத்துடன் கல்வித்தகுதி, அனுபவம், பாஸ்போர்ட் ஆகியவற்றின் நகல்கள் மற்றும் வெள்ளைநிறப் பின்னணியில் எடுக்கப்பட்ட புகைப்படத்துடன் omclgerman2022@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 15.03.2025க்குள் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் ஊதியம் மற்றும் பணிவிவரங்களை அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவன வலைதளமான www.omcmanpower.tn.gov.in மற்றும் 044- 22505886/ 6379179200 என்ற தொலைபேசி எண்களின் மூலமாகவும் அறிந்து கொள்ளலாம்.

**தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,**
**அயல் நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்**

2. **மேலே கொடுக்கப்பட்ட ஜெர்மன் நாட்டிலுள்ள மருத்துவமனைகளில் பணிபுரிவதற்கான விண்ணப்ப குறிப்பின் படி தவறான வாக்கியம் எது?**

a) டிப்ளமா மற்றும் பட்டதாரி ஆண்/பெண் செவிலியர்களாக இருக்க வேண்டும்

b) ஆறு மாதம் பணி அனுபவத்துடன் 35 வயதிற்க்குட்பட்டவராக இருக்க வேண்டும்

c) B1, B2 நிலையில் ஜெர்மன் மொழி தெரிந்திருக்க வேண்டும்

d) சேருபவர்களுக்கு மாத சம்பளமாக சுமார் 2 லட்சம் வழங்கப்படும்

e) விடை தெரியவில்லை

விடை: d

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவராக திரு.ஆர். பாலகிருஷ்ணன் இ.ஆ.ப. (ஓய்வு) அவர்கள் நியமனம் தமிழ்நாடு அரசு அறிவிப்பு.**

சென்னை, தரமணி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவராக திரு.ஆர். பாலகிருஷ்ணன் இ.ஆ.ப. (ஓய்வு) அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனம் தமிழ் மொழி மற்றும் பண்பாட்டு ஆய்வுகளுக்கு புதிய உந்துதலை அளிக்கும்.

திரு.ஆர். பாலகிருஷ்ணன் இ.ஆ.ப. (ஓய்வு) அவர்கள் ஒரு புகழ்பெற்ற தமிழ்மொழி அறிஞரும், ஆட்சிப்பணி வல்லுநரும் ஆவார். தமிழ் இலக்கியத்தில் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டங்களைப் பெற்ற இவர், தமிழில் குடிமைப்பணித் தேர்வுகளை எழுதி வென்ற முதல் தமிழ் மாணவர்.

ஆய்வாளர், படைப்பாளர் என்ற இரு தளங்களில் செயல்படும் இவர் 15 நூல்களின் ஆசிரியர். சிந்துவெளிப் பண்பாட்டு தொல்லியல் தரவுகளை சங்க இலக்கியங்கள் மற்றும் தமிழ்நாட்டு அகழாய்வுத் தரவுகளோடு ஒப்பிட்டு இவர் எழுதியுள்ள ஆங்கிலம் மற்றும் தமிழ் நூல்கள் உலகின் கவனத்தை ஈர்த்துள்ளன.

இந்திய ஆட்சிப் பணியில் 1984–ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், ஒடிசா அரசிலும் இந்தியத் தேர்தல் ஆணையத்திலும் 34 ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றியவர். ஒடிசா மாநிலத்தின் நிதித்துறைச் செயலர், கூடுதல் தலைமைச் செயலாளர், வளர்ச்சி ஆணையர் போன்ற பொறுப்புகளை வகித்தவர். 2018–ல் பணிஓய்வு பெற்ற இவர் அதன்பிறகு முன்னாள் ஒடிசா மாநில முதல்வரின் தலைமை ஆலோசகராக 2024 வரையில் பொறுப்பு வகித்தார். திராவிட மொழிக்குடும்பத்தின் பரவல், சிந்து சமவெளிப் பண்பாடு, தொல்தமிழ்த் தொன்மங்கள், சங்க இலக்கியங்கள் மற்றும் திருக்குறள் குறித்த இவரது செயல்பாடும் பங்களிப்பும் உலகத்தமிழர்களால் பாராட்டப்பட்டுள்ளது.

**3. திரு. ஆர். பாலகிருஷ்ணன் இ.ஆ.ப. (ஓய்வு) அவர்கள் தமிழ்நாடு அரசு அறிவிப்பின்படி எந்த நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்?**

a) தமிழ்நாடு அரசு பண்பாட்டு மையம்

b) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

c) தமிழ்நாடு தொல்லியல் துறை

d) தமிழ்நாடு இலக்கிய அகாடமி

e) விடை தெரியவில்லை

விடை: b

4. **தமிழில் குடிமைப்பணித் தேர்வுகளை எழுதி வென்ற முதல் தமிழ் மாணவரான திரு. ஆர். பாலகிருஷ்ணன் இ.ஆ.ப. (ஓய்வு) அவர்கள் எந்த ஆண்டு இந்திய ஆட்சிப் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்?**

   a) 1984

   b) 1990

   c) 1975

   d) 2000

   e) விடை தெரியவில்லை

   விடை: a

**பின்வருவனவற்றைக்காண்க**

**செய்தி வெளியீடு எண் : 450** **நாள்: 22.03.2022**

**உலக நீர் நாளை முன்னிட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு**

'நீரின்றி அமையாது உலகு' என்கிற அய்யன் திருவள்ளுவரின் நெறிப்படி, இயற்கை வழங்கிய அமுதமாம் நீர்வளத்தைப் பாதுகாத்து - மேம்படுத்தி - தேவைக்கேற்ற அளவில் பயன்படுத்திடுவோம்.

மக்களுக்குத் தரமான குடிநீர் வழங்கிட இந்த அரசு உறுதியேற்றுள்ளது.

நீர்வளத்தில் நமது உரிமையை நிலைநாட்டி, பயிர்களுக்கும் ஏனைய உயிர்களுக்கும் தேவையான தண்ணீர் கிடைத்திடச் செய்திடுவோம்.

••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

**5. உலக நீர் நாளை முன்னிட்டு தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள பதிவில் குறிப்பிடப்பட்ட திருவள்ளுவர் குறள் என்ன?**

a) தண்ணீரின்றி பயிர்கள் வளராது

b) நீரின்றி அமையாது உலகு

c) மனித வாழ்க்கைக்கு நீர் அவசியம்

d) நீரை சிக்கனமாக பயன்படுத்துக

e) விடை தெரியவில்லை

விடை: b

**6. மேலே கொடுக்கப்பட்ட செய்திக்குறிப்பில் தமிழ்நாடு அரசு மக்களுக்கு எந்த உறுதியை வழங்கியுள்ளது?**

a) அனைவருக்கும் இலவச மின்சாரம்

b) தரமான குடிநீர் வழங்குதல்

c) நீர்வளத்தை தனியாருக்கு வழங்குதல்

d) அணைகளை மூடுதல்

e) விடை தெரியவில்லை

விடை: b



எனக்கல்ல !! உனக்காக !!

பள்ளிக்கல்வி இயக்ககம், சென்னை.
நாட்டுநலப்பணித் திட்டம்

அரசு மேல்நிலைப்பள்ளி

சிறப்புமுகாம் - தொடக்க விழா

நாள்: 26.9.2018

இடம்: பள்ளிக்கலையரங்கம்
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி

நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| தமிழ்த்தாய் வாழ்த்து | மாணவத் தொண்டர்கள் |
| வரவேற்புரை | திட்ட அலுவலர் |
| தலைமையுரை | தலைமையாசிரியர் |
| முகாமைத் தொடங்கி வைத்துச் சிறப்புரையாற்றுபவர் | முதன்மைக்கல்வி அலுவலர் |
| வாழ்த்துரை | பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் |
| வாழ்த்துரை | தலைமையாசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி |
| நன்றியுரை | மாணவத் தொண்டர், அரசு மேல்நிலைப்பள்ளி |
| நாட்டுப்பண் | மாணவர்கள் |
| தொகுப்புரை: நாட்டுநலப்பணித் திட்ட மாணவி | |

**7. படத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம் என்ன?**

a) திருவிழாவைக் கொண்டாடுதல்

b) விளையாட்டு போட்டி நடத்துதல்

c) தேசிய சேவை திட்டத்தின் கீழ் சிறப்பு திட்டத்தை தொடங்குதல்

d) கலாச்சார நிகழ்ச்சி அமைத்தல்

e) விடை தெரியவில்லை

விடை: c

**நிகழ்ச்சி நிரல்:**

**வரவேற்புரை:** திருமதி அரசி, செஞ்சிலுவைச் சங்க ஒருங்கிணைப்பாளர்.

**முன்னிலை:** திரு. அமுதன், இயற்கை வேளாண் உழவர்.

**தலைமையுரை:** திரு. இமயவரம்பன், பேரிடர் மேலாண்மை இயக்குநர்.

**கருத்தரங்கத் தலைப்புகள்:**

- இயற்கைச் சீற்றங்களும் - பருவகால மாற்றங்களும் - முனைவர் செங்குட்டுவன்
- பேரிடர்களை எதிர்கொள்ளுதலும் தீர்வுகளும் - திரு. முகிலன்
- நீர்வழிப்பாதைகளைப் பாதுகாத்தல் - திருமதி பாத்திமா
- பேரிடர்க் காலங்களில் செய்யக்கூடியதும் செய்யக் கூடாததும் -திரு. வின்சென்ட்

**1. மேலே கொடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சி நிரலில் பேரிடர் மேலாண்மை சம்பந்தமாக யார் உரையாடுவார்?**

a) திரு. அமுதன்

b) திருமதி அரசி

c) திரு. இமயவரம்பன்

d) மேல் கூறிய அனைவரும்

e) விடை தெரியவில்லை

விடை: c

2. **திருமதி பாத்திமாவின் கருத்தரங்கத் தலைப்பு யாது?**

   a) இயற்கைச் சீற்றங்களும்.


   b) பேரிடர்களை எதிர்கொள்ளுதலும் தீர்வுகளும்.

   c) நீர்வழிப்பாதைகளைப் பாதுகாத்தல்.

   d) பேரிடர்க் காலங்களில் செய்யக்கூடியதும் செய்யக் கூடாததும்.

   e) விடை தெரியவில்லை

   விடை: c



விண்ணப்ப எண்: மைய எண்:

திறந்தநிலைப் பல்கலைக்கழகம்

தொலைநிலைக் கல்வி இயக்ககம்

இளநிலை/முதுநிலை/பட்டயம்/சான்றிதழ்/முதுநிலைப்பட்டயம்/ அடிப்படைப்படிப்பு/அறிமுகநிலைப்படிப்பு/தொழில்முறை மற்றும் இதர படிப்புக்கான விண்ணப்பம்

கடவுச்சீட்டு (PASSPORT) அளவு புகைப்படம் ஒட்டவும்

அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும்.

கல்வியாண்டு 2019 2020 க

நாள்காட்டி ஆண்டு 2019 2020 நா

(கற்போர் தாங்களே விண்ணப்பத்தினை நிறைவு செய்தல் வேண்டும். அனைத்து விவரங்களும் கட்டாயம் அளிக்கப்பட வேண்டும்.)

நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பம் பல்கலைக்கழகத்திற்கு வந்து சேர வேண்டிய இறுதி நாள்.................................

| விண்ணப்பிக்க விரும்பும் பாடப்பிரிவு: | இளநிலை | முதுநிலை | பட்டயம் | சான்றிதழ் | முதுநிலைப் பட்டயம் | அடிப்படை நிலை | அறிமுக நிலை | பாடப் |
|---|---|---|---|---|---|---|---|---|

| கட்டணம் செலுத்திய விவரம் : | வரைவோலை | வங்கிச் செலுத்துச்சீட்டு | நிதிப்பிரிவு இரசீது | கணினி இரசீது |
|---|---|---|---|---|
| | எண்: | நாள்: | தொகை: | |

3. **மேலே கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பம் எந்த இயக்கத்தை சார்ந்தது?**

   a) திறந்த நிலை இயக்கம்

   b) மூடிய நிலை இயக்கம்

   c) கிட்ட நிலை இயக்கம்

   d) தொலை நிலை இயக்கம்

   e) விடை தெரியவில்லை

   விடை: d

மேல்நிலை வகுப்பு – சேர்க்கை விண்ணப்பம்

சேர்க்கை எண்: நாள்: வகுப்பும் பிரிவும்:

1. மாணவ / மாணவியின் பெயர் :
2. பிறந்த நாள் :
3. தேசிய இனம் :
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
5. வீட்டு முகவரி :
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு :
7. பயின்ற மொழி :
8. பெற்ற மதிப்பெண்கள் :
9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி :

| தேர்வின் பெயர் | பதிவு எண் – ஆண்டு | பாடம் | மதிப்பெண் (100) |
|---|---|---|---|
| | | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| | | கணிதம் | |
| | | அறிவியல் | |
| | | சமூக அறிவியல் | |
| | | மொத்தம் | |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? :
11. தாய்மொழி :
12. சேர விரும்பும் பாடப் பிரிவும் பயிற்று மொழியும் :

மாணவ / மாணவியின் கையெழுத்து

**4. மேலே கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பம் எதற்கு?**

a) பள்ளி சேர்க்கைக்கு

b) கல்லூரிக்கு சேர்க்கைக்கு

c) பயிற்சி சேர்க்கைக்கு

d) தோழில் சேர்க்கைக்கு

e) விடை தெரியவில்லை

விடை: a

# உவமைத் தொடரின் பொருளறிதல்

**உவமைத்தொடர்கள்:**

நாம் பேச்சிலும், எழுத்திலும் கருத்துகளை எளிதாக விளக்குவதற்காகச் சில தொடர்களைப் பயன்படுத்துவோம். அவை உவமைத்தொடர்கள் எனப்படும். ஒவ்வொரு உவமைத்தொடருக்கும் ஒரு தனிப் பொருள் உண்டு.

**எடுத்துக்காட்டு:**

1. மடை திறந்த வெள்ளம் போல – தடையின்றி மிகுதியாக திருவிழாவைக் காண மடை திறந்த வெள்ளம் போல மக்கள் வந்தனர்
2. உள்ளங்கை நெல்லிக்கனி போல – வெளிப்படைத்தன்மை

**உவமை தொடரும், அதன் பொருளும்:**

| **உவமைத்தொடர்** | **பொருள்** |
|---|---|
| உள்ளங்கை நெல்லிக்கனி போல | தெளிவு |
| காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது போல | தற்செயல் நிகழ்வு |
| கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது போல | எதிர்பாரா நிகழ்வு |
| பசு மரத்து ஆணி போல | எளிதில் மனதில் பதிதல் |
| நெல்லிக்காய் மூட்டையைக் கொட்டினாற் போல | ஒற்றுமையின்மை |
| இலவுகாத்த கிளி போல | ஏமாற்றம் |
| அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல | பொறுமை |
| மலரும் மணமும் போல | இணைந்திருத்தல் |
| சர்க்கரைப் பந்தலில் தேன்மழை பொழிந்தது போல | இனிமைக்கு இனிமை சேர்த்தல் |
| கடலில் கரைத்த பெருங்காயம் போல | வீணாதல்/ பயனற்றுப்போதல் |
| காற்றுள்ளபோதே தூற்றிக் கொள் | வாய்ப்பை பயன்படுத்துதல் |
| சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும் | ஊக்கப்படுத்துதல் |
| அகத்தின் அழகு முகத்தில் தெரியும் | வெளிப்பாடு |
| அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு | பேராசை |
| சுவரை வைத்து தான் சித்திரம் வரைய முடியும் | அடிப்படை |
| பகல் வெல்லும் கூகையைக் காக்கை | தக்க தருணத்தை எதிர்பார்த்தல் |
| அனலிடப்பட்ட புழுவைப் போல | துன்பம் |

| | |
|---|---|
| இரும்பைக் கண்ட காந்தம் போல | கவர்ச்சி |
| வேலியே பயிரை மேய்ந்தாற் போல | நம்பிக்கை துரோகம் |
| ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது | பட்டறிவு இல்லாத படிப்பறிவு |
| மழை காணாப் பயிர் போல | வாடியிருத்தல் |
| கயிறு திரித்தல் | பொய்கூறுதல் |
| பாம்பின் கால் பாம்பறியும் | கற்றவரைக் கற்றவரே அறிவர் |
| வெள்ளத்தனைய மலர்நீட்டம் | முயற்சிக்கு ஏற்ற பலன் |
| இருதலைக் கொள்ளி எறும்பு போல் | தவிப்பு |
| முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போல | நிறைவேறாத ஆசை |
| சூடுபட்ட பூனை போல | எச்சரிக்கை கொள்தல் |
| கைக்கெட்டியது வாய்க்கு எட்டாதது போல | வாய்ப்பு நழுவுதல் |
| தாமரை இலைத் தண்ணீர் போல | பற்றற்ற நிலை |
| இடியோசை கேட்ட நாகம் போல | அஞ்சுதல் |
| தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும் | பாசம் |
| தொட்டனைத்தூறும் மணற்கேணி போல | ஆற்றல் பெருகுதல் |
| உடுக்கை இழந்தவன் கை போல | நட்பு |
| சாதி எனும் சாக்கடையில் புழுப் போல | மூடன் |
| நாய் பெற்ற தெங்கம் பழம் | தானும் அனுபவிக்காமல் பிறருக்கும் கொடுக்காமல் வாழ்தல் |
| இஞ்சி தின்ற குரங்கு போல | தவிப்பு |
| திங்களை நாய் குரைத்தற்று | பயனில்லாத செயல் |
| இலைமறை காய் போல | மறைபொருள் |
| விழலுக்கு இறைத்த நீர் போல | பயனற்றது |
| இடி இடித்தது போல | அதிகமான சத்தம் |
| ஊமை கண்ட கனவு போல் | கூற இயலாமை |
| உயிரும் உடம்பும் போல | ஒற்றுமை |
| திங்களைப் பாம்பு கொண்டற்று | திங்கள் மறைப்பு |
| துஞ்சுபுலி இடறிய சிதடன் போல | அறியாமை |
| எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்த்தது போல | வெறுப்பை வளர்த்தல் |
| ஒருமையுள் ஆமை போல் | அடக்கம் |

| | |
|---|---|
| நன்பால் கலந்தீமையால் திரிதல் போல | தவறான நண்பர்களால் கெடுதல் |
| மரப்பாவை நாணால் உயிர் மருட்டல் போல | மயங்கு |
| செவிடன் காதில் ஊதிய சங்கு போல | பயனின்மை |
| குரங்கு கையில் அகப்பட்ட பூமாலை போல | நாசம், கேடு |
| பத்தரை மாற்றுத் தங்கம் போல | பெருமை, மதிப்பு |
| உடலும் உயிரும் போல | ஒற்றுமை, நெருக்கம் |
| காய்ந்த மாடு கம்பங்கொல்லையில் பாய்ந்தாற் போல | வேகம் |
| பால் மணம் மாறாத குழந்தை போல | வெகுளி |
| கரையான் புற்றெடுக்கக் கருநாகம் குடி புகுந்தது போல | அத்துமீறல் |
| இடி விழுந்த மரம் போல | வேதனை |
| கடன்பட்டார் நெஞ்சம் போல | கலக்கம், வருத்தம் |
| அரை கிணற்றினைத் தாண்டியவன் போல | ஆபத்து |
| அச்சில் வார்த்தாற் போல | ஒரே சீராக |
| சிதறிய முத்து போல | பயனின்மை |
| சீசீ இந்தப் பழம் புளிக்கும் | ஏமாற்றம் |
| இரும்பைக் கண்ட காந்தம் போல | கவர்ச்சி |
| உமி குத்திக் கை வலித்தது போல | வீண் செயல் |
| கான மயிலாட அது கண்டு ஆடும் வான்கோழி | பொறாமை, தாழ்வு, உயர்வின்மை |
| நீர் மேல் எழுத்துப் போல | நிலையற்றது |
| செந்தமிழும் சுவையும் போல | ஒற்றுமை |
| அன்றலர்ந்த மலர் போல | புத்துணர்வு |
| அலை ஓய்ந்த கடல் போல | அமைதி |
| நாண் அறுந்த வில் போல | பயனற்றது |
| சேற்றில் பிறந்த செந்தாமரை போல | உயர்வு/மேன்மை |
| கரும்பு தின்னக் கைக்கூலி கேட்டது போல | நன்மை உணராமை |
| நாய்க்கால் சிறுவிரல், போல் நன்கணியராயினும் | உதவமாட்டார் |
| செல்லரித்த ஓலை போல | பயனின்மை |
| பாம்பின் வாய்த்தேரை போல | மீளாமை |

| | |
|---|---|
| பால் மணம் மாறாத குழந்தை போல | வெகுளி |
| சித்திரப் பதுமை போல | அழகு |
| சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தாற் போல | வேண்டாத வேலை. கேடு செய்தல் |
| சிவபூஜையில் கரடி போல | விருப்பமின்மை, தேவையற்ற வரவு |
| திருடனை தேள் கொட்டியது போல | சொல்ல முடியாத வேதனை |
| தோன்றி மறையும் வானவில்லை போல | நிலையாமை |
| தாயைப் போல பிள்ளை, நூலைப் போல சேலை | தொடர்பு |
| முதல் இல்லார்க்கு ஊதியம் இல்லை | சார்பு இல்லார்க்கு நிலை இல்லை |
| பொருதகர் தாக்கற்குப் பெயர்வது | ஊக்கம் உடையான் ஒடுக்கம் |
| பொருள் என்ற விளக்கு | பகை என்ற இருளை அழிக்கும் |
| மட அன்ன கதியது போல | படகு செல்வது |
| குன்றேறி யானைப்போர் காணுதல் | தன் கைப்பொருள் கொண்டு ஒரு வேலையைச் செய்வது (பாதுகாப்பு உடையது) |
| பைங்கூழ்களை கட்டதளோடு நேர் | வேந்தன் கொலையிற் கொடியாரை ஒறுத்தல் |
| புத்திக்குள் உண்ணப்படும் தேன் | தமிழ் |
| வேந்தன்கோல் தோக்கி வாழும் குடி | இறைவன் திருவடி நோக்கி பக்தன் இருத்தல் |
| தேய்பிறை போன்றது | பேதையார் நட்பு |
| வளர்பிறை போன்றது. | அறிவுடையார் நட்பு |
| நவில்தோறும் நூல்நயம் போன்றது | பண்புடையார் நட்பு |
| அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்றது | ஒழுக்கம் இல்லான்கண் உயர்வு இல்லை |
| கொக்கொக்க கூம்பும் பருவத்து | காத்திருந்து செயல்படுதல் |
| மட அன்னக் கதியது செல | படகுகள் நீரில் மிதந்து செல்வது |
| காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியதுபோல | துன்பம் |
| அடியற்ற மரம் போல | சாய்தல் |
| மடைதிறந்த வெள்ளம் போல | பெருக்கம்/வேகம்/தடையின்மை |
| கல்மேல் எழுத்துப்போல | நிலைத்து நிற்றல் |
| கிணற்று தவளை போல | உலக அறிவின்மை |
| நிலவும் வானும் போல | சேர்ந்திருத்தல் |
| குன்றின் மேலிட்ட விளக்குப் போல | அனைவரும் அறிதல் |

**திருக்குறள் தொடர்பான உவமைகள்:**

1. அகழ்வாரைத் தாங்கும் நிலம் - இகழ்வாரைப் பொறுத்தல்
2. நன்பால் கலம் தீமையால் திரிதல் - பண்பிலான் பெற்ற பெரும் செல்வம்
3. மரம்போல்வர் - மக்கட் பண்பு இல்லாதவர்
4. நீர்வழிப் படூஉம் புனை - முறைவழிப் படூஉம் உயிர்
5. மரப்பாவை நாணால் உயிர் மருட்டல் - நாண் அகத்தில்லார் இயக்கம்(செயல்பாடு)
6. மக்களுள் பதடி - பயனிலாச்சொல் பேசுபவன்
7. தாயைப் போல பிள்ளை – தொடர்பு
8. கனியிருப்பக் காய் கவர்ந்தற்று - இன்னாத கூறல்
9. பைங்கூழ் (பயிர்)களை கட்டதனோடு நேர் -கொடியவரை ஒறுத்தல் (தண்டித்தல்)
10. ஒற்கத்தின் ஊற்றாம் துணை - உள்ள தளர்ச்சிக்கு அறிவுடையார் கூறும் அறிவுரை
11. ஒருமையுள் ஆமை போல் - அடக்கம்
12. ஞாயிற்றைக் கையால் மறைப்பவர் இல் - முடியாத செயல்
13. யானையால் யானை யாத்தற்று - ஒரு செயலை செய்து அதன்மூலம் மற்றொன்றையும் முடித்தல்
14. இணர் ஊழ்த்தும் நாறா மலர் - காற்றும் எடுத்துக் கூற தெரியாதவர்
15. பாம்பின் கால் பாம்பறியும் - கற்றவரைக் கற்றவரே அறிவர்
16. நிலத்து அறைந்தான் கை பிழையாதற்று - சினம் கொண்டவன் கேடு (தீமை அடைந்தே தீருவான்)
17. ஊக்கம் உடையான் ஒடுக்கம் - சண்டைக்கு ஆடு பின்வாங்குதல்

**பொருள் – உவமை**

**I)**

1. கூந்தல் - மேகம், வண்டின் கூட்டம், கருநாகம்
2. நெற்றி - பிறைச் சந்திரன்
3. காது - வள்ளை பூ (சங்கு பூ)
4. கண் - குவளை, கழுநீர், திராட்சை, வாள், மீன், சோழி, கயல், ஈட்டி, வேல், மான்.
5. புருவம் - வில்

6. மூக்கு - எள்பூ (எள்ளின் பூ)
7. உதடு - பவளம், முருக்கு (முருக்கம் பூ சிவப்பு), சேதாம்பல் (சிவப்பு ஆம்பல்) ஆரஞ்சு
8. பல் - முத்து, முல்லை, அரிசி
9. வாய் - தாமரை, குமுதம்
10. மொழி, குரல, பேச்சு - தேன், கரும்பு, கன்னல் (கரும்பு)
11. கன்னம் - மாம்பழம், ஆப்பிள்
12. முகம் - நிலவு, தாமரை
13. கழுத்து - சங்கு, மயில்
14. மார்பு - இளநீர், சூதுக்காய்
15. தோள் - மூங்கில், பாறை, பனை (ஆண்)
16. வயிறு - ஆலிலை
17. இடை - துடி (உடுக்கை), பிடி, நூல், வல்லி, மின்னல், கொடி
18. கால் - வாழை
19. கணுக்கால் - வரால் (மீன்)
20. பாதம்- தாமரை

II.

1. பார்வை மருட்சி -மான்
2. நடை - அன்ன நடை
3. துள்ளல் நடை - மான்
4. சாயல் (நிறம்) - மயில், மாந்தளிர்
5. ஆண் உடம்பு - எஃகு, தேக்கு
6. ஆணின் தோள்- மலை, பனை
7. ஆணின் நடை - எருது, காளை, களிறு (ஆண் யானை)

III.

1. ஆமைபோல் - அடக்கம்
2. புலி போல் - பாய்ச்சல்
3. பூனை போல் - பதுங்கல்
4. எஃகு போன்ற - உறுதி
5. தேக்கு போன்ற - உடல்
6. எறும்பு - சுறுசுறுப்பு
7. தீ போன்ற - நாக்கு
8. நெருப்பு போன்ற – கண்
9. பாம்பு போன்ற - சிற்றம்
10. பாம்புச் செவி - கூர்ந்து கேட்கும் திறன்
11. கரடி போன்ற - முடி
12. உடும்பு போன்ற - பிடி
13. நாணல் போன்ற - பணிவு

14.வைரம் போன்ற - உறுதி, வலிமை
15.சிங்கக் குட்டி - வீரம், தலைமை
16.வெள்ளித் தட்டு போன்ற - நிலா
17.கொப்புளம் போன்ற - விண்மீன்
18.நீல ஆடை போன்ற - வானம், கடல்
19.உருக்கி வார்த்த வெள்ளி – அருவி

IV.

1. தர்மன் - நேர்மை
2. அருச்சுனன் - வீரம்
3. கண்ணன் – அறிவு
4. கன்னன் (கர்ணன்) - செஞ்சோற்றுக்கடன்
5. பீமன் - வலிமை
6. எமன் - நடுநிலைமை
7. லக்குமி - அழகு
8. குபேரன் - செல்வம்
9. விநாயகர் - ஞானம்
10. பாட்டி – பழங்கதை, வளவளப்புப் பேச்சு
11. இராமன் - ஓர் இல்

V.

1. புலியும் மானும் போல - பகை
2. வளர்பிறை போல - வளர்தல்
3. கீரியும் பாம்பும் போல் - பகை
4. நகமும் சதையும் போல் - நட்பு /நெருக்கம்
5. ஆமை போல - அடக்கம்
6. உடுக்கை இழந்தவன் கை போல் - நட்பு
7. சூரியனைக் கண்ட பனி போல - விலகுதல்
8. அச்சில் வார்த்தார் போல - உடன் பிறப்பு, 2ம் ஒரே மாதிரி
9. ஊருணி நீர் நிறைந்தற்று - நல்ல குணமுடையவன் செல்வம்
10. நூலைப் போல சேலை - தாயைப் போலப் பிள்ளை
11. பேடி கை ஒள்வாள்(ஒளிர்கின்ற வாள்) - தாளாண்மை (முயற்சி) இல்லாதான் வேளாண்மை.
12. அனிச்சம் பூ - விருந்தினர்

**உவமைத் தொடர்களுக்கான எடுத்துக்காட்டுகள்**

**1. அடியற்ற மரம் போல**

பொருள்: அடியற்ற - வேரில்லாத

பயன்பாடு: பெரும்துன்பம்

கணவன் இறந்த செய்திக் கேட்ட கண்ணகி அடியற்ற மரம் போலச் சாய்ந்தாள்.

2. **அனலில் இட்ட மெழுகு போல**

பொருள்: அனலில் - நெருப்பில்

பயன்பாடு: துடிதுடித்தல்

பால் காய்ச்சும் போது தவறுதலாக கையில் ஊற்றிக் கொண்ட கவிதா, அனலில் இட்ட மெழுகு போல வலியால் துடித்தாள்.

3. **இலைமறை காய் போல**

பொருள்: இலைமறை - இலையின் மறைவில்

பயன்பாடு: மறைமுகமாக

திரைப்படத்தில் ஒரு சில மர்மங்களை இயக்குனர் இலைமறை காய் போல காட்டியிருந்தார்.

4. **எலியும் பூனையும் போல**

பொருள்: எலியும் பூனையும்

பயன்பாடு: எதிரிகளாக

ரகுவும் ரவியும் எலியும் பூனையும் போலச் சண்டையிட்டுக் கொண்டனர்.

5. **ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல**

பொருள்: ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் - ஒரு தாயின் வயிற்றிலிருந்து பிறந்த பிள்ளைகள்

பயன்பாடு: உடன் பிறந்தவர்களாக

ராமுவும் அவன் நண்பர்களும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல ஒற்றுமையுடன் பழகி வந்தார்கள்.

6. **கண்ணினைக் காக்கும் இமை போல**

பொருள்: கண்ணினைக் காக்கும் இமை - கண்களைக் காப்பாற்றும் இமைகள்

பயன்பாடு: அக்கறையாக

தாய் தன் குழந்தையை கண்ணினைக் காக்கும் இமை போலப் பார்த்துக் கொண்டாள்.

**7. கரை காணாக் கப்பல் போல**

பொருள்: கரை காணாக் கப்பல் - கரையை காணாமல் நடுக்கடலில் தவிக்கும் கப்பல்.

பயன்பாடு: தவிப்பு

கூட்டத்தில் தன் தாயை பிரிந்த குழந்தை, கரை காணாக் கப்பல் போல தவிதவித்தது.

**8. கலங்கரை விளக்கம் போல**

பொருள்: கப்பலுக்கு வழிக் காட்டும் வெளிச்சம்.

பயன்பாடு: வழிகாட்டுதல்

ஆசிரியர் தேவன் பாடம் கற்றுக் கொடுப்பது மட்டுமல்லாமல், வாழ்க்கைக்குத் தேவையானவற்றையும் கற்றுக் கொடுப்பதால், மாணவர்களுக்கு கலங்கரை விளக்கம் போல திகழ்ந்தார்.

**9. கன்றினைக் கண்ட பசு போல**

பொருள்: கன்றினைக் கண்ட பசு - கன்றுக்குட்டியை கண்ட தாய்ப்பசு

பயன்பாடு: சேயை கண்டு தாய் அடையும் மகிழ்ச்சி

கூட்டத்தில் காணாமல் போன குழந்தையை மீண்டும் பார்த்தவுடன், மீனாட்சி கன்றினைக் கண்ட பசு போல ஓடிச் சென்று தழுவினாள்.

**10. காட்டுத்தீ போல**

பொருள்: காட்டுத்தீ - காட்டில் பிடித்த தீ

பயன்பாடு: வேகமாகப் பரவுதல்

சில நேரங்களில், உண்மையை விட வதந்திகள் காட்டுத்தீ போலப் பரவுவதை நாம் உணர முடியும்.

**11. கிணற்றுத் தவளை போல**

பொருள்: கிணற்றுத் தவளை - கிணற்றுக்குள் வாழும் தவளை

பயன்பாடு: வெளி உலகம் தெரியாமல் இருப்பது.

மல்லிகா படித்திருந்தாலும், கிணற்றுத் தவளை போல அறியாமையுடன் இருந்தாள்.

**12.தூண்டிலில் மாட்டிய மீன் போல**

பொருள்: தூண்டிலில் மாட்டிய மீன் - தூண்டிலில் சிக்கிக் கொண்ட மீன்

பயன்பாடு: துடிதுடிப்பு

கொள்ளையர்களிடம் மாட்டிக் கொண்ட சிறுமி மீனா, தூண்டிலில் மாட்டிய மீன் போலத் துடித்தாள்.

**13.அத்தி பூத்தாற்போல்**

பொருள்: அத்தி பூத்தது - அத்திப்பூ பூத்தது

பயன்பாடு: அரிய செயல்

ராமு படிப்பில் கவனம் செலுத்தத் தொடங்கிய பின், தொலைக்காட்சி பார்ப்பது அத்தி பூத்தாற் போல் ஆகிவிட்டது.

**14.உடும்புப்பிடி போல்**

பொருள்: உடும்புப்பிடி - உடும்பு(பல்லி வகை) சுவற்றை பிடித்திருப்பது.

பயன்பாடு: கெட்டியாக

மாறன் தன் கொள்கைகளை உடும்புப்பிடி போல பற்றிக் கொண்டிருந்தான்.

**15.குடத்தில் இட்ட விளக்குப் போல**

பொருள்: குடத்தில் இட்ட விளக்கு - குடத்துக்குள் ஏற்றிய விளக்கு

பயன்பாடு: திறமையை வெளிக்காட்டாமல்

வாய்ப்புக் கிடைக்காததால், அமரனின் ஓவியத் திறமை குடத்தில் இட்ட விளக்கு போல இருந்தது.

**16.சிறகு ஒடிந்த பறவை போல**

பொருள்: சிறகு ஒடிந்த பறவை - இறக்கைகளை இழந்த பறவை

பயன்பாடு: செயலற்றுப் போகுதல்

மனைவியை இழந்த குமரன் சிறகு ஒடிந்த பறவை போல ஆனான்.

**17.ஆனை வாயில் அகப்பட்ட கரும்பு போல**

பொருள்: ஆனை வாயில் அகப்பட்ட கரும்பு - யானையின் வாய்க்குள் போன கரும்பு

பயன்பாடு: நசுங்கிப் போதல்

கரும்பு ஆலையில் இயந்திரத்திற்குள் விடப்பட்ட கரும்பு ஆனை வாயில் அகப்பட்ட கரும்பு போல சக்கையானது.

**18.கப்பல் கவிழ்ந்தாற் போல**

பொருள்: கப்பல் கவிழ்ந்தால் - கப்பல் தண்ணீருக்குள் மூழ்கினால்

பயன்பாடு: சோகம்

பாரதி, மதிப்பெண்கள் குறைந்ததற்கு, ஏதோ கப்பல் கவிழ்ந்தாற் போல் சோகமாக இருந்தாள்.

**19.கனியிருக்கக் காயை விரும்புவது போல**

பொருள்: கனியிருக்கக் காயை விரும்புவது - இனிப்பான கனிகள் இருக்கும்போது கசப்பான காயை விரும்புவது

பயன்பாடு: நல்லது இருக்க, கெட்டதை நோக்கி செல்வது

பேசுவதற்கு பல இனிய சொற்கள் இருக்கும்போது தீய சொற்களை பயன்படுத்துவது கனியிருக்கக் காயை விரும்புவது போல என்று வள்ளுவர் கூறியுள்ளார்.

**20.கீரியும் பாம்பும் போல**

பொருள்: கீரியும் பாம்பும் -கீரிப்பிள்ளையும் பாம்பும்

பயன்பாடு: பகை

கவியும் ரதியும், கீரியும் பாம்பும் போல எப்போதும் சண்டையிட்டுக் கொண்டு இருப்பார்கள்.

**21.குன்றின் மேலிட்ட விளக்குப் போல**

பொருள்: குன்றின் மேலிட்ட விளக்கு - மலையின் மேல் ஏற்றி வைத்த விளக்கு

பயன்பாடு: அனைவரும் அறிதல்

கர்ணனின் கொடையுள்ளம் குன்றின் மேலிட்ட விளக்கு போல

அனைவரது உள்ளத்திலும் பிரகாசித்தது.

**22.சுடச் சுடரும் பொன் போல**

பொருள்: சுடச் சுடரும் பொன் - நெருப்பில் சுடச் சுட பொன் மிளிரும்.

பயன்பாடு: அனுபவத்தால் தேர்ந்தவர் ஆதல்

சுடச் சுடரும் பொன் போல, வாழ்க்கையில் ஏற்படும் அனுபவங்கள் நம்மைச் செம்மைப் படுத்துகின்றன.

**23.சூரியனைக் கண்ட பனி போல**

பொருள்: சூரியனைக் கண்ட பனி - சூரியனைக் கண்ட பனித்துளி

பயன்பாடு: விலகுதல்

சூரியனைக் கண்ட பனி போல துன்பமெல்லாம் விலக வேண்டும் என்று மாதவி கடவுளை வணங்கினாள்.

**24.சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைப் போல**

பொருள்: சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை - சொல்வதை அப்படியே திருப்பிச் சொல்லும் கிளி

பயன்பாடு: சொல்வதையே திருப்பித் திருப்பிச் சொல்லுதல்

சிறுபிள்ளைகள் சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைப் போல அவர்கள் சொன்னதையே திருப்பிச் சொல்வார்கள்.

**25.நீர்மேல் எழுத்துப் போல**

பொருள்: தண்ணீர் மேல் எழுதும் எழுத்து

பயன்பாடு: நிரந்தரமற்ற வார்த்தைகளை குறிப்பிடுதல்

குடிகாரனின் வாக்கு நீர்மேல் எழுத்து போல, சொன்ன மாத்திரமே நீர்த்துப் போகும்.

**26.பசுமரத்தாணி போல**

பொருள்: பசுமரத்தாணி - பச்சை மரத்தில் ஆணியால் எழுதுவது

பயன்பாடு: நிரந்தரமாய் நினைவில் இருத்தல், எளிதில் புரிந்து கொள்ளுதல்

பசுமரத்தாணி போல சிறுவயதில் மனதில் பதிந்த நிகழ்வுகள் ஒருவரின் வாழ்வில் பெரிய மாற்றத்தை நிகழ்த்தும்.

**27.பார்க்காததைப் பார்த்தது போல**

பொருள்: பார்க்காததைப் பார்த்தது

பயன்பாடு: மலைப்பு

அலுவலகத்திலிருந்து முன்கூட்டியே வந்த தந்தையை ஏதோ பார்க்காததைப் பார்த்தது போலப் பார்த்து நின்றான் சரவணன்.

**28.மழை பெய்து ஓய்ந்தது போல**

பொருள்: மழை பெய்து ஓய்ந்தது - கனமழைக்குப் பின் மழை ஓய்ந்தது.

பயன்பாடு: பெரிய இரைச்சலுக்குப் பின் அமைதி நிலவுதல்.

திருமண வீட்டிற்கு வந்த அனைத்து விருந்தினரும் சென்ற பின், அந்த இடம் மழை பெய்து ஓய்ந்தது போலக் காணப்பட்டது.

**29.அடுத்தது காட்டும் பளிங்கு போல**

பொருள்: அடுத்தது காட்டும் பளிங்கு - தன்னை அடுத்த பொருளது நிறத்தைத் தானே கொண்டு காட்டும் பளிங்கு

பயன்பாடு: உள்ளத்தில் இருப்பதை முகம் காட்டிக் கொடுத்து விடுவது.

தன் அருகே இருக்கும் பொருளின் நிறத்தைக் காட்டும் பளிங்கினைப்போல் ஒருவனது மனதில் நிகழ்வதை அவன் முகம் காட்டும்.

**30.நுணலும் தன் வாயால் கெட்டது போல**

பொருள்: நுணலும் தன் வாயால் கெட்டது - தவளை வாயால் சத்தமிடுவதால் எதிரி அதன் இருப்பிடத்தை தெரிந்து கொள்ளுதல்.

பயன்பாடு: தனக்கான துன்பத்தை தானே தேடுதல்

தவளை தன் வாயால் கெட்டது போல இரு திருடர்களும் திருடிய பொருளை எங்கு மறைத்து வைப்பது என்று விவாதித்ததை காவலர் கேட்டதால் அவர்களை கைது செய்தார்.

**31.நீறு பூத்த நெருப்புப் போல**

பொருள்: நீறு பூத்த நெருப்பு - சாம்பல் மறைத்து இருக்கும் நெருப்பு

பயன்பாடு: ஏற்கனவே இருந்த பிரச்சினை திடீரென்று வெடிப்பது

போராட்டத்தில் ஏற்கனவே, நீறு பூத்த நெருப்பு போல இருந்த கோரிக்கைகள், திடீரென்று, எரியத் துவங்கின.

**32.வெறுங்கையில் முழம் போடுவது போல**

பொருள்: வெறுங்கையில் முழம் போடுவது - கையில் பொருள் ஏதும் இல்லாமல் அளப்பது

பயன்பாடு: கையில் பொருள் இல்லாமல் செயலைத் திட்டமிடுவது.

மழை இன்றி இவ்வுலகின் நீர் ஆதாரங்களை செழிக்க வைப்பது வெறுங்கையில் முழம் போடுவது போல ஆகும்.

**33.இரும்பை இழுக்கும் காந்தம் போல**

பொருள்: இரும்பை இழுக்கும் காந்தம் - காந்தத்தால் கவரப்படும் இரும்பு

பயன்பாடு: ஈர்ப்பு

இரும்பை இழுக்கும் காந்தம் போல எறும்புகளை ஈர்த்தன இனிப்புப் பலகாரங்கள்.

**34.எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்த்தாற்போல**

பொருள்: எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்த்தல் - எரிந்து கொண்டிருக்கும் நெருப்பில் தூண்டிவிடுவதாய் எண்ணெய் ஊற்றுதல்.

பயன்பாடு: பிரச்சினையைப் பெரிதாக்குதல்

பேச்சு வார்த்தையில் ஈடுபட்டிருந்த போது, சிலர் வன்முறையில் இறங்கியதால், எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்த்தாற்போல போராட்டம் தீவிரமடைந்தது.

**35.தாயைக் கண்ட சேயைப் போல**

பொருள்: சேய் - குழந்தை

பயன்பாடு: மகிழ்ச்சி

சேகர் தன் குடும்பத்தைக் கண்டவுடன் தாயைக் கண்ட சேயைப் போல மகிழ்ந்தான்.

**36.நகமும் சதையும் போல**

பொருள்: நகமும் சதையும் - நகமும் நகத்தை ஒட்டி இருக்கும் சதையும்.

பயன்பாடு: நெருக்கம்

கலாவும் சீதாவும், நகமும் சதையும் போல இணை பிரியாத தோழிகளாக இருந்தார்கள்.

**37.நுனிப்புல் மேய்ந்தாற்போல**

பொருள்: நுனிப்புல் - புல்லின் நுனி

பயன்பாடு: மேலோட்டமாக

ரவி, நுனிப்புல் மேய்ந்தாற்போல படித்ததால் அவனால் தேர்வில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விரிவாகப் பதிலளிக்க இயலவில்லை.

**38.பல் பிடுங்கின பாம்பு போல**

பொருள்: பல் பிடுங்கின பாம்பு - பல் பிடுங்கப்பட்ட பாம்பு

பயன்பாடு: செயலற்ற தன்மை

பெரிய கொள்ளைக்காரனான சேது, கைது செய்யப்பட்டவுடன் பல் பிடுங்கின பாம்பு போல ஆனான்.

**39.பழமரம் நாடிய பறவை போல**

பொருள்: பழமரம் நாடிய பறவை - பழங்கள் நிறைய இருக்கும் மரத்தை தேடி செல்லும் பறவை

பயன்பாடு: பொருள் இருக்கும் இடத்தைத் தேடி செல்வது.

குணாளன் செல்வந்தராக ஆனபோது அவருடைய பழைய நண்பர்கள் அனைவரும் பழமரம் நாடிய பறவை போல வந்து சேர்ந்தனர்.

**40.பாம்புக்குப் பால் வார்த்தாற்போல**

பொருள்: பாம்புக்குப் பால் வார்ப்பது - பாம்புக்குப் பாலைக் கொடுப்பது.

பயன்பாடு: நல்லது செய்பவருக்கே தீங்கு விளைவிப்பது.

இளகிய மனம் கொண்ட கந்தன், திருட வந்த திருடனுக்கு வேலை போட்டுக் கொடுத்து, பாம்புக்குப் பால் வார்த்தாற்போல் பணமும் கொடுத்தார். ஆனால் திருடனோ கையில் கிடைத்ததை சுருட்டிக் கொண்டு ஓட்டம் பிடித்தான்.

**41.புலியைக் கண்ட மான் போல**

பொருள்: புலியைக் கண்ட மான்

பயன்பாடு: மிரட்சி, பயந்து ஓடுதல்

1. அந்நியர்களைக் கண்ட குழந்தை புலியைக் கண்ட மான் போல மிரண்டது.

2. காவலரைக் கண்ட திருடன் புலியைக் கண்ட மான் போல பயந்து ஓடினான்.

**42.பூவோடு சேர்ந்த நாறும் மணப்பது போல**

பொருள்: பூவோடு சேர்ந்த நாறும் மணப்பது - நாறில் கட்டப்படும் பூவினால் நாறும் சேர்ந்து மணம் பெறுவது.

பயன்பாடு: நல்லவர்களுடன் சேர்ந்து நன்மை அடைவது.

நல்லவர்களுடன் பழகினால் பூவோடு சேர்ந்த நாறும் மணப்பது போல நாமும் நன்மை அடையலாம்.

**43.முகத்தில் அடித்தாற்போல**

பொருள்: முகத்தில் அடித்தல் - அவமானப் படுத்துதல்

பயன்பாடு: அவமானம்

நெடுநாள் பகையில் இருந்த ரவி மனந்திருந்தி தன் நண்பனைப் பார்க்க வந்த போது, நண்பனின் மனைவி முகத்தில் அடித்தாற்போல பேசி அனுப்பினாள்.

**44.வெயிலில் இட்ட புழு போல**

பொருள்: வெயிலில் இட்ட புழு - சூடு தாங்காமல் துடிக்கும் புழு

பயன்பாடு: துடிப்பது

கையில் காய்ச்சின பாலை ஊற்றிக்கொண்ட மாலதி வெயிலில் இட்ட புழு போல துடித்தாள்.

**45.கல்லில் நார் உரித்தாற்போல**

பொருள்: கல்லில் நார் உரிப்பது -கல்லில் இருந்து நார் எடுப்பது

பயன்பாடு: பொய்யாகக் கதை சொல்வது

மாலன் தான் செய்த தவறை மறைக்க கல்லில் நார் உரித்தாற்போல பல கற்பனைக் கதைகளை அவிழ்த்து விட்டான்.

**46.தூங்குகிற புலியைத் தட்டி எழுப்பினாற்போல**

பொருள்: தூங்குகிற புலியைத் தட்டி எழுப்புவது

பயன்பாடு: அமைதியாக இருப்பவரை தூண்டிவிடுவது

தூங்குகிற புலியைத் தட்டி எழுப்பினாற்போல, அடிமைப் பட்டு கிடந்த மக்களின் உள்ளத்தில் புரட்சியை விதைத்தன பாரதிதாசனின் கவிதைகள்.

**47.பசுத்தோல் போர்த்திய புலி போல**

பொருள்: பசுத்தோல் போர்த்திய புலி - பசுவின் தோலைக் கொண்டு மூடியிருக்கும் புலி

பயன்பாடு: சாதுவாக நடிப்பது

பரம சாதுவான பாலன் ஒருநாள் சண்டையில் மிக மூர்க்கமாக நடந்து கொண்டபோதுதான், அவன் பசுத்தோல் போர்த்திய புலி போல என்பது தெரியவந்தது.

**48.மீகாமன் இல்லா மரக்கலம் போல**

பொருள்: மீகாமன் இல்லா மரக்கலம் - கப்பலை வழிநடத்துபவர் இல்லாத கப்பல்

பயன்பாடு: வழிகாட்டுதல் இல்லாமல் தவித்தல்

கணவன் இறந்த பின் கமலாவின் குடும்பம் மீகாமன் இல்லா மரக்கலம் போல தவித்தது.

**49.அவசரக் கோலம் அள்ளித் தெளித்தாற்போல**

பொருள்: அவசரக் கோலம் அள்ளித் தெளிப்பது - நிதானமாக அழகாக போடவேண்டிய கோலத்தை அவசரமாக அள்ளித் தெளிப்பது.

பயன்பாடு: நிதானமாகச் செய்யவேண்டிய செயலை அவசரமாக செய்வது.

முன்பெல்லாம் மூன்று நாட்கள் என்று இருந்தது போய், ஒரு நாள் திருமணத்தில் காலை, மாலை என இருந்ததும் போய் இப்போது காலை மட்டும் அவசரக் கோலம் அள்ளித் தெளித்தாற்போல என ஆகி இருக்கிறது இக்காலத் திருமண விழா.

**50.அடிவயிற்றில் நெருப்பைக் கட்டினாற்போல**

பொருள்: அடிவயிற்றில் நெருப்பைக் கட்டுவது

பயன்பாடு: பயம்

இரவில் ஆள் நடமாட்டம் இல்லாத சாலையில் சென்ற ரமாவிற்கு அடிவயிற்றில் நெருப்பைக் கட்டினாற்போல இருந்தது.

**51.ஏறவிட்டு ஏணியைப் பிடுங்கினாற்போல**

பொருள்: ஏறவிட்டு ஏணியைப் பிடுங்குவது - இறங்குவதற்கு ஏணி கொடுக்காமல் இருப்பது.

பயன்பாடு: பாதியில் தவிக்க விடுவது

தன் வீட்டுப் பூனையை பக்கத்து ஊருக்கு அழைத்துச் சென்று, அங்கேயே விட்டு வந்த சுந்தரத்தின் செயல் ஏறவிட்டு ஏணியைப் பிடுங்கினாற்போல இருந்தது.

**52.காதும் காதும் வைத்தாற்போல**

பொருள்: காதும் காதும் வைப்பது

பயன்பாடு: ஒருவருக்கும் தெரியாமல்

திருடிய பொருட்களை கொள்ளையர்கள் காதும் காதும் வைத்தாற்போல மறைத்து வைத்தார்கள்.

**53.பழம் நழுவிப் பாலில் விழுந்தாற்போல**

பொருள்: பழம் நழுவிப் பாலில் விழுவது

பயன்பாடு: செய்ய வேண்டிய செயல் சுலபமாக நிறைவேறுவது

காவல் அதிகாரி வீட்டிலேயே திருட வந்த திருடனைப் பார்த்த அதிகாரிக்கு பழம் நழுவிப் பாலில் விழுந்தாற்போல இருந்தது.

**54.போர் முனையிலே ஆயுதம் தேடுதல் போல**

பொருள்: போர் முனையிலே ஆயுதம் தேடுதல்

பயன்பாடு: குறிப்பிட்ட பொருட்கள் நிறைய இருக்கும் இடத்திலேயே அப்பொருளைத் தேடுதல்

தலைவலியால் அவதியுற்ற மருத்துவர், அதற்கான மருந்தினை மருத்துவமனையில் தேடியது போர் முனையிலே ஆயுதம் தேடுதல் போல இருந்தது.

**55.முழுப்பூசணியைச் சோற்றில் மறைத்தாற்போல**

பொருள்: முழுப்பூசணியைச் சோற்றில் மறைப்பது - முழுமையான பூசணிக்காயை சோற்றில் மறைத்து வைப்பது.

பயன்பாடு: மிகப் பெரிய செயலை மறைப்பது

முழுப்பூசணியைச் சோற்றில் மறைத்தாற்போல பூரணி, தான் வேலை இழந்த செய்தியை பெற்றோரிடம் மறைத்தாள்.

**56.வளர்த்த கடா மார்பிலே பாய்ந்தாற்போல**

பொருள்: கடா - விலங்கினத்தின் ஆண்பால் பொதுப்பெயர்

பயன்பாடு: நன்றி மறத்தல்

வளர்த்த கடா மார்பிலே பாய்ந்தாற்போல செல்வம், தனது பெற்றோர்களை முதியோர் இல்லத்தில் சேர்த்தான்.

**57.வாழைப்பழத்தில் ஊசி ஏற்றினாற்போல**

பொருள்: வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது

பயன்பாடு: நாசூக்காக

நண்பன் வீட்டிற்கு சென்ற குமார், தனக்கு பசிக்கிறது என்பதை வாழைப்பழத்தில் ஊசி ஏற்றினாற்போல உணர்த்தினான்.

**58.விழலுக்கிறைத்த நீர் போல**

பொருள்: விழல் - தேவையற்ற புல்

பயன்பாடு: தேவையற்ற

நவீன் படிப்பதற்காக அவனது தந்தை செய்த செலவுகள் எல்லாம் விழலுக்கிறைத்த நீர் போல ஆனது.

**59.வெந்த புண்ணில் வேல் பாய்ச்சினாற்போல**

பொருள்: வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது

பயன்பாடு: ஒருவர் துன்பத்தில் இருக்கும் போது அவருக்கு இன்னும் துன்பம் கொடுப்பது.

கணவனை இழந்து தவித்த வானதிக்கு கடன்காரர்களின் தொல்லை வெந்த புண்ணில் வேல் பாய்ச்சினாற்போல இருந்தது.

**60.அன்ன நடை கற்கப் போய்த் தன் நடையும் இழந்தாற்போல**

பொருள்: அன்ன நடை கற்கப் போய்த் தன் நடையும் இழப்பது

பயன்பாடு: புதிதாய் ஒன்று செய்யத் துவங்கி இருப்பதையும் இழப்பது.

அன்ன நடை கற்கப் போய்த் தன் நடையும் இழந்தாற்போல, கணவன் மனைவி சண்டையில் சமாதானம் செய்யச் சென்ற நண்பர் சுந்தரம், அவர்களின் நட்பை இழந்து திரும்பினார்.

**61.ஆகாயத்தில் கட்டிய கோட்டை போல**

பொருள்: ஆகாயம் - வானம்; கோட்டை - பெரிய கட்டிடம்

பயன்பாடு: முடியாத ஒன்றைக் கற்பனைச் செய்தல்

தேர்வு நேரத்தில் படிப்பில் கவனம் செலுத்தாமல், மல்லிகா தான் முதல் மதிப்பெண் வாங்குவதாக ஆகாயத்தில் கட்டிய கோட்டை போல கற்பனை செய்து கொண்டிருந்தாள்.

**62.கண்ணில்லார் பெற்றிழந்தாற்போல**

பொருள்: கண்ணில்லார் பெற்றிழத்தல் - கண் இல்லாதவர் பெற்று இழப்பது.

பயன்பாடு: தற்காலிக இன்பம்

வறுமையில் வாடிய இரத்தினம் குடும்பத்தினருக்கு, திடீரென்று கிடைத்த அதிர்ஷ்டக் குலுக்கின் பணம் திருடு போனது கண்ணில்லார் பெற்றிழந்தாற்போல ஆனது.

**63.நவில்தொறும் நூல்நயம் போல**

பொருள்: நவில்தொறும் நூல்நயம் - நூலின் பொருள் கற்கும் போது கற்றார்க்கு இன்பம் சேர்த்தல்

பயன்பாடு: பழக பழக இன்பம் தருவது.

நவில்தொறும் நூல்நயம் போல, பழகப் பழக இன்பம் தரக்கூடியது பண்புடையாளர்களின் நட்பு.

**சொற்குவியலில் உள்ள திருந்திய சொற்களைப் பயன்படுத்தி உவமைத் தொடர்களில் உள்ள வழூஉச் சொற்களைத் திருத்துக.**

(விழிக்கிறது, காற்றில், எண்ணெய், வெயில், பெய்த)

1. **ஆடிக் காத்தில் உதிரும் சருகுபோல**

   விடை: ஆடிக் காற்றில் உதிரும் சருகுபோல

2. **ஆந்தை முழிக்கிறதுபோல**

   விடை: ஆந்தை விழிக்கிறதுபோல

3. **உரிய காலத்தில் பெஞ்ச மழைபோல**

   விடை: உரிய காலத்தில் பெய்த மழைபோல

4. **எள்ளுக்குள் எண்ணைபோல**

   விடை: எள்ளுக்குள் எண்ணெய்போல

5. **வெய்யிலில் பட்ட புழுப்போல**

   விடை: வெயில் பட்ட புழுப்போல

**மரபுத் தொடரின் பொருளறிதல்:**

- நாம் பேச்சிலும் எழுத்திலும் சில மரபுத்தொடர்களைப் பயன்படுத்துகிறோம். அத்தொடர்கள் நம்முடைய கருத்துகளுக்கு வலுச்சேர்க்கின்றன.
- சில மரபுத்தொடர்களுக்கு நேரடிப் பொருள் கொள்ளாமல், அவற்றின் உட்பொருளை அறிந்து பயன்படுத்தவேண்டும்.
- எடுத்துக்காட்டு:
  - பூக்கள் உற்பத்தியில் **கொடிகட்டிப் பறக்கும்** நகரமாக திண்டுக்கல் விளங்குகிறது.

    கொடிகட்டிப் பறத்தல் – புகழ்பெற்று விளங்குதல்
  - அவர் ஓர் **அவசரக்குடுக்கை**.

    அவசரக்குடுக்கை – எண்ணிச் செயல்படாமை

| தொடர்கள் | உணர்த்தும் பொருள் |
|---|---|
| • 'கை வலிக்கிறது'. | – உடலின் ஓர் உறுப்பு |
| • 'கையூட்டு கொடுப்பதும் வாங்குவதும் குற்றம்'. | – உழைப்பின்றி வரும் பணம் |
| • 'தன் கையே தனக்கு உதவி' | – உழைப்பின் மேன்மை |
| • 'கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை' | – அருகில் என்னும் பொருள் |
| • கள்வனைக் கையும்களவுமாகப் பிடித்தனர் | – ஒரு செயலை நேரடியாகப் பார்த்தல் |
| • முருகன், வள்ளியைக் கைபிடித்தான் | – திருமணம் புரிதல் |
| • கண்ணனை ஒரு கை பார்த்துவிடவேண்டும் | – சரியான பாடம் கற்பித்தல் |
| • ஆட்டத்தில் ஒரு கை குறைகிறது | – ஓர் ஆள் (எண்ணிக்கை) தேவை |

**மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக:**

- மனக் கோட்டை - மதியழகன் தான் பெரிய அமைச்சராக வேண்டும் என்ற மனக் கோட்டை கட்டினான்.
- கண்ணும் கருத்துமாக - தாய் தன் குழந்தையே கண்ணும் கருத்துமாக பார்த்துக் கொண்டார்.
- அள்ளி இறைத்தல் - தனக்கு அதிக பணம் இருக்கு என்று அள்ளி இறைத்தல் கூடாது.

- ஆறப் போடுதல் - ஒரு சில பிரச்சனைகளை ஆறப் போட்டு செய்தல் வேண்டும்.

| **மரபுத்தொடர்கள் மற்றும் எடுத்துக்காட்டுகள்** | |
|---|---|
| ஆயிரங் காலத்துப் பயிர் | நீண்ட காலத்திற்குரியது |
| எடுப்பார் கைப்பிள்ளை | தன் சிந்தனையின்றி சொல்பவர் பேச்சைக் கேட்டு நடப்பவர் |
| ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது | பட்டறிவில்லாத படிப்பறிவு |
| அவலை நினைத்து உரலை இடித்தல் | எண்ணமும் செயலும் ஒத்து வராமல் இருத்தல் |
| முதலைக்கண்ணீர் | பொய்யழுகை |
| அவசரக்குடுக்கை | எண்ணித் துணியாதார் |
| ஆகாயத்தாமரை | இல்லாத ஒன்று |
| கம்பி நீட்டல் | சொல்லிக்கொள்ளாமல் செல்லல் |
| தாளம் போடுதல் | எதைச் சொன்னாலும் அப்படியே ஏற்றுக்கொள்ளல் |
| கானல் நீர் | இருப்பது போல் தோன்றும் ஆனால் இராதது |
| பஞ்சாய்ப் பறத்தல் | அலைந்து திரிதல் |
| குட்டிச்சுவர் | பயனின்றி பேசுதல் |
| கொட்டியளத்தல் | மிகுதியாகப் பேசுதல் |
| கங்கணம் கட்டுதல் | உறுதி பூணுதல் |
| கடுக்காய் கொடுத்தல் | ஏமாற்றித் தப்புதல் |
| கரி பூசுதல் | அவமானம் ஏற்படுத்துதல் |
| அள்ளி விடுதல் | மிகைப் படுத்தி கூறுதல் |
| கை கொடுத்தல் | தக்க நேரத்தில் உதவி செய்தல் |
| கரைத்துக் குடித்தல் | முழுமையாக அரிதல் |
| தலை குனிதல் | அவமானம் அடைதல் |
| கண்ணும் கருத்தும் | முழுக் கவனத்துடன் |
| வாழையடி வாழையாக | பரம்பரை பரம்பரையாக |
| கொடிகட்டிப் பறத்தல் | தனிப்புகழோடு விளங்குதல் |
| சீட்டுக்கிழித்துவிட்டது | வேலைபோயிற்று |

## பழமொழிகள் பொருளறிதல்

- பழமொழி என்றால் ஆங்கிலத்தில் 'Proverb' எனப்படும். பழமொழி என்பது பெரும்பாலும் தூய்மையான தமிழில், பண்டிதத் தமிழில் தொகுக்கப்பட்டவையாகவே இருக்கும். இவை பொதுவாக செவ்வியல் தன்மைகளுடன் செந்தமிழில் காணப்படும்.
- பழமொழியின் இலக்கணத்தைக் கூறும் நூல் தொல்காப்பியம்
- மூதுரை, முதுசொல், தொன்றுபடுகிளவி, முதுமொழி, சொலவடை, உலகவசனம், சொல்வழக்கு என்ற வேறு பெயர்களும் பழமொழிக்கு உண்டு.
- பழமொழிக்கு முதன்மை கொடுத்து இயற்றப்பட்ட அறநூல் சங்கமருவிய கால நூல் நீதிநூல் பழமொழி நானூறு
- இது ஐந்து வகையான நாட்டுப்புற இலக்கிய வகையுள் ஒன்றாகும்
- நாட்டுப்புறப்பாடல்கள்,கதைப்பாடல்கள், கதைகள், பழமொழிகள், விடுகதைகள் என்ற ஐந்தும் நாட்டுப்புற இலக்கிய வகைளாகும்.
- பழமொழி ஒரு சமுதாயத்தின் பழமையான சிந்தனையையும், நீண்ட காலமாகப் புழக்கத்தில் இருந்து வரும் அனுபவக் குறிப்புகளுமே ஆகும். பழமொழிகள் அச்சமுதாயத்தினரின் அனுபவ முதிர்ச்சியையும், அறிவுக்கூர்மையையும் எடுத்துவிளக்குவதாக அமைகின்றன. இவை பெரும்பாலும் பதிவு செய்யப்படாத வாய்மொழி வழக்காகவும், நாட்டுப்புறவியலின் ஒரு கூறாகவும் அமைகின்றன.

**பழமொழிகளும், அதற்கு இணையான ஆங்கில சொற்தொடர்களும்:**

**பழைய சமச்சீர் மற்றும் புதிய சமச்சீர் புத்தகங்களிலிருந்து தொகுக்கப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளது.**

**ஒன்பதாம் வகுப்பு (பழைய புத்தகம்):**

| **இயல் 1** | |
|---|---|
| Bend the tree while it is young | ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? |
| As is the mother, so is her daughter | தாயைப் போலப் பிள்ளை, நூலைப் போலச் சேலை |
| A man of courage never wants weapons | வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் |
| A friend in need is a friend indeed | உயிர் கொடுப்பான் தோழன் |

| | |
|---|---|
| Blood is thicker than water | தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும் |
| Crying child will get milk | அழுத பிள்ளை பால் குடிக்கும் |
| Maker hay while the sun shines | காற்றுள்ள போதே தூற்றிக்கொள் |
| The childhood shows the man | விளையும் பயிர் முளையிலேயே தெரியும் |
| All is well that ends well | முதற் கோணல் முற்றிலும் கோணல் |
| A good marksman may miss | ஆணைக்கும் அடி சறுக்கும் |
| In a fiddler's house, all are dancers | கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும் |
| No man can flay a stone | கல்லிலே நார் உரிக்க முடியுமா? |
| Difficulties give way to diligence | கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் |
| Command your man and do it yourself | வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவானேன் |
| Charity is a double blessing | தருமம் தலை காக்கும் |
| **இயல் 2** | |
| Take away the fuel, the boiling will cease | எரிவதனைப் பிடுங்கினால் கொதிப்பது அடங்கும் |
| Practice makes perfect | சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம் |
| The lawmaker should not be a law-breaker | வேலியே பயிரை மேய்ந்தாற் போல |
| Misfortune never comes single | பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும் |
| Look no gift horse in the mouth | தானம் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பார்க்கலாமா? |
| One doth the act, another hath the blow | பழி ஓரிடம், பாவம் ஓரிடம் |
| Every fox must at last pay his skin to the flaye | பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான் |
| Money makes many things | பணம் பத்தும் செய்யும் |
| The day has eyes, the night has ears | பகலில் பக்கம் பார்த்துப் பேசு, இரவில் அதுவும் பேசாதே |
| What comes from the cradle goes to the grave | தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை |

| | |
|---|---|
| The wise and the fool have their follows | இனம் இனத்தோடு சேரும் |
| He who has an art has everywhere a part | கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு |
| Being on the sea, sail; being on the land, settled | காலத்திற்கேற்ற கோலம் கொள் |
| No rains no grains | மாரியல்லது காரியம் இல்லை |
| Bad words find bad acceptance | நுணலும் தன் வாயாற் கெடும் |
| **இயல் 3** | |
| One flower makes no garland | தனிமரம் தோப்பாகாது |
| Little wealth little care | மடியில் கனமில்லையென்றால் வழியில் பயமில்லை |
| Look before you leap | ஆழம் அறியாமல் காலை விடாதே |
| Something is better than nothing | ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை |
| Thought he endeavors all he can | புலியைப் பார்த்துப் பூனை சூடுபோட்டுக் கொண்டாற் போல் |
| Anger is sworn enemy | கோபம் குலத்தைக் கெடுக்கும் |
| Break my head and bring a plaster | பிள்ளையைக் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டுவது போல |
| There is danger in men's smiles | தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும் |
| Like hand and glove | நகமும் சதையும் போல |
| Wealth is best known by want | நிழலின் அருமை வெயிலில் தெரியும் |
| A wolf in sheep's clothing | பசுத்தோல் போர்த்திய புலி |
| Union is strength | ஒற்றுமையே வலிமை |
| No smoke without fire | நெருப்பில்லாமல் புகையாது |
| Might is right | வல்லான் வகுத்ததே வாய்க்கால் |
| Many things fall between the cup and the lip | கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை |

**பத்தாம் வகுப்பு (பழைய புத்தகம்):**

| | |
|---|---|
| **இயல் 1** | |
| Health is wealth | நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் |
| Too much of anything is good for nothing | அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு |

| | |
|---|---|
| No pain no gain | உழைப்பின்றி ஊதியமில்லை |
| Haste makes waste | பதறாத காரியம் சிதறாது |
| Knowledge is power | அறிவே ஆற்றல் |
| **இயல் 2** | |
| Charity begins at home | தனக்கு மிஞ்சியே தானமும் தருமமும் |
| Love all lose all | பேராசை பெருநட்டம் |
| Diamonds cut diamonds | முள்ளை முள்ளால் எடு |
| East or west, home is the best | எலி வளையானாலும் தனி வளையே சிறந்தது |
| Empty vessels make the greatest sound | குறைகுடம் கூத்தாடும் |
| **இயல் 3** | |
| Money makes many things | பணம் பத்தும் செய்யும் |
| Eagles don't catch flies | புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது |
| Old is gold | பழமையே பெருமை |
| Slow and steady wins the race | விவேகமே வெற்றியை தரும் |
| **இயல் 4** | |
| First deserve, then desire | முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படலாமா? |
| Little strokes fell great oaks | அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் |
| Tit for tat | பழிக்கு பழி |
| Work is worship | செய்யும் தொழிலே தெய்வம் |
| Time is gold | காலம் பொன் போன்றது |
| **இயல் 5** | |
| Birds of the same feather flock together | இனம் இனத்தோடு சேரும் |
| Every cock will crow upon his own dunghill | வீட்டில் எலி வெளியில் புலி |
| Failure is the stepping stone to success | தோல்வியே வெற்றிக்கு அடிப்படை |
| Art is long and life is short | கல்வி கரையில கற்பவர் நாள் சில |
| Look before you leap | ஆழம் தெரியாமல் காலை விடாதே |
| **இயல் 6** | |

| | |
|---|---|
| Man proposes; God disposes | நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும் |
| Strike the rod while it is hot | காற்றுள்ள போதே தூற்றிக்கொள் |
| Familiarity breeds contempt | பழகப் பழகப் பாலும் புளிக்கும் |
| The mills of God grind slow but sure | அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும் |
| The face is the index of the mind | அகத்தின் அழகு முகத்தில் தெரியும் |
| **இயல் 7** | |
| All that glitters is not gold | மின்னுவதெல்லாம் பொன்னல்ல |
| Hearty laugh dispels disease | வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும் |
| Barking dog seldom bite | குரைக்கின்ற நாய் கடிக்காது |
| Even a pin is good for something | சிறு துரும்பும் பல் குத்த உதவும் |
| Take time by the forelock | காலத்தே கடமைச் செய் |
| **இயல் 8** | |
| A friend in need is a friend indeed | ஆபத்தில் உதவுபவனே உண்மையான நண்பன் |
| Self-help is the best help | தன் கையே தனக்கு உதவி |
| Efforts never fail | முயற்சி திருவினையாக்கும் |
| Live and let live | வாழு, வாழ விடு |
| Think everybody alike | உன்னைப் போல் பிறரையும் நேசி |
| **இயல் 9** | |
| Manners make the man | ஒழுக்கம் உயர்வு தரும் |
| All is well that ends well | நல்ல தொடக்கம் நல்ல முடிவைத் தரும் |
| Misfortune never comes single | பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும் |
| Do well what you have to do | செய்வன திருந்தச் செய் |
| Every tide has its ebb | ஏற்றம் உண்டானால் இறக்கமும் உண்டு |
| **இயல் 10** | |
| Small rudders guide great ships | சிறு துரும்பும் பல் குத்த உதவும் |
| You must walk before the run | சிந்தித்துச் செயல்படு |

| | |
|---|---|
| Distance leads enchantment to the view | இக்கரைக்கு அக்கரை பச்சை |
| Measure is a treasure | அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு |

**புதிய சமச்சீர் புத்தகம்:**

| | |
|---|---|
| Cleanliness is next to godliness | சுத்தம் சோறு போடும் |
| No house nothing | ஒன்றாகு முன்றிலோ இல் |
| Health is wealth | நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் |
| Nothing is impossible/Rome was not built in a day | முயற்சி திருவினை ஆக்கும் |
| You must first build the wall, must you not and then adorn it with figures | சுவர் இருந்தால் தானே சித்திரம் வரைய முடியும் |
| Prevention is better than cure/Forewarned is forearmed | வருமுன் காப்போம் |
| Cultivate in due time | பருவத்தே பயிர் செய் |
| Union is strength | கூடி வாழ்ந்தால் கோடி நன்மை |
| Eat when you are hungry | பசித்த பின் புசி |
| Knowledge is power | அறிவே ஆற்றல் |
| Cleanliness is next to godliness | சுத்தம் சோறு போடும் |
| Art is long and life is short | கல்வி கரையில கற்பவர் நாள் சில |
| Acquire wealth though compelled to cross the stormy ocean | திரைகடல் ஓடியும் திரவியம் தேடு |

**பழமொழிகளும் அதன் பொருள்களும்:**

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் - ஒருவன் மனத்தில் நினைப்பதனை அவன் முகம் காட்டும்
2. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு - ஒற்றுமையே பலம்
3. அடாது செய்பவன் படாது படுவான் - துன்பம் செய்பவன் அதன் பலனை அனுபவிப்பான்
4. அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி – முன்மாதிரி
5. அழுத பிள்ளை பால்குடிக்கும் - முயற்சி செய்தால்தான் பயன்கிட்டும்
6. அடியாத மாடு படியாது - அடித்தாலே ஒழிய திருந்த மாட்டான்
7. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு - எதையும் அளவோடு அனுபவித்தல் வேண்டும்

8. அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது - முக்கியமானவர் இன்றி எக்கருமமும் நடைபெறாது
9. அடிநாக்கில் நஞ்சும் நுனி நாக்கில் அமிர்தமும் - உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுதல்
10. அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் - விடாமுயற்சி வெற்றி அளிக்கும்
11. அன்பான சினேகிதனை ஆபத்தில் அறியலாம் - உண்மை நட்பு
12. ஆழமறியாது காலை விடாதே - எதையும் ஆராய்ந்து பார்த்து செய்தல் வேண்டும்
13. ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு - கோபம் சித்தனைக்கு இடையூறு
14. ஆடுநனைகிறது என்று ஓநாய் அழுகிறதாம் - பொய்யான இரக்கம்
15. ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு - நல்வழியில் செலவு செய்தாலும் அளவாகச் செய்
16. ஆறிலும் சாவு நூறிலும் சாவு - துன்பம் எப்போது வேண்டுமானாலும் வரலாம்
17. ஆறின கஞ்சி பழங்கஞ்சி - உரிய காலத்தில் செய்யவில்லை என்றால் பயன்குறையும்
18. ஆரியக்கூத்தாடினாலும் காரியத்தில்கண் - எதைச் செய்தாலும் குறிக்கோளை விடாதே
19. ஆழம் தெரியாமல் விடாதே - ஆராய்ந்து அறியாமல் எதையும் செய்யாதே
20. ஆனைக்கும் அடி சறுக்கும் - பெரியவர்களுக்கும் தவறு ஏற்படலாம்
21. ஆனைவாழும் காட்டில்தான் எறும்பும் வாழ்கிறது -எல்லாம் இருப்பவன் மத்தியில்தான் எதுவும் இல்லாதவன் வாழ்கிறான்
22. ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே - பெண்நினைத்தால் எதையும் சாதிப்பாள்
23. ஆடத்தெரியாதவன் அரங்கு கோணலென்றானாம் - விடயத்தெளிவின்றி எதையும் குறை கூறாதே
24. ஆலையில்லா ஊருக்கு இலுப்பை பூ சர்க்கரை - அற்பனுக்கு மதிப்பு
25. ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம் - காலம் மாறலாம்
26. ஆழ அமுக்கினாலும் நாழி முகவாகாது - கொள்ளக்கூடிய அளவே கொள்ளும்
27. இக்கரைக்கு அக்கரைப் பச்சை - திருப்தி அடையாத மனம்

28. இரவல் சேலையை நம்பி இடுப்புக் கந்தையை எறியாதே- பிறரை நம்பி உன் முயற்சியை விடாதே
29. இறைக்கின்ற கிணறு சுரக்கும் - கொடுத்து வாழ்பவன் மேலும் உயர்வான்
30. இன்று இலை அறுத்தவன் நாளை குலை அறுப்பான் - சிறுதவறு பெரும்தவறுக்கு காரணமாவிடும்
31. இளமையில் கல்வி சிலையில் எழுத்து - இளமையில் கற்பது என்றும் நிலைத்திருக்கும்
32. இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை - திருப்தியற்ற மனம்
33. இட்டுக்கெட்டார் எவருமில்லை - உதவி செய்து கெட்டுப்போனவர் எவருமில்லை
34. இளங்கன்று பயமறியாது - வாலிபத் துணிவு
35. இறைத்த கிணறே ஊறும். இறையாத கிணறே நாறும் - தருமத்தின் பெருமை
36. உப்பிட்டவரை உள்ளளவும் நினை - செய்நன்றி மறக்காதே
37. உப்பைத் தின்றவன் தண்ணீர் குடித்தாக வேண்டும் - தவறு செய்தவன் தண்டிக்கப்படுவான்
38. உயர உயர பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா? - தகுதிக்கு மேலே எண்ணாதே
39. உறியில் நெய் இருக்க ஊரெல்லாம் நெய்க்கு அலைவானேன் - வேண்டியதை தன்னிடம் வைத்துக்கொண்டு ஏனையோரிடம் வேண்டல்
40. உடையவன் பாரா வேலை ஒருமுழம் கட்டை - உரியவன் இல்லாக் கருமம் குறைப்படல்
41. ஊருக்குத்தான் உபதேசம் உனக்கல்ல - சொல்வேறு செயல்வேறு படல்
42. ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் - பிறர் குழப்பத்தில் மகிழ்வடைதல்
43. ஊசி போகுமிடம் பார்ப்பார் உலக்கை போகுமிடம் பாரார் - சிறிய விடயங்களில் கவனம் செலுத்துமளவு பெரிய விடயங்களில் கவனயீனமாக இருத்தல்
44. எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு - வீண் பெருமை
45. எச்சில் கையால் காக்கை ஓட்டாதவன் பிச்சை எடுப்பானா? – உலோபித்தனம்
46. எட்டி பழுத்தென்ன? ஈயாதார் வாழ்ந்தென்ன? - ஈகையின் அவசியம்
47. எய்தவன் இருக்க அம்பை நோவானேன் – தப்பபிப்பிராயம்

48. எறும்பூரக் கல்லும் தேயும் - விடா முயற்சி பலன் தரும்
49. எரிகிற வீட்டில் பிடுங்கினது இலாபம் - பிறர் துன்பத்தைப் பார்க்காமல் தன்பயனை மட்டும் பார்த்தல் /அழிவதில் காப்பாற்றியது லாபம்
50. எலி வளையானாலும் தனி வளை வேண்டும் - தனிக்குடித்தனம் சிறந்தது
51. எள்ளுதான் எண்ணெய்க்கு காய்கிறது எலிப்புழுக்கை எதற்குக் காய்கிறது சிலர் பயனற்ற செயலை செய்வர்
52. ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது - அனுபவம் இல்லாத கல்லி பயன்படாது.
53. ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும் - ஏழ்மை கண்ணீரின் வலிமை
54. ஏறுகிறவனை எட்டினமட்டுந்தான் தாங்க முடியும் - முடித்த அளவே உதவி செய்ய வேண்டும்
55. ஐந்து பணத்திற்கு குதிரையும் வேண்டும் ஆறு கடக்க பாயவும் வேண்டும் – பேராசை
56. ஐயர் வருமட்டும் அமாவாசை காத்திருக்குமா - காலம் நில்லாது
57. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது - இளமையில் திருத்தாதவன் முதுமையில் திருத்த மாட்டான்
58. ஒரு கை தட்டினால் ஓசை உண்டாகுமோ? - கூட்டு முயற்சியின் முக்கியத்துவம்
59. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு - ஒற்றுமையாக இருந்தால் எதனையும் சாதிக்கலாம்
60. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் - ஒரு செயலே ஒருவனின் இயல்பை உணர்த்தும்
61. ஒருகை தட்டினால் ஓசை உண்டாகுமா? - கூட்டு முயற்சி பயன்தரும்
62. ஓட்டைச் சட்டியானாலும் கொழுக்கட்டை வெந்தால் சரி - எப்படியாவது தன்காரியம் முடிந்தால் போதும்
63. கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகுமா? - தகுதிக்கு மேலே எண்ணுதல்
64. கடுகு சிறிதானாலும் காரம் பெரிது - சிறியதெனினும் சிறப்புண்டு
65. கடன் வாங்கி கடன் கொடுத்தவனும் கெட்டான்; மரம் ஏறி கைவிட்டவனும் கெட்டான் - தவறான செயல் உயிரை எடுத்துவிடும்
66. கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம் - காலம் தவறிச் செய்தல்
67. கரும்பு தின்ன கூலி - நன்மைக்கு மேல் நன்மை

68. சும்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும் - பெரியோரைச் சேர்ந்தொழுகினால் பயன்கிட்டும்

69. கழுதைக்கு தெரியுமா கற்பூர வாசனை - உயர்ந்ததன் பெருமை சிறியோர்க்குத் தெரியாது

70. கந்தையானாலும் கசக்கி கட்டு - தூய்மையாக இருத்தல், வறுமையில் இருந்தாலும் செம்மையாக வாழ வேண்டும்

71. கற்றது கைம்மண் அளவு கல்லாதது உலகு அளவு - அறிந்தது கொஞ்சம் அறியாதது அதிகம்

72. காகம் திட்டி மாடு சாகாது - வீண்பழிக்கு அஞ்சேல்

73. காற்றுள்ள போதே தூற்றிக் கொள் - காலத்தைச் சரியாக பயன்படுத்து

74. காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு - அவரவர்களுக்கு அவரவர் பொருள் சிறந்தது.

75. காமலைக் கண்ணுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள் - சந்தேகப் புத்தி/ஐயத்தோடு பார்த்தால் அனைத்தும் தவமாகத் தெரியும்

76. கிட்டாதாயின் வெட்டென மற - கிடைப்பதற்கு அரிதாக இருந்தால் உடனே மறந்து விடுவது நல்லது

77. கிணற்றுத்தவளைக்கு நாட்டு வளப்பமேன் - உலகை அறி

78. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் - மனசாட்சி உறுத்தல்

79. குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர் - வீண் பெருமை

80. குப்பையிலே கிடந்தாலும் குன்றுமணி மங்காது - நற்புகழ் மங்காது

81. குறைகுடம் ததும்பும். நிறைகுடம் ததும்பாது - அற்பர் ஆரவாரிப்பர், அறிவுடையோர் அடங்கியிருப்பர்.

82. குரைக்கிற நாய் கடிக்காது -வெறும் சலசலப்பு

83. கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை – பேராசை

84. கெட்டாலும் செட்டி கிளிந்தாலும் பட்டு - புகழ் மங்காது

85. கெடுவான் கேடு நினைப்பான் - அழிவு அழிவை தரும்

86. கேட்காத சுடபார்க்காத பயிரும் பாழ் - நமக்கு நாமே பாதுகாப்பு /உரிமையைப் பெறவும் கடமையைச் செய்யவும் தயங்கினால் கேடு வரும்

87. கைப்புண்ணுக்கு கண்ணாடி வேண்டுமா? – தெளிவு

88. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை - நல்வாய்ப்புக் குறைவு /அதிர்ஷ்டம் குறைவு

89. கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா? - தெள்ளத் தெளிவு
90. கையில் வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவானேன் - இருப்பதைப் பயன்படுத்தத் தெரிந்துகொள்
91. கொல்லர் தெருவில் ஊசி விற்கலாமா? - இடமறியா மடமை
92. கோழி மிதித்து குஞ்சி சாகாது - அன்புடையோர் கண்டிப்பதால் தீமை ஏற்படாது
93. சாகத் துணிந்தவனுக்குச் சமுத்திரமும் முழங்கால் மட்டம் - துணிவுக்கு முன்பு எல்லாம் துரும்பு
94. சாண் ஏற முழம் சறுக்குகிறது - பலனைவிட தீமை அதிகம்
95. சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் - பயிற்சி பலன் தரு
96. சிறுதுரும்பும் பல்குத்த உதவும் - பயனில்லாதது எதுவும் இல்லை
97. சிறுதுளி பெருவெள்ளம் -சிறுகசிறுக சேர்த்தால் பெரும் பொருளாகும்.
98. சுண்டைக்காய் சுமைக்கூலி முக்காற்பலம் -முயற்சிக்கு ஏற்ற பலன் இன்மை
99. சோழியன் குடும்பி சும்மா ஆடுமா- பயன் கருதி உதவி செய்தல்
100. தவளையும் தன்வாயால் கெடும் - தனபேச்சே தனக்குத் துன்பம்
101. தெய்வம் காட்டுமே தவிர ஊட்டாது - அதிர்ஷ்டம் வந்தாலும் நீ முயன்றால் தான் பயன்கிட்டும்
102. தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் - பழக்கம் எளிதில் விடாது
103. கண்டதைப் படிக்கப் பண்டிதனாவான் - தனக்கு உரியதை மட்டும் செய்தால் உயரிவடைவான்.
104. சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும் - ஏதேனும் இருந்தால்தான் சிறிதாவது எடுக்க முடியும்
105. நல்ல மாட்டுக்கு ஓர் அடி நல்ல மனிதனுக்கு ஒரு சொல் - நல்லவனுக்கு ஒரு முறை சொன்னாலே அதை ஏற்பான்
106. நிழலின் அருமை வெயிலில் தெரியும் - இன்பத்தின் அருமை துன்பத்தில் தெரியும்
107. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் - நோயில்லாமல் இருப்பதே மிகுந்த மகிழ்ச்சி
108. பணம் பந்தியிலே குணம் குப்பையிலே - பண மதிப்பு
109. பணம் பாதாளமட்டும் பாயும் - பணத்தின் வலிமை
110. பழக பழகப் பாலும் புளிக்கும் - ஒரே செயல் வெறுப்பை அளிக்கும்

111. பசி வந்திடப் பத்தும் பறந்து போகும் - பசிவந்திடப் பெருமைக்குரியன எல்லாம் போகும்

112. பந்திக்கு முந்து படைக்கு பிந்து - விருந்தை உபசரிப்பதில் முந்தி நில் படைக்குத் தலைமை தாங்கி அதன் பின் நில்

113. புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது - சான்றோர் வறுமை அடைந்தாலும் தமக்கு ஒவ்வாதவற்றைச் செய்யமாட்டார்கள்

114. புண்பட்ட மனதைப் புகைவிட்டு ஆற்று - மனம் புண்பட்டால் அதனை வேறு ஒரு செயலில் புகவிட்டு மனம் தேற வேண்டும்.

115. பெற்றமனம் பித்து, பிள்ளை மனம் கல்லு - தலைமுறை இடைவெளி/பெற்றோரின் பாசம் மிகுதி

116. போதும் என்ற மனமே பொன் செய்யும் மருத்து - மனநிறைவே சிறந்த செல்வம்

117. மெல்லப்பாயும் தண்ணீர் கல்லையும் கரைக்கும் - தொடர்ந்து முயன்றால் தடைகளைத் தாண்டலாம்

118. மனம் உண்டானால் மார்க்கம் உண்டு - விருப்பத்துடன் செயல்பட்ட வெற்றி கிட்டும்/ஒன்றை முடிக்க முடிவெடுத்தால் வழியும் தானே தெரியும்!

119. மாமியாள் உடைத்தால் மண்சட்டி மருமகள் உடைத்தால் பொன்சட்டி - ஒரே தவற்றை வேண்டியவர் செய்தால் சிறுதவறு; வேண்டாதார் செய்தால் பெரும் தவறு

120. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம் - அனுபவ அறிவு மிக உயர்ந்தது

121. விளையும் பயிர் முளையியே தெரியும் - சிறிய வயதில் செய்ததைக் கொண்டு விளையும் பெரியவாதில்செய்யப்போவதை மதிப்பிடல் /தொடக்கம் சரியானால் முடிவும் சரியாகும்

122. விருந்தும் மருத்தும் மூன்று நாள் - ஒன்றன் மதிப்பு மூன்று நாளில் தெரிந்துவிடும்

123. வீட்டிற்கு வீடு வாசற்படி - எல்லா வீட்டிலும் பிரச்சனை உண்டு

**பழமொழி நானூற்றில் உள்ள சில பழமொழிகள்:**

1. கற்றாருக்கு ஆற்றுணா வேண்டுவது இல்
2. குலவிச்சை கல்லாமல் பாகம் படும்
3. அணிஎல்லாம் ஆடையின் பின்
4. விண் இயங்கும் ஞாயிற்றைக் கைமறைப்பர் இல்
5. கடன் கொண்டும் செய்வார் கடன்

6. கற்றலின் கேட்டலே நன்று
7. தனிமரம் காடதல் இல்
8. திங்களை நாய்க்குரைத் தற்று
9. நுணலும் தன் வாயால் கெடும்
10. கற்றோரும் தான் கல்லாதவாறு
11. பொருள் கொடுத்து கொள்ளார் இருள்
12. மதிப்புறத்து பட்டமறு
13. இல்லை கனா முந்துறாத வினை
14. உளரோ தம்கன்று சாக் கறப்பார்
15. கல்கிள்ளிக்கை உய்ந்தார் இல்லை
16. உள்ளம் படர்ந்ததே கூறும் முகம்
17. கொற்சேரித் துன்னூசி விற்பார் இல்
18. இல்லை தமக்கு மருத்துவர் தாம்
19. கெட்டாருக்கு நட்டாரோ இல்லை
20. தீநாள் திருஉடையார்க்கு இல்
21. முறைமைக்கு மூப்பு இளமை இல்
22. பழம்பகை நட்பாதல் இல்
23. மரம் குறைப்ப மன்னா உயிர்
24. இல்லையே ஒன்றுக்கு உதவா ஒன்று
25. நாய் பெற்ற தெங்கம்பழம்
26. ஆயிரம் காக்கைக்கு ஒருகல்
27. கணையினும் கூரியவாம் கண்
28. உரையார் இழிதக்க காணின் கனா
29. ஈனுமோ வாழை இருகால் குலை
30. யானையால் யானையாத்தற்று
31. பனியால் குளம் நிறைதல் இல்
32. உலகில் இல்லாததற்கு இல்லை பெயர்
33. புலித்தலையை நாய் மோத்தல் இல்

34. எளியாரை எள்ளாதார் இல்
35. மரத்தின் கீழ் ஆகாமரம்
36. யானைவால் மேல் போகதவாறு
37. பாம்பொடு உடன் உறைந்தற்று
38. நாய்காணின் காணாத வாறு
39. அறிமடமும் சான்றோர்க்கு அணி
40. இளையது என்று பாம்பு இகழ்வார் இல்
41. ஒடுக ஊர் ஒடுமாறு
42. பேதைக்கு உரைத்தாலும் தோன்றாது உணர்வு

**பழமொழிகள்:**

**'தாமிருந்த கோடு குறைத்து விடல்'- இப்பழமொழியின் பொருள்**

அ) தன் வீட்டிலுள்ள சுற்றத்தாரை வெளியேற்றிவிடுதல்.

ஆ) தான் தங்கியிருக்கும் வீட்டின் உயரத்தைக்குறைத்தல்.

இ) தான் தங்கியிருக்கும் கிளையைவெட்டி தானும் வீழ்ந்து உயிர்விடல்.

ஈ) தன் எதிரிகளைக்குறைத்து மதிப்பிடல்.

விடை: இ

நாடி நமரென்று நன்கு புரந்தாரைக்
கேடு பிறரோடு சூழ்தல் கிளர்மணி
நீடுகல் வெற்ப! நினைப்பின்றித் **தாமிருந்த**
**கோடு குறைத்து விடல்.**

(சொ-ள்.) கிளர் மணி நீடு கல் வெற்ப - விளங்குகின்ற மணிகள் பொருந்திய நீண்ட கற்பாறைகளையுடைய மலை நாடனே!, நாடி நமர் என்று நன்கு புரந்தாரை - ஆராய்ந்து நம்மவர் என்று கருதி வேண்டியன உதவி நன்றாகக் காப்பாற்றியவர்களை,கேடு பிறரோடு சூழ்தல் - காப்பாற்றப்பட்டவர்கள் அவர்க்குச் செய்யத்தக்க தீமையை அவர் பகைவரோடு சேர்ந்து எண்ணுதல், நினைப்பு இன்றி தாம் இருந்த கோடு குறைத்துவிடல் - ஒருவன் உணர்வின்றித் தான் தங்கியிருந்த கோட்டின் அடியை வெட்டி வீழ்த்தி உயிர்விடுதலை யொக்கும்.

## மாதிரி வினாக்கள்

**கீழ்க்கண்ட பத்தியினைப் படித்து வினாவிற்கான சரியான விடையைத் தேர்ந்தெடு. (1-5)**

மழை என்றதும் குழந்தைகளின் நினைவுக்கு வருவது காகிதக் கப்பல். மழை நீரில் காகிதக் கப்பல் விட்டு விளையாடாத குழந்தைகளே இல்லை எனலாம். அந்த அளவிற்கு நம் ஆழ்மனத்தில் கப்பல் இடம் பெற்றுள்ளது. பழங்காலம் முதல் தமிழர்கள் கப்பல் கட்டும் கலையில் சிறந்திருந்ததன் மரபுத் தொடர்ச்சி என்று இதனைக் கூறலாம். தமிழர்கள் கப்பல்களைக் கட்டினர் என்பதற்கும் கப்பல் மூலம் வெளிநாடுகளுக்குச் சென்றனர் என்பதற்கும் நம் இலக்கியங்களில் ஏராளமான சான்றுகள் உள்ளன. நமக்குக் கிடைத்துள்ள நூல்களிலேயே மிகவும் பழமையானது தொல்காப்பியம். அந்நூல் முந்நீர் வழக்கம் என்று கடற்பயணத்தைக் குறிப்பிடுகிறது. எனவே, தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே தமிழர்கள் கடல் பயணம் செய்துள்ளனர் என்பதை அறியலாம்.

1. **மழை என்றதும் குழந்தைகளின் நினைவுக்கு வருவது எது?**
   a) காகிதம்
   b) காகிதக்கப்பல்
   c) படகு
   d) தோணி
   e) விடை தெரியவில்லை

   விடை: b

2. **பழங்காலம் முதல் தமிழர்கள் எந்த கலையில் சிறந்திருந்தனர்?**
   a) ஓவியக்கலை
   b) இசைக்கலை
   c) கப்பல் கட்டும் கலை
   d) நாட்டியக்கலை
   e) விடை தெரியவில்லை

   விடை: c

3. **தமிழர்கள் கப்பல் மூலம் வெளிநாடுகளுக்குச் சென்றனர் என்பதற்கு சான்று எது?**
   a) திருக்குறள்
   b) இலக்கியங்கள்
   c) காவியம்
   d) புறநானூறு
   e) விடை தெரியவில்லை

   விடை: b

4. **நமக்குக் கிடைத்துள்ள மிக பழமையான நூல் எது?**
   a) நன்னூல்
   b) நாலடியார்
   c) பரிபாடல்
   d) தொல்காப்பியம்
   e) விடை தெரியவில்லை

   விடை: d

5. **தொல்காப்பியம் கடற்பயணத்தை எதுவாகக் குறிப்பிடுகிறது?**
   a) முந்நீர் வழக்கம்
   b) நாவாய்
   c) முத்தமிழ்
   d) படகு
   e) விடை தெரியவில்லை

   விடை: a

**கீழ்க்கண்ட பத்தியைப் படித்து வினாவிற்கான சரியான விடையைத் தேர்ந்தெடு (6–7)**

**நமக்குப் பயன்தரும் மரங்களுள் வாழையும் ஒன்று. வாழையின் பூ, காய், கனி, தண்டு ஆகியவற்றை நாம் சமைத்து உண்கிறோம். வாழைநாரைக் கொண்டு பூக்களைத் தொடுக்கிறோம். திருமண விழாக்களிலும் வீட்டில் நடைபெறும் விழாக்களிலும் வாழையிலையில் விருந்து படைக்கின்றனர். வாழையில் செவ்வாழை, பூவன் வாழை, மலை வாழை எனப் பலவகைகள் உள்ளன.**

**6. வாழையின் எப்பகுதிகள் உணவாகப் பயன்படுகின்றன?**

a) கனி

b) பூ

c) காய்

d) மேற்கண்ட அனைத்தும்

e) விடை தெரியவில்லை

விடை: d

**7. வாழைநார் எதற்குப் பயன்படுகிறது?**

a) விருந்து படைக்க

b) பூக்களைத் தொடுக்க

c) வீட்டில் நடைபெறும் விழாக்களுக்கு

d) திருமண விழாக்களுக்கு

e) விடை தெரியவில்லை

விடை: b

**8. வாழையின் வகைகளுள் பொருந்தாததை எழுதுக.**

a) செவ்வாழை

b) பூவன் வாழை

c) மலை வாழை

d) பெரி வாழை

e) விடை தெரியவில்லை

விடை: d

**9. வாழையிலை -இச்சொல்லைப் பிரித்து எழுதுக**

a) வாழை + இலை

b) வாழ் + இலை

c) வாழை + யிலை

d) வா + ழையிலை

e) விடை தெரியவில்லை

விடை: a

**10.பலவகை - இச்சொல்லுக்கு எதிர்ச்சொல் எழுதுக.**

a) சீர் வகை

b) பன்மை வகை

c) இரண்டு வகை

d) சில வகை

e) விடை தெரியவில்லை

விடை: d

**பத்தியைப் படித்து வினாக்களுக்கு உரிய சரியான விடையைத் தேர்ந்தெடு:(11-15)**

**முகிலன் பொங்கல் விழா கொண்டாடத் தாத்தா வீட்டிற்குச் சென்றான். அங்கு செவலை என்ற காளை இருந்தது. அக்காளையை முகிலனுக்கு மிகவும் பிடிக்கும். அதற்குத் தீவனம் வைப்பது அவனது வழக்கம். வீட்டிற்குப் பின்புறம் உள்ள தோட்டத்தில் இருந்து காய்கறிகள் பறித்துக் கொடுத்துத் தாத்தாவுக்கு உதவுவான். அவன், தாத்தா பாட்டியோடு மகிழ்வாகப் பொங்கல் விழாவைக் கொண்டாடுவான்**

**11.முகிலன் யார் வீட்டிற்குச் சென்றான்?**

a) மாமா

b) தாத்தா

c) அக்கா

d) சித்தி

e) விடை தெரியவில்லை

விடை: b

**12.தாத்தா வீட்டிலுள்ள காளையின் பெயர் என்ன?**

a) கொற்றன்

b) முகிலன்

c) லட்சுமி

d) செவலை

e) விடை தெரியவில்லை

விடை: d

**13.முகிலன் எவ்விழாவைக் கொண்டாட தாத்தா வீட்டிற்குச் சென்றான்?**

a) பொங்கல்

b) கிறிஸ்துமஸ்

c) தீபாவளி

d) பக்ரீத்

e) விடை தெரியவில்லை

விடை: a

**14.முகிலன் தோட்டத்தில் இருந்து எதை பறித்துக் கொடுத்து தாத்தாவுக்கு உதவுவான்?**

a) பழங்கள்

b) கீரைகள்

c) காய்கறிகள்

d) பூக்கள்

e) விடை தெரியவில்லை

விடை: c

**15.முகிலனின் வழக்கமான செயல் யாது?**

a) செவலைக்கு தீவனம் வைப்பது

b) விளையாடுவது

c) கோவிலுக்கு செல்வது

d) புத்தகங்களைப் படிப்பது

e) விடை தெரியவில்லை

விடை: a

**16.சரியான சொல்லை இட்டு நிரப்பி பழமொழியை நிறைவு செய்க.**

கந்தை கசக்கிக்கட்டு; கூழ் குளித்துக் குடி.

a) கந்தையானாலும் கசக்கிக் கட்டு; கூழானாலும் குளித்துக் குடி

b) கந்தையைக் கசக்கிக் கட்டு;கூழைக் குளித்துக் குடி

c) கந்தை கசக்கிக் கட்டு; ஆனாலும் கூழ் குளித்துக் குடி

d) கூழ் ஆனாலும் குளித்துக் குடி; கந்தையைக் கசக்கிக் கட்டு

e) விடை தெரியவில்லை

விடை: a

**17.பழமொழிகள்:**

ஏழை - பணக்காரன்

வேறுபாடு அறிய உதவும் பழமொழி

a) இருப்பவனுக்கு புளியேப்பம் இல்லாதவனுக்கு பசியேப்பம்

b) ஆடிப்பட்டம் தேடி விதை.

c) புலி பசித்தாலும் புல்லைத் திண்ணாது

d) அகழியில் விழுந்த முதலைக்கு அதுவே சொர்க்கம்

e) விடை தெரியவில்லை

விடை: a

**18.சரியான சொல்லை இட்டு நிரப்பி பழமொழியை நிறைவு செய்க.**

I. யானைக்கும் __________ சறுக்கும்

II. ஆத்திரக்காரனுக்கு______________ மட்டு

a) கால், அறிவு

b) புத்தி, அழகு,

c) மனம், புத்தி

d) அடி, புத்தி

e) விடை தெரியவில்லை

விடை: d

**19.“குத்துக் கல்லுக்குக் குளிரா வெயிலா” - பழமொழிக்குரிய பொருள் தேர்க.**

I. சோம்பேறித்தனமாக இருத்தல்

II. கவலையில்லாமல் இருத்தல்

III. கவலையாக இருத்தல்

IV. ஒரே இடத்தில் இருத்தல்

a) III மட்டும்

b) IV மட்டும்

c) I மட்டும்

d) II மட்டும்

e) விடை தெரியவில்லை

விடை: d

**20.தொடரைப் பழமொழிகொண்டு நிறைவு செய்க.**

கல்லாடம் படித்தவரோடு____________________

a) விளையாடாதே

b) சொல்லாடாதே

c) போராடாதே

d) கல்லாடாதே

e) விடை தெரியவில்லை

விடை: b

**21.சரியான முறையில் அமைந்த சொலவடையைத் தேர்வு செய்க**

I. அகழியில் விழுந்த முதலைக்கு அதுவே சொர்க்கம்

II. அகழியில் விழுந்த யானைக்கு அதுவே சொர்க்கம்

III. மாசி மாசம் பிறைய கண்ட மாதிரி

IV. கார்த்திகை மாசம் பிறைய கண்ட மாதிரி

a) I மற்றும் III

b) II மற்றும் IV

c) II மற்றும் III

d) I மற்றும் IV

e) விடை தெரியவில்லை

விடை: d

**22.சரியான முறையில் அமைந்த சொலவடையைத் தேர்வு செய்க**

I. அள்ளுறவன் பக்கத்துல இருந்தாலும் கிள்ளுறவன் பக்கத்துல இருக்கக் கூடாது

II. நல்ல பாம்பு படம் எடுக்கலாம்; கரப்பான் பூச்சி படம் எடுக்கலாமா?

III. ஆடி மழை விட்டாலும் செடி மழை விடாது

IV. வெளைச்சலுக்கும் வெள்ளாட்டுக்கும் சென்மப் பகை

a) I மற்றும் III சரி

b) II மற்றும் III சரி

c) I மற்றும் IV சரி

d) II மற்றும் IV சரி

e) விடை தெரியவில்லை

விடை: c

**23.“சொப்பனத்தில் கண்ட அரிசி சோத்துக்கு ஆகுமா?”– இச்சொலவடையின் கருத்து என்ன?**

a) வாழ்வில் உயர கனவு காண வேண்டும்

b) கனவு கண்டால் வாழ்வில் வென்றுவிடலாம்

c) கற்பனை கனவு சாப்பாடு போடும்

d) கற்பனையிலே வாழ்வது வாழ்க்கைக்கு உதவாது

e) விடை தெரியவில்லை

விடை: d

**24.பழமொழியை நிறைவு செய்க.**

_____________ குத்தினாலும் பதரு அரிசி ஆகுமா?

I. ஓடியோடிக்

II. பாடிப்பாடிக்

III. பார்த்துப்பார்த்துக்

IV. ஆடியாடிக்

a) III சரி

b) I சரி

c) IV சரி

d) II சரி

e) விடை தெரியவில்லை

விடை: d

**25.‘திருவிழாவைக் காண மக்கள் திரண்டு வந்தனர்’ - இத்தொடருக்கு ஏற்ற உவமைத் தொடரைத் தேர்க.**

a) நெல்லிக்காய் மூட்டையைக் கொட்டினாற் போல

b) மடை திறந்த வெள்ளம் போல

c) கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது போல

d) விழலுக்கு இறைத்த நீர் போல

e) விடை தெரியவில்லை

விடை: b

**26.எத்தனை இணைகள் சரியாகப் பொருந்தியுள்ளன?**

I. அத்தி பூத்தது போல – மிக எளிதாக

II. தாமரை இலை நீர் போல - ஒட்டியிருத்தல்

III. பசுமரத்து ஆணி போல - எளிதில் மனதில் பதிதல்

IV. அள்ளி இறைத்தல் - அளவுக்கு மேல் செலவழித்தல்

a) ஒரு இணை

b) இரண்டு இணைகள்

c) மூன்று இணைகள்

d) மேற்கண்ட எதுவும் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: b

**27.தவறான இணை/இணைகளைத் தேர்வு செய்யவும்.**

I. காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது போல - எதிர்பாரா நிகழ்வு

II. கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது போல - தற்செயல் நிகழ்வு

a) I மட்டும்

b) II மட்டும்

c) I மற்றும் II

d) Iம் இல்லை IIம் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: c

**28.சரியான இணை/இணைகளைத் தேர்வு செய்யவும்**

I. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு - துன்பம்

II. சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும் - ஊக்கப்படுத்துதல்

a) I மட்டும்

b) II மட்டும்

c) I மற்றும் II

d) Iம் இல்லை IIம் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: b

**29.உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுத்தல் – 'உடலும் உயிரும் போல'**

a) பரந்த புகழ்

b) ஒற்றுமையின்மை

c) எதிர்பாரா நிகழ்வு

d) மனமொன்றிய துணை

e) விடை தெரியவில்லை

விடை: d

**30.சரியான இணை/இணைகளைத் தேர்வு செய்யவும்**

I. பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல - இரட்டிப்பு மகிழ்ச்சி

II. காய்ந்த மாடு கம்பங்கொல்லையில் பாய்ந்தாற் போல- வேகம்

a) I மட்டும்

b) II மட்டும்

c) I மற்றும் II

d) Iம் இல்லை IIம் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: c

**31.உவமையால் விளக்கப் பெறும் பொருத்தமான பொருளை தேர்ந்தெடுத்து சரியான இணையைத் தேர்ந்தெடு**

a) இலவுகாத்த கிளி போல - பொறுமை

b) மலரும் மணமும் போல - நறுமணம்

c) அனலிடப்பட்ட புழுவைப் போல - வாடியிருத்தல்

d) சூடுபட்ட பூனை போல - எச்சரிக்கை கொள்தல்

e) விடை தெரியவில்லை

விடை: d

**32."கண்ணினைக் காக்கும் இமைபோல”- பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

a) மறவாமல் நினைத்துப் பாதுகாப்பது

b) தன்னலமின்றி பாதுகாப்பது

c) உடனிருந்து பாதுகாப்பது

d) வேலி அமைத்துக் காப்பது

e) விடை தெரியவில்லை

விடை: c

**33.உவமைகளால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுத்தல்**

“குன்றேறி யானைப்போர் கண்டற்றால்”

என்னும் திருக்குறள் கூறும் உவமைப் பொருள்

a) போரினை வெற்றிப் பெற யானைப் படை அவசியம்

b) தன்கையில் பொருளை வைத்திருத்தல்

c) குன்றில் ஏறி யானைப் போரைக் காண்பது

d) தன் கைப்பொருள் கொண்டு ஒரு செயலைச் செய்வது

e) விடை தெரியவில்லை

விடை: d

**34.உவமைத் தொடர்கள் உணர்த்தும் பொருள்களைப் பொருத்துக**

(A) குன்றிலிட்ட விளக்குபோல - 1) நம்பிக்கை துரோகம்

(B) வேலியே பயிரை மேய்ந்தது போல - 2) உலக அறிவின்மை

(C) கொக்கொக்க கூம்பும் பருவத்து - 3) அனைவரும் அறிதல்

(D) கிணற்றுத் தவளை போல - 4) காத்திருந்து செயல்படுதல்

a) 4 1 3 2

b) 3 1 4 2

c) 3 4 2 1

d) 2 1 4 3

e) விடை தெரியவில்லை

விடை: b

**35.உவமைகளால் விளக்கப் பெறும் பொருள்களுள் – பொருந்தாத இணையினை தேர்க**

a) சிறகு ஒடிந்த பறவை போல - திறமையை வெளிக்காட்டாமல் இருத்தல்

b) கப்பல் கவிழ்ந்தாற் போல - சோகம்

c) காட்டுத்தீ போல - வேகமாகப் பரவுதல்

d) காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியதுபோல - துன்பம்

e) விடை தெரியவில்லை

விடை: a

**36.உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுக.**

‘சித்திரப் பதுமை போல’

a) பொறுமை

b) அன்பு

c) புகழ்

d) அழகு

e) விடை தெரியவில்லை

விடை: d

**37.தவறான இணை/இணைகளைத் தேர்வு செய்யவும்.**

I. ஆனை வாயில் அகப்பட்ட கரும்பு போல - இன்பம்

II. சுடச் சுடரும் பொன் போல - அனுபவத்தால் தேர்ந்தவர் ஆதல்

a) II மட்டும்

b) I மற்றும் II

c) I மட்டும்

d) Iம் இல்லை IIம் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: c

**38.சரியான இணை/இணைகளைத் தேர்வு செய்யவும்**

I. கங்கணம் கட்டுதல் - உறுதி பூணுதல்

II. தட்டிக் கழித்தல் - ஏதாவது காரணம் கூறித் தவிர்த்தல்

III. கரி பூசுதல் - அவமானம் ஏற்படுத்துதல்

a) I மட்டும்

b) II மட்டும்

c) I மற்றும் II

d) I, II மற்றும் III

e) விடை தெரியவில்லை

விடை: d

**39.தவறான இணை/இணைகளைத் தேர்வு செய்யவும்.**

I. பஞ்சாய்ப் பறத்தல் - அலைந்து திரிதல்

II. குட்டிச்சுவர் - மிகுதியாகப் பேசுதல்

a) I மட்டும்

b) II மட்டும்

c) I மற்றும் II

d) Iம் இல்லை IIம் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: b

**40.பின்வரும் மரபுத் தொடரைப் பொருளோடு பொருத்துக.**

‘கல்லில் நார் உரித்தல்’

I. ஆராய்ந்து பார்த்துச் செய்தல்

II. இயலாத செயல்

III. நீண்டகாலமாக இருப்பது

IV. விரைந்து வெளியேறுதல்

a) III மட்டும்

b) I மட்டும்

c) II மட்டும்

d) IV மட்டும்

e) விடை தெரியவில்லை

விடை: c

**41.‘கம்பி நீட்டுதல்’ எனும் உவமை கூறும் பொருள் எதுவென கண்டறிக**

a) இயலாத செயல்

b) எண்ணி செயல்படாமை

c) விரைந்து வெளியேறுதல்

d) புகழ்பெற்று விளங்குதல்

e) விடை தெரியவில்லை

விடை: c

**42.தவறான இணை/இணைகளைத் தேர்வு செய்யவும்.**

I. அவசரக்குடுக்கை - எண்ணமும் செயலும் ஒத்து வராமல் இருத்தல்

II. ஆகாயத்தாமரை - மிகைப் படுத்தி கூறுதல்

a) I மட்டும்

b) II மட்டும்

c) I மற்றும் II

d) Iம் இல்லை IIம் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: c

**43.பொருந்தாத இணையைக் கண்டறிக.**

a) ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது - படிப்பறிவில்லாத பட்டறிவு

b) எடுப்பார் கைப்பிள்ளை - தன் சிந்தனையின்றி சொல்பவர் பேச்சைக் கேட்டு நடப்பவர்

c) கம்பி நீட்டல் - சொல்லிக்கொள்ளாமல் செல்லல்

d) கரைத்துக் குடித்தல் - முழுமையாக அறிதல்

e) விடை தெரியவில்லை

விடை: a

**44.எத்தனை இணைகள் சரியாகப் பொருந்தியுள்ளன?**

I. ஆமை போல - சோம்பல்

II. உடுக்கை இழந்தவன் கை போல் - பகை

III. சூரியனைக் கண்ட பனி போல - மகிழ்ச்சி

IV. நகமும் சதையும் போல் - நட்பு

a) ஒரு இணை

b) இரண்டு இணைகள்

c) மூன்று இணைகள்

d) மேற்கண்ட எதுவும் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: a

**45.சரியான கூற்று / கூற்றுகளைத் தேர்வு செய்யவும். (உவமைத் தொடர்)**

I. போரட்டத்தில் ஏற்கனவே, நீறு பூத்த நெருப்பு போல இருந்த கோரிக்கைகள், திடீரென்று, எரியத் துவங்கின.

II. ரவி, நுனிப்புல் மேய்ந்தாற்போல படித்ததால் அவனால் தேர்வில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விரிவாகப் பதிலளிக்க இயலவில்லை.

III. அடுத்தது காட்டும் பளிங்கு போல இரு திருடர்களும் திருடிய பொருளை எங்கு மறைத்து வைப்பது என்று விவாதித்ததை காவலர் கேட்டதால் அவர்களை கைது செய்தார்.

a) I மற்றும் II

b) II மற்றும் III

c) I மற்றும் III

d) I, II மற்றும் III

e) விடை தெரியவில்லை

விடை: a

**46.பழமொழியினை நிறைவு செய்க.**

இன்று இலை அறுத்தவன் ______________

a) நாளை கலை அறுப்பான்

b) நாளை குலை அறுப்பான்

c) நாளை களை அறுப்பான்

d) நாளை களை எடுப்பான்

e) விடை தெரியவில்லை

விடை: b

**47.வீண் பெருமை என்பதை உணர்த்தும் பழமொழி எது?**

a) ஆழ அமுக்கினாலும் நாழி முகவாகாது

b) உயர உயர பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?

c) எட்டி பழுத்தென்ன? ஈயாதார் வாழ்ந்தென்ன?

d) எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு

e) விடை தெரியவில்லை

விடை: d

**48.தவறான இணை/இணைகளைத் தேர்வு செய்யவும்.**

I. ஆலையில்லா ஊருக்கு இலுப்பை பூ சர்க்கரை - விடயத்தெளிவின்றி எதையும் குறை கூறாதே

II. ஊருக்குத்தான் உபதேசம் உனக்கல்ல - சொல்வேறு செயல்வேறு படல்

a) I மட்டும்

b) II மட்டும்

c) I மற்றும் II

d) Iம் இல்லை IIம் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: a

**49.அடிவயிற்றில் நெருப்பைக் கட்டினாற்போல - உவமை கூறும் பொருள் எதுவென கண்டறிக.**

a) துன்பம்

b) பயம்

c) வேதனை

d) வருத்தம்

e) விடை தெரியவில்லை

விடை: b

**50.பின்வருவனவற்றுள் ஏமாற்றித் தப்புதல் எனும் பொருளை உணர்த்தும் மரபுத் தொடர் எது?**

I. கடுக்காய் கொடுத்தல்

II. அள்ளி விடுதல்

III. முதலைக்கண்ணீர்

a) I மட்டும்

b) I மற்றும் II

c) II மற்றும் III

d) I, II மற்றும் III

e) விடை தெரியவில்லை

விடை: a

**51.பின்வரும் கூற்றுகளில் சரியில்லாததைத் தேர்வு செய்க.**

I. 'ஆற்றுணா வேண்டுவ(து) இல்' - இப்பழமொழியில் உள்ள 'ஆற்றுணா' என்பதன் பொருள் - வழிநடை உணவு

II. "அஷ்டபிரபந்தம் கற்றவன் அரைப் பண்டிதன்" என்னும் பழமொழியில் 'அஷ்டபிரபந்தம்' என்பது பதினெட்டு நூல்களைக் குறிக்கிறது.

a) I மட்டும்

b) II மட்டும்

c) இரண்டும் தவறு

d) இரண்டும் சரி

e) விடை தெரியவில்லை

விடை: b

**52. தவறான இணை/இணைகளைத் தேர்வு செய்யவும்.**

I. அறக்க பறக்க எனும் மரபுத் தொடர் தரும் பொருளுக்கு எதிர்ப் பொருளில் அமைந்த மரபுத் தொடர் - அடித்துப் பிடித்து

II. கந்தல் கூளம் எனும் மரபுத் தொடருக்கு இணையாகப் பொருள்தரும் மரபுத் தொடர் - கணக்கு வழக்கில்லாமல்

a) I மட்டும்

b) II மட்டும்

c) I மற்றும் II

d) Iம் இல்லை IIம் இல்லை

e) விடை தெரியவில்லை

விடை: a